# 2

# தேசிய உற்பத்தி, செலவினம் மற்றும் வருமானம்

## 2.1 பொதுநோக்கு

*இலங்கையின் பொருளாதாரம் உள்நாடு மற்றும் வெளிநாட்டு துறைகள் இரண்டிலுமிருந்து தோன்றிய சவால்களுக்கு மத்தியிலும் 2016இன் 4.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.1 சதவீதம் கொண்ட மிதமான வேகமொன்றில் வளர்ச்சி கண்டது. குறிப்பாக, முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகள் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கிய போதும் கூட ஆண்டின் இறுதிக்காலாண்டில் மீண்டும் உத்வேகமொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கு 2017/2018 பெரும்போக பருவகாலத்தில் நெல் உற்பத்தியில் காணப்பட்ட மீட்சியிலிருந்து கிடைத்த நன்மைகளே காரணமாகும். அதேவேளை, வேளாண்மைச் செயலாற்றம் குறைவடைந்தமையிலிருந்து தோன்றிய கசிவுத் தாக்கங்களின் பின்னணியில் கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் மிதமான தன்மை அவதானிக்கப்பட்டமைக்கிடையிலும், முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவான திட்டம் (GSP+) மீண்டும் கிடைக்கப்பெற்றமை தயாரிப்பு நடவடிக்கைகளை உத்வேகப்படுத்தி கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தூண்டுதலை வழங்கின. நிதியியல் பணிகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் காணப்பட்ட வளர்ச்சியின் பெரியளவிலான உதவியினால் பணிகள் நடவடிக்கைகள் விரிவடைந்தன. மேலும், அரச செலவினங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கை என்பன 2017இல் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தின. மேலும், மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார அளவீடுகளும் இவ்வாண்டுப்பகுதியில் வியாபார நிலைமைகள் குறைவடைந்தமையினை எடுத்துக்காட்டின. அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலீட்டுச் செலவினங்கள் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தவிடத்து முன்னைய ஆண்டில் ஓரளவு மெதுவான போக்கினைக் கொண்ட நுகர்வுச் செலவினம் 2017இல் விரைவடைந்தது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இலங்கையின் சில முக்கிய ஏற்றுமதி நாடுகளின் உறுதியான மீட்சியின் மூலம் கிடைத்த நன்மைகளின் காரணமாக ஏற்றுமதிகளின் வளர்ச்சி உயர்ந்த வேகத்தில் காணப்பட்ட போதும் கூட இறக்குமதியில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பு தேறிய வெளிநாட்டுக் கேள்வியினை மேலும் மோசமாக்கியது. அதேவேளை, உள்நாட்டுச் சேமிப்புக்கள் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்த வேளையில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்து கிடைத்த தேறிய முதலாந்தர வருமானம் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் சுருக்கமடைந்து காணப்பட்டது. மேலும், உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் மெதுவடைந்து மத்திய கிழக்கு உட்பட சில பிராந்தியங்களில் காணப்பட்ட புவிசார் அரசியல் பதட்டம் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பனவற்றின் பகுதியளவிலான தாக்கம் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட மெதுவடைதலை பிரதிபலித்திருந்தது. இவ் அபிருவித்திகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் இவ்வாண்டுப்பகுதியில் தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி மிதமடைந்ததுடன் முதலீட்டில் காணப்பட்ட ஒப்பீட்டளவிலான உயர்ந்த வளர்ச்சியின் காரணமாக மூலவள இடைவெளி விரிவடைந்தது.*

## 2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலைக் குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய வருமானம்


2017ஆம் ஆண்டுப்பகுதியில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டவாறு நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி மிதமான

**வளர்ச்சியொன்றைப் பதிவு செய்த போதும் நடைமுறைச் சந்தை விலைகளில்**[1] **மொ.உ.உற்பத்தியில் உயர்ந்த வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.** நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2016இன் ரூ.11,906.8 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 81.8 பில்லியன்) காணப்பட்ட வேளையில் 2017இல் ரூ.13,289.5 பில்லியன் (ஐ.அ.டொலர் 87.2 பில்லியன்) என மதிப்பிடப்பட்டது. இதன்படி, நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2016இன் 8.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது, மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கியின் சதவீத மாற்றத்தினால் பிரதிபலிக்கப்பட்டது. இது, 2016இன் 4.1 சதவீதத்திலிருந்து 2017இல் 8.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை,

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மொ.உ.உற்பத்தியினை உற்பத்தி, செலவின மற்றும் வருமான முறைகளில் மதிப்பீடு செய்கின்றது.

வரைபடம் 2.1

மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

நிலையான சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2016இன் ரூ.9,034.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ.9,315.5 பில்லியனில் மதிப்பிடப்பட்டது. இதன்படி, நிலையான சந்தை

அட்டவணை 2.1

நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(இ)

| பொருளாதார நடவடிக்கை | மாற்ற வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | - 3.8 | - 0.8 | - 6.6 | - 1.8 | 7.1 | 6.9 |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | - 12.2 | - 10.3 | - 0.5 | - 0.5 | 0.1 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | - 31.3 | - 4.0 | - 6.2 | - 0.8 | 0.6 | 0.5 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 3.5 | - 16.2 | 0.5 | - 3.4 | 0.6 | 0.5 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | 15.2 | - 14.1 | 0.1 | - 0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | - 3.2 | 7.4 | - 0.4 | 1.2 | 0.5 | 0.5 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | - 0.8 | - 19.5 | - 0.1 | - 4.6 | 0.7 | 0.6 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | - 11.2 | 4.8 | - 2.1 | 1.1 | 0.7 | 0.7 |
| ஏனைய குடிப்பானப் பயிர்களின் வளர்ச்சி (கொப்பி, கொக்கோ போன்றவை) | 7.5 | - 6.4 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 2.3 | 0.5 | 0.4 | 0.1 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | - 10.7 | 4.9 | - 0.7 | 0.4 | 0.3 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | - 2.1 | 1.5 | - 0.1 | 0.1 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 7.3 | 3.9 | 1.0 | 0.8 | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | - 2.0 | 0.4 | - 0.1 | 0.0 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 8.9 | 22.0 | 1.1 | 4.1 | 0.6 | 0.7 |
| மீன்பிடித்தல் | 1.6 | - 0.5 | 0.5 | - 0.2 | 1.3 | 1.3 |
| **கைத்தொழில்** | 5.8 | 3.9 | 34.0 | 33.1 | 26.6 | 26.8 |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 14.4 | 5.9 | 7.1 | 4.6 | 2.4 | 2.5 |
| தயாரிப்பு | 3.2 | 3.9 | 11.1 | 19.6 | 15.5 | 15.7 |
| மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 8.4 | 2.7 | 1.8 | 0.9 | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 7.9 | 4.6 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | 17.8 | 7.9 | 1.0 | 0.7 | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | 8.3 | 3.1 | 12.7 | 7.0 | 7.1 | 7.1 |
| **பணிகள்** | 4.7 | 3.2 | 59.3 | 58.8 | 56.7 | 56.8 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 4.0 | 2.5 | 20.8 | 18.8 | 23.1 | 22.9 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 8.0 | 10.2 | 1.0 | 1.9 | 0.6 | 0.6 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 9.2 | 7.0 | 25.5 | 29.0 | 12.9 | 13.4 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 0.9 | 3.3 | 2.5 | 12.4 | 11.5 | 11.5 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 4.9 | - 1.2 | 9.5 | - 3.3 | 8.7 | 8.3 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | 4.3 | 3.1 | 86.8 | 90.1 | 90.4 | 90.4 |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 6.3 | 3.2 | 13.2 | 9.9 | 9.6 | 9.6 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | 4.5 | 3.1 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | - 11.4 | - 5.3 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | 4.3 | 3.1 | | | | |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

விலைகளில் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி 2016இன் வளர்ச்சியான 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.1 சதவீதத்திற்கு மிதமடைந்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2016இன் ரூ.561,560 உடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ.619,729 என மதிப்பிடப்பட்டு 2016இன் 7.5 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** இது நடுவாண்டு குடித்தொகை வளர்ச்சி வீதம் ஓரளவிற்கு உறுதியாகக் காணப்பட்டமையினால் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி வளர்ச்சியடைந்தமையின் மூலம் தூண்டப்பட்டது. மேலும், தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ஐ.அ.டொலரில் 2016இன் ஐ.அ.டொலர் 3,857 உடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 4,065 இற்கு அதிகரித்து 2016இன் 0.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சி வீதமொன்றைப் பதிவுசெய்தது. இதற்கு ஐ.அ.டொலரிற்கெதிராக உள்நாட்டு நாணயம் மிதமாக தேய்வடைந்தமைக்கு மத்தியிலும் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி உயர்ந்த வளர்ச்சியைக் கொண்டிருந்தமையே முக்கிய காரணமாகும்.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்வதன் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேசிய வருமானம், நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.12,933.2 பில்லியனுக்கு அதிகரித்து 2016இன் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.6 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது.** மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சி நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2017இல் தேறிய முதன்மை வருமானத்தின் எதிர்க்கணிய வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவானதன்மை என்பனவற்றின் இணைந்த விளைவாகும். இது, 2016இன் 16.9 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 10.9 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது.


## 2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு

**நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த பெறுமதிகூட்டப்பட்ட மதிப்பீடுகளின்படி, உற்பத்தி அணுகுமுறைகளின் கீழ், பாரிய பங்களிப்பு வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களிலிருந்து கிடைத்தது.** வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளிற்குப் பணிபுரியும் இலாபமீட்டாத துறை நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 9.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2017இன் பொருளாதாரத்தின் மொத்த பெறுமதிகூட்டலில் 50.3 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, நிதியல்லாக் கூட்டுத்தாபனத் துறை 2016இன் 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து பொருளாதாரத்தில் இரண்டாவது மிகப் பெரும் துறையாக விளங்கி 2017இன் மொத்த பெறுமதிகூட்டலில் 34.9 சதவீதப் பங்கிற்கு வகைகூறியது. மேலும், 2017இல் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் முறையே 9.6 சதவீதத்திற்கும் 5.2 சதவீதத்திற்கும் வகைகூறும் மத்திய அரசாங்கம் மற்றும் நிதியியல் கூட்டுத்தாபனங்கள் துறை 2016இன் வளர்ச்சி வீதமான 0.2 சதவீதம் மற்றும் 17.1 சதவீதம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 6.1 சதவீதத்தினாலும் 21.9 சதவீதத்தினாலும் வளர்ச்சி கண்டன.

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலிற்கான முக்கிய பங்களிப்பு வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களிலிருந்து கிடைத்த வேளையில் கைத்தொழில் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டல், நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறையின் பங்களிப்பிலிருந்து முக்கியமாகக் கிடைத்தது.** இதன்படி, 2017இல் வேளாண்மை நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 80.1 சதவீதம் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத

வரைபடம் 2.2

2017 இல் நடைமுறைச்சந்தை விலைகளில் நிறுவன துறைகளின் படி மொத்த பெறுமதி கூட்டல்களின் பங்குச் சதவீதம் (அ)




(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 2.2

நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறையின்படி மொத்த பெறுமதி கூட்டல்கள் (அ)(இ)

| விடயம் | மொத்த பெறுமதி சேர்ப்பின் சதவீதமாக (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | | | | 2017 | | | |
| | நிதியல்லா சட்டுத்தாபனம் | நிதிக் கூட்டுத்தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | நிதியல்லா சட்டுத்தாபனம் | நிதிக் கூட்டுத்தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் |
| வேளாண்மை | 18.8 | - | - | 81.2 | 19.9 | - | - | 80.1 |
| கைத்தொழில் | 61.2 | - | 2.2 | 36.6 | 61.7 | - | 1.5 | 36.7 |
| பணிகள் | 23.8 | 7.6 | 15.1 | 53.6 | 23.8 | 8.4 | 14.9 | 52.9 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்ப்பு | 34.5 | 4.7 | 10.0 | 50.8 | 34.9 | 5.2 | 9.6 | 50.3 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்



நிறுவனங்களிலிருந்து உருவாக்கப்பட்டு நடைமுறைச் சந்தை விலைகளில் 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்ததன் மூலம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.0 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்தது. அதேவேளை, நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை கைத்தொழில் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 61.7 சதவீதத்திற்கு வகைகூறி 2017ஆம் ஆண்டுப்பகுதியில் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 10.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.3 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. அதேநேரம், 2017இல் பணிகள் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டல் 52.9 சதவீதம் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டு நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

## 2.4 வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**மோசமான வானிலை நிலைமைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2017இல் வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் 2016இல் அவதானிக்கப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** குறிப்பாக, ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளினால் பாதகமான விதத்தில் பாதிக்கப்பட்ட வேளாண்மைச் செயலாற்றம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் மீட்சியொன்றினைக் காட்டியது. எண்ணெய்ப்பசைத்தன்மை கொண்ட பழவர்க்கங்கள் (தேங்காய், செவ்விழநீர், கமுகு, காய்கறிகள் மற்றும் அரிசி) என்பனவற்றின் வளர்ச்சியில் அவதானிக்கப்பட்ட பின்னடைவுகள் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சியைப் பாதித்தன. மேலும், தானியங்கள், மீன்பிடி, கரும்பு மற்றும் ஏனைய குடிபானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ போன்றவை) போன்றவற்றின் வளர்ச்சியும் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தன. எனினும், இவ்வாண்டுப்பகுதியில் தேயிலை பயிர்ச்செய்கை ஆண்டின் முன்னைய முதல் மூன்று ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிலிருந்து இவ்வாண்டுப்பகுதியில் உத்வேகம் பெற்றது. மேலும், காடாக்கலும் மற்றும் குற்றிகளும், பழவர்க்கச் செய்கை, விலங்கு உற்பத்தி இறப்பர் பயிர்ச்செய்கை, வாசனைத்திரவியங்களின் பயிர்ச்செய்கை, நீண்ட காலப் பயிர்களின் வளர்ப்பு மற்றும் செடி இனப்பெருக்கம் மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன.

### வேளணாண்மை உற்பத்திச் சுட்டெண்

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டினை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2016இன் 0.3 சதவீதம் கொண்ட குறைப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் 10.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** இச்சுட்டெண்ணிற்குள் நெல், தேயிலை மற்றும் ஏனைய பயிர்களின் (பழவர்க்கங்கள், காய்கறிகள் மற்றும் களப்பயிர்கள்) துணைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்த

அட்டவணை 2.3

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)

| விடயம் | 2016 (அ) | 2017 (ஆ | வளர்ச்சி வீதம் (% ) | |
|---|---|---|---|---|
| | | | 2015/16 (அ) | 2016/17 (ஆ) |
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 127.2 | 113.3 | -0.3 | -10.9 |
| 1 வேளாண்மை | 120.7 | 103.9 | -1.0 | -13.9 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 116.0 | 96.2 | -2.3 | -17.0 |
| நெல் | 118.2 | 63.7 | -8.3 | -46.1 |
| தேயிலை | 93.9 | 98.8 | -11.0 | 5.2 |
| இறப்பர் | 59.0 | 61.9 | -10.7 | 5.1 |
| தெங்கு | 106.3 | 86.5 | -1.5 | -18.7 |
| ஏனைய பயிர்கள் | 150.2 | 134.9 | 6.7 | -10.2 |
| மரக்கறிகள் | 141.2 | 123.4 | 3.7 | -12.6 |
| பழங்கள் | 145.8 | 164.0 | - 4.6 | 12.5 |
| ஏனைய களப்பயிர்கள் | 138.5 | 117.9 | - 4.2 | -14.9 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 158.2 | 164.8 | 7.5 | 4.1 |
| 2 மீன்பிடி | 159.1 | 159.2 | 2.1 | 0.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வேளையில் தேயிலை, இறப்பர் துணைச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் வளர்ச்சியடைந்த வேளையில் மீன்பிடி நடவடிக்கைகளில் சிறிதளவு வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டது.

### நெல்

**2016இலிருந்து தொடர்ந்து காணப்பட்ட மோசமான வானிலை நிலைமைகள் 2017இல் நெல் உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்தன.** இவ்வாண்டுப்பகுதியில் நெல் உற்பத்தி 2.4 மில்லியன் மெ.தொன்களுக்கு 46.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து கடந்த தசாப்த காலத்திலேயே மிகக் குறைந்த நெல் உற்பத்தியைப் பதிவுசெய்து மோசமான வானிலை நிலைமையின் தாக்கத்தை வெளிக்காட்டியது. 2016/17 பெரும்போகக் காலத்திலும் 2017 சிறுபோக காலத்திலும் நெல் உற்பத்தி முறையே 1.47 மில்லியன் மெ.தொன்களுக்கும் 0.9 மில்லியன் மெ.தொன்களுக்கும் முறையே 49.2 சதவீதத்தினாலும் 40.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. வளிமண்டலவியல் திணைக்களம் 2017இல் அனைத்து மாவட்டங்களுக்கும் வழமையான மழைவீழ்ச்சியை எறிவுசெய்த போதும் வேளாண்மை நோக்கங்களுக்காக நீரைச் சேமிப்பதற்கு தென்மேற்குப் பரவக்காற்று போதுமான மழைவீழ்ச்சியைக் கொண்டு வரவில்லை. மேலும், ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் வரண்ட வலயக் குளங்களை வழமையாக நிரப்புகின்ற வடகிழக்கு பருவக் காற்றும் பொய்த்துப் போனமையினால் இது 2017இல் நெல் வளர்ப்பிற்கான நீர் மட்டங்கள் குறைவடைய வழிவகுத்தது. 2016 இலிருந்து தொடர்ந்து காணப்பட்ட வரண்ட நிலைமைகள் நெற் செய்கை பருவ காலங்கள் இரண்டிலும் நெற் செய்கைக்காக விதைக்கப்பட்ட நிலத்தின் பரப்பு வீழ்ச்சியடைய வழிவகுத்தது. 2016/2017 பெரும்போகக் காலத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 542,556 எக்டேயர்களாக விளங்கி முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 28.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. இதேபோன்று 2107 சிறுபோக காலத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய சிறுபோகத்துடன் ஒப்படுகையில் 249,123 எக்டேயர்களுக்கு 35.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, 2017இற்கான விதைக்கப்பட்ட மொத்த நிலப்பு 791,679 எக்டேயர்களுக்கு 29.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, முக்கிய நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட போதுமானதற்ற நீர்மட்டங்கள் மற்றும் முக்கிய நெல் உற்பத்தியாகும் பிரதேசங்களில் காணப்பட்ட வரட்சி மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பயிர்ச் சேதங்கள் என்பன காரணமாக அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 2017இல் 544,582 எக்டேயர்களுக்கு 45.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2016/17 பெரும்போக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 382,856 எக்டேயர்களுக்கு 48.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் 2017இன் சிறுபோக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டின் சிறுபோக காலத்துடன் ஒப்பிடுகையில் 236,479 எக்டேயர்களுக்கு 37.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெரும்போக மற்றும் சிறுபோக காலம் இரண்டிலும் காணப்பட்ட தாழ்ந்த நெல் உற்பத்தியின் விளைவாக நெல் விளைச்சல் 2017இல் எக்டேயரொன்றிற்கு 4,297 கி.கிறாம்களுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2016/17 பெரும்போக காலத்தில் நெல் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி எக்டேயரொன்றிற்கு 4,301 கி.கிறாம்களுக்கு 1.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்த வேளையில் 2017 சிறுபோக காலத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி எக்டேயரொன்றிற்கு 4,291 கி.கிறாம்களுக்கு 2.9 சதவீதமாகக் காணப்பட்டது.

2

அட்டவணை 2.4
நெல் துறை புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2016 (அ) | | | 2017 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 756 | 385 | 1,114 | 543 | 249 | 792 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 743 | 380 | 1,123 | 383 | 236 | 619 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 667 | 344 | 1,011 | 343 | 212 | 555 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 2,903 | 1,517 | 4,420 | 1,474 | 909 | 2,383 |
| | '000 புசல்கள் | 139,114 | 72,722 | 211,836 | 70,626 | 43,575 | 114,201 |
| சராசரி விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர்கள் | 4,349 | 4,417 | 4,372 | 4,301 | 4,291 | 4,297 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில் | 3,701 | 2,683 | 6,384 | 3,232 | 2,073 | 5,305 |
| அரிசி இறக்குமதிகள் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி | வி.கி | 30 | வி.கி | வி.கி | 748 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசிற்கு சமனான நெல் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி | வி.கி | 43 | வி.கி | வி.கி | 1,069 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக மற்றும் சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதேவேளை மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணிப்பிடப்படுகின்றது.
(ஈ) ஆண்டுக்கான பெறுமதி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**2016/17 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகம் ஆகிய இரண்டினதும் வருடாந்த நெல் உற்பத்தி 1.7 மில்லியன் மெ.தொன் அரிசிக்குச் சமமானதாகக் காணப்பட்டு உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 8 மாதங்களுக்கு போதுமானதாக இருக்குமென மதிப்பிடப்பட்டது.** ஏறத்தாழ 800,000 மெ.தொன்களாக இருக்குமென மதிப்பிடப்பட்ட பற்றாக்குறையானது 2017 ஆரம்பத்திலிருந்து இறக்குமதியினூடாக ஈடுசெய்யப்பட்டது. அரசாங்கத்தின் வாழ்க்கைச் செலவுக் குழுவின் விதந்துரைப்புக்களின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அரிசியை இறக்குமதி செய்ய ஒழுங்குகளை மேற்கொண்ட வேளையில் அரிசியை நேரடியாக இறக்குமதி செய்வதற்குத் தனியார் துறையும் அனுமதிக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவுக் குழுவின் நோக்கம் யாதெனில் குறைந்த விலையில் நுகர்வோருக்கு உதவியளிக்கும் அதேவேளையில் சந்தைக்கு தடங்கலற்ற அரிசி நிரம்பலை உறுதிப்படுத்துவதாக இருந்தது. இதன்படி, கைத்தொழில் வர்த்தக அமைச்சு சம்பா, நாடு மற்றும் வெள்ளைப் பச்சை அரிசி என்பனவற்றை இந்தியா, பாகிஸ்தான், மியன்மார், கம்போடியா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது. இதன் விளைவாக, இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை 747,800 மெ.தொன் அரிசியை இறக்குமதி செய்திருக்கிறது. 2016ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 29,524 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் இதன் மொத்தச் செலவு ஐ.அ.டொலர் 300.9 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், சந்தையில் விலை அழுத்தங்களைக் குறைக்கும் நோக்குடன் நெற் சந்தைப்படுத்தும் சபையில் கிடைக்கத்தக்கதாக இருந்த நெல் இருப்பினை சரியான நேரத்திரல் விடுவிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலை வழங்கியது. இதன்படி, லங்கா சதோச வலையமைப்பு 2017ஆம் ஆண்டுப்பகுதியில் நெற் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்லில் இருந்து குற்றப்பட்ட அரிசியை விற்பனை செய்தது.

**மோசமான வானிலை நிலைமை காரணமாக அனைத்து முக்கிய நெல் உற்பத்தி செய்யும் பிரதேசங்களிலிருந்தான தாழ்ந்த உற்பத்தியின் விளைவாக சந்தைக்குள் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல்களே கிடைத்தமையின் காரணமாக திறந்த சந்தை நெல் விலைகள் ஒப்பீட்டு ரீதியில் உயர்வானவையாகக் காணப்பட்டன.** 2017ஆம் ஆண்டுப்பகுதியில் சம்பா நெல்லின் சராசரி விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.50.48 ஆகக் காணப்பட்டது. இது, 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 29.4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். அதேவேளை, நாட்டு நெல்லின் சராசரி விலையும் 2017இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.49.57 இற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 41.5 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. நெல் நிரம்பலில் காணப்பட்ட பற்றாக்குறை அரிசியின் சில்லறை விலைகளில் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. இது, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசிக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலையினை அறிமுகப்படுத்துவது அரிசி இறக்குமதிகளினூடாக நிரம்பலை அதிகரிப்பது உட்பட அரிசியின் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளை எடுப்பதற்கு அரசாங்கத்தைத் தூண்டியது. சராசரியாக 2017இல் சம்பாவின் சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.98.71 ஆக அமைந்து 2016 உடன் ஒப்பிடுகையில் 6.4 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த வேளையில் 2017இல் நாட்டரிசியின் சராசரி சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.90.97 ஆகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பதாகக் காணப்பட்டது.

வரைபடம் 2.3
அரிசி: நிரம்பல் மற்றும் கோள்வி




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**விலை உயர்வினைத் தடுக்கும் நோக்குடன் குறிப்பிட்ட வகை அரிசிக்கு உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை நடைமுறைப்படுத்தியமைக்குப் புறம்பாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கான வரிகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தது.** 2016 நவெம்பரிலிருந்து நடைமுறையிலிருந்த ஏற்கனவேயுள்ள வரிகளை நீக்கியதன் மூலம் வரிக் குறைப்புக்கள் நடைமுறைப்பட்டதுடன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.15.00 கொண்ட சிறப்புப் பண்டத் தீர்வையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 2017 சனவரி 27 இலிருந்த நடைமுறைக்குவரும் விதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையினை அரசாங்கம் ரூ.5 இற்கு மேலும் குறைத்தது. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீது விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை 2017 யூன் 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கி.கிறாமொன்றிற்கு 25 சதத்திற்கு மேலும் குறைக்குப்பட்டதுடன் வரியின் இக்குறைப்பு 2018 ஏப்பிறல் 30ஆம் நாள் வரை நடைமுறையிலிருக்கும். மேலும், உயர்ந்த இறக்குமதிகளின் மத்தியிலும் அனைத்து அரிசி வகைகளுக்குமான உயர்வடைந்துவரும் விலைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் 2017 பெப்புருவரி 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உள்நாடு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகளுக்காக உயர்ந்தபட்ச சில்லறை விலையொன்றினை விதித்தது. இது பின்னர் 2017 ஓகத்து 16ஆம் நாளன்று நீக்கப்பட்டதெனினும் 2017 திசெம்பர் 26ஆம் நாளன்று நாட்டரிசிக்கு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

2

### தேயிலை

**தேயிலை உற்பத்தி கடந்த நான்கு ஆண்டுகளாகக் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக 2017இல் சாதகமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** இதன்படி, 5.2 சதவீத வளர்ச்சியுடன் உற்பத்தி மீட்சியடைந்து 2016இன் 292.6 மில்லியன் கி.கிறாம்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் 307.7 மில்லியன் கி.கிறாம்கள் கொண்ட உற்பத்தியொன்றினைத் தோற்றுவித்தது. 2015 இலிருந்து முக்கியமாக தேயிலை வளரும் பிரதேசங்களில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகளிலிருந்து தோன்றிய பயிர் இழப்புக்கள், கிளைபோசற் போன்ற தெரிவுசெய்யப்பட்ட களை நாசினிகளின் பிரயோகங்கள் கட்டுப்படுத்தப்பட்டமை, தொழிலாளர் தடைகள் உயர்ந்த உற்பத்திச் செலவிற்கு வழிவகுத்தமை என்பனவற்றிற்கும் மத்தியிலும் அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட வீழ்ச்சிக்குப் பின்னர் தேயிலை உற்பத்திப் போக்கில் இம்மாற்றம் பதிவுசெய்யப்பட்டது. எனினும், பெரும்பாலான தொழிற்சாலைகள் அதிகரித்த இயலளவுடன் தொழிற்பட்டு வருகின்றமை, அநேக தேயிலை பயிரிடும் மாவட்டங்களில் குறிப்பாக தேயிலை விரைந்து வளருவதற்கு உகந்த ஆண்டின் பின்னரைப்பகுதியில் காணப்பட்ட சாதகமான வேளாண் சூழல் நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக தேயிலை உற்பத்தி மீளெழுச்சியுற்றது. மொத்தத் தேயிலை உற்பத்தியில் 64.3 சதவீதம் கொண்ட பெரும்பங்கு தாழ்நிலத் தேயிலையிலிருந்த கிடைத்ததுடன் இது 2017இல் 197.4 மில்லியன் கி.கிறாம்களுக்கு 7.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்தத் தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கு வகைகூறும் உயர்நிலத் தேயிலை 64.6 மில்லியன் கி.கிறாம்களாக விளங்கி 0.3 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2017இல் நடுத்தர உயரத் தேயிலையின் உற்பத்தி 45.7 கி.கிறாம்களாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது. அதேவேளை, தேயிலை சிறுஉடமையாளர் துறை 2017இன் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 75.4 சதவீதத்திற்குப் பங்களித்தது.

**2016இன் இறுதிக் காலாண்டிற்குப் பின்னர் கொழும்பு தேயிலை ஏலங்களில் சராசரி விலைகள் முக்கிய இறக்குமதியாளர்களிடமிருந்து தோன்றிய அதிகரித்த கேள்வியின் காரணமாக தொடர்ச்சியான மேல் நோக்கிய போக்கினைப் பதிவுசெய்தன.** 2017ஆம் ஆண்டிற்கான கொழும்பு தேயிலை ஏலங்களில் சராசரி விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கி.கிறாமொன்றிற்கு ரூ.620.44 இற்கு 31.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. உயர்ந்த அதிகரிப்பு உயர்நிலத் தேயிலையிலும் (35.6 சதவீதம்) அதைத் தொடர்ந்து நடுத்தர உயரத் தேயிலையிலும் (32.2 சதவீதம்) மற்றும் தாழ்நிலத் தேயிலையிலும் (30.4 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை இலங்கை ரூபா நியதிகளில் 2016இல் பதிவுசெய்யப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.639.88 இலிருந்து 2017ஆம் ஆண்டுப்பகுதியில் கி.கிறாமொன்றிற்கு ரூ.807.44 இற்கு 26.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த கேள்வியும் உள்நாட்டு நாணயத்தின் தேய்வும் காரணங்களாக அமைந்தன. கொழும்பு தேயிலை ஏலங்களுக்கு முன்வைக்கப்பட்ட தேயிலையின் அளவு 2017இல் 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் ஏற்றுமதி வருவாய்கள் 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 20.5 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017இல் பச்சைத் தேயிலைக்கு சிறுஉடமையாளர்களினால் பெறப்பட்ட சராசரி விலை 2016இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.68.53 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.90.69 இற்கு அதிகரித்தது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட உறுதியான அதிகரிப்பு முக்கிய தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் வருமான மட்டங்களின் மீது சாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தமையானது இலங்கைத் தேயிலைக்கான உயர்ந்த கேள்வியைத் தோற்றுவித்தது. துருக்கி "சிலோன் தேயிலை" இன் முன்னணி இறக்குமதியாளர் என்ற அதன் நிலையைத் தொடர்ந்தும் பேணியது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட இவ்வதிகரித்துச் செல்லும் போக்கு உள்நாட்டுத் தேயிலை உற்பத்தியாளர்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பர் என்பதனை எதிர்பார்க்கச் செய்கிறது. எனினும், உலகின் தேயிலை உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் எக்டேயரொன்றிற்கான விளைச்சல் தாழ்வாக இருப்பது புதிய பயிரிடல் மற்றும் மீளப்பயிரிடல் என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது.

### இறப்பர்

**இறப்பர் உற்பத்தி 2016இன் பதிவுசெய்யப்பட்ட 79.1 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 2017இல் 83.1 மில்லியன் கி.கிறாம்களுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** பாரம்பரியமாக இறப்பர் வளரும் பிரதேசங்களில் குறிப்பாக, ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய கடுமையான வெள்ள நிலைமைகளைத் தோற்றுவித்த சாதகமற்ற வானிலை நிலைமைகளுக்கு மத்தியிலும் இயற்கை இறப்பர் உற்பத்தியில் இவ்வதிகரிப்பு எய்தப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட இறப்பரின் முக்கிய வகைகளிடையே மொத்த இறப்பர் உற்பத்தியின் பெரும் கூறாக விளங்கும் தட்டை இறப்பர் உற்பத்தி 41.5 மில்லியன் மில்லியன் கி.கிறாம்களுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 2017இல் கிறேப் இறப்பர் உற்பத்தி 23.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து 11.5 மில்லியன் கி.கிறாம்களாக விளங்கியது. அதேவேளை, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் குறித்துரைக்கப்படாத வகை இறப்பரின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30.1 மில்லியன் கி.கிறாம்களுக்கு 23.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 2017இல்

2

எக்டேயரொன்றிற்கான இறப்பரின் சராசரி விளைச்சல் 809 கி.கிறாம்களாக விளங்கி 2016இல் பதிவுசெய்யப்பட்ட சராசரி விளைச்சலிலிருந்து 1.1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. இறப்பரின் தொடர்ச்சியான குறைந்த விளைச்சலுக்கு பாலெடுக்கும் நாட்களின் எண்ணிக்கையில் சிறு உடைமையாளர் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்தவிடத்து மோசமான வானிலை நிலைமைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் பாலெடுக்கும் நடவடிக்கைகள் குறைவடைந்து நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தாள்களின் முக்கிய உற்பத்தியை காட்டியது. இருப்பினும் கூட, இறப்பர் உற்பத்திகளின் செலவு கடந்த ஆண்டுகளில் அதிகரித்ததுடன் 2017இல் இது கி.கிறாமொன்றிற்கு 2016இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.180.00 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.195.00 இற்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் இறப்பர் உற்பத்தியை சிறுஉடமையாளர் துறையினருக்கு கவர்ச்சிகரமற்றதாக்கியது. 2017இல் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கான குறிக்கப்பட்ட குறைந்த விலைகளின் முக்கிய காரணமாக கைத்தொழில்கள் தமது பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் தங்கியிருந்தமையினால் உள்நாட்டு இறப்பர் நுகர்வு 129 மில்லியன் கி.கிறாம்களுக்கு 9.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவிடத்து 2017இல் இயற்கை இறப்பர் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.2 மில்லியன் கி.கிறாம்களுக்கு 6.6 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017 இறுதியில் உலகளாவிய இறப்பர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் உள்நாட்டுச் சந்தையும் விலைகளில் அதிகரித்துச்செல்லும் போக்கொன்றைக் காட்டியது. குறிப்பாக, இயற்கை இறப்பருக்கான சாதகமான உலகளாவிய கேள்வி, லேட்டக்ஸ் கிறேப் மற்றும் ஆர்எஸ்எஸ்-1 என்பனவற்றின் உள்நாட்டு விலைகளை மேம்படுத்தின. ஆர்எஸ்எஸ்-1 இன் சராசரி விலை 40.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்து கி.கிறாமொன்றிற்கு ரூ.336.72 இனைப் பதிவுசெய்த வேளையில் லேட்டக்ஸ் கீறேப்பின் சராசரி விலையும் 34.1 சதவீத அதிகரிப்பினைக் காட்டி 2017ஆம்ஆண்டுப்பகுதியில் கொழும்பு இறப்பர் ஏலங்களில் கி.கிறாமொன்றிற்கு ரூ.351.71 இனைக் கவர்ந்து கொண்டது. உலகின் மிகப்பெரிய இறப்பர் நுகர்வுப் பொருளாதாரத்தினைக் கொண்ட சீனா படிப்படியாகக் குறைந்துவரும் அதன் தாங்கிருப்பினை மீளநிரப்பும் பொருட்டு அதன் இறக்குமதி அளவினை அதிகரித்தது. உள்நாட்டு இறப்பருக்கான கேள்வி நடுத்தர காலத்தில் அதிகரிக்கக்கூடுமென்பதனை இது எடுத்துக்காட்டுகிறது. இது, உள்நாட்டு இறப்பர் தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு ஊக்கம் தரும் ஒரு நிகழ்வாகும். எனினும், இறப்பர் துறையின் முழு உள்ளார்ந்த வளத்தினையும் பயன்படுத்திச் கொள்வதற்கு உயர்ந்த உள்நாட்டு பெறுமதிகூட்டல்களை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டுக் கேள்விகளில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கும் உள்நாட்டு பின்புல அபிவிருத்தி மற்றும் முன்னோக்கிய இணைப்புக்கள் அவசியமாக இருக்கும்.

### தெங்கு

**2016இல் 3,011 மில்லியன் காய்களை உற்பத்தி செய்ததன் மூலம் 1.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்த தெங்கு உற்பத்தி 2017இல் 2,450 மில்லியன் காய்களுக்கு 18.7 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.** தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு தெங்கு முக்கியமாக வளரும் பிரதேசங்களில் 2016இல் தொடங்கி 2017 வரை தொடர்ந்த நீண்ட வரட்சி நிலைமைகளின் காலங்கடந்த தாக்கமே முக்கிய காரணமாகும். குருணாகல், புத்தளம் மற்றும் கம்பஹா போன்ற முக்கியமாகத் தெங்கு வளரும் பிரதேசங்களில் வரட்சி நிலைமைகளில் கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தி ஆண்டு முழுவதும் குறைந்த தெங்கு உற்பத்திகளைத் தோற்றுவித்தது. தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 2017இன் இறுதிக் காலாண்டில் குறிப்பாக கடுமையானதாகக் காணப்பட்டவிடத்து உற்பத்தி, 2016இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 539.4 மில்லியன் காய்களுக்கு 28.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. காய்களின் உற்பத்திகளில் ஏற்பட்ட இச்சுருக்கம் தெங்கு தொடர்பான கைத்தொழில்கள் மீதும் கடுமையான தாக்கமொன்றினை ஏற்படுத்தின. இதன்படி, 2017இல் தேங்காய்த் துருவல் உற்பத்தி 2016இன் 51,117 மெ.தொன்களிலிருந்து 29,557 மெ.தொன்களுக்கு 42.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, தேங்காய் எண்ணெய் உற்பத்தி 48,805 மெ.தொன்களிலிருந்து 12,784 மெ.தொன்களுக்கு 73.8 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்ததுடன் வேர்ஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 16,067 மெ.தொன்களிலிருந்து 14,233 மெ.தொன்களுக்கு 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தேங்காய் உற்பத்திகளில் குறைப்பு காணப்பட்ட போதும் தெங்கு கிறீம், தேங்காய் பால்மா மற்றும் தேங்காய் பால் உற்பத்தி 2016இன் 42,643 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் 46,941 மெ.தொன்களுக்கு 10.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஏற்றுமதிக் கேள்வி அதிகரித்தமையே காரணமாகும்.

**நுகர்விற்கான, அதேபோன்று கைத்தொழில் பயன்பாட்டிற்கான தேங்காய்களில் கடுமையான பற்றாக்குறையை உருவாக்கிய தேங்காய் உற்பத்திகளில் காணப்பட்ட வீழ்ச்சி 2017இல் முன்னொருபோதுமில்லாத மட்டத்திற்கு தேங்காயின் விலைகளை உயர்வடையச் செய்தது.** இதன்படி, உள்ளூர்ச் சந்தையில் உடன் காய்களின் சராசரி மொத்த விற்பனை விலை காயொன்றிற்கு ரூ.62.71 இற்கு 95.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இதன் விளைவாக உடன் காய்களின் சராசரி சில்லறை விலை இவ்வாண்டுப்பகுதியில்

### அட்டவணை 2.5
### முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2016 (அ) | 2017 (ஆ) | மாற்றம் (%) 2015/16 (அ) | மாற்றம் (%) 2016/17 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 292.6 | 307.7 | -11.0 | 5.2 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 202 | 203 | -0.5 | 0.3 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 193 | 195 | -0.1 | - |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 469.24 | 466.98 | 2.3 | -0.5 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 473.15 | 620.44 | 17.9 | 31.1 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 639.88 | 807.44 | 7.9 | 26.2 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,044 | 748 | -14.8 | -28.4 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 115 | 202 | -76.8 | -75.4 |
| 1.8 மொ.உ.உ.,இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.7 | -12.5 | - |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 79.1 | 83.1 | -10.7 | 5.1 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 133 | 137 | -3.1 | 2.9 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 99 | 103 | -8.4 | 3.8 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 180.00 | 195.00 | 5.9 | 8.3 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 239.28 | 336.72 | -3.6 | 40.7 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 294.33 | 343.56 | -13.9 | 16.7 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 591 | 847 | -4.9 | 43.3 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 272 | 328 | -64.6 | 20.5 |
| 2.8 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.3 | 0.3 | - | - |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 3,011 | 2,450 | -1.4 | -18.7 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 466 | 471 | 2.4 | 1.0 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா/காய் | 16.70 | 16.69 | 1.9 | -0.1 |
| 3.4 சராசரி விலை | | 32.13 | 62.71 | -5.2 | 95.2 |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா/காய் | 41.16 | 62.03 | -24.5 | 50.7 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா/காய் | 5,000 | 8,824 | 9.0 | 64.6 |
| 3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 10,996 | 15,121 | 32.7 | 63.6 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 0.7 | 0.6 | -12.5 | -14.3 |
| 3.7 மொ. உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | | | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறுஉடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

காயொன்றிற்கு ரூ.67.40 இற்கு 47.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, மூன்று முக்கிய உள்ளீட்டு உற்பத்திகளான தேய்காய்த் துருவல், உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் ஏற்றுமதிகள் 39.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் இவ்வுற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 8.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, காயொன்றிற்கு ரூ.16.69இல் மதிப்பிடப்பட்ட சராசரி உற்பத்திச் செலவு 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் மாற்றமின்றிக் காணப்பட்டது.

அரசாங்கம் வழங்கல் பற்றாக்குறையினையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட விலை அழுத்தங்களைக் குறைப்பதற்கு பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டிருக்கிறது. இதன்படி, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை 2017 யூனிலிருந்து உடன் காய் ஏற்றுமதிகளுக்கான ஒப்புதல் வழங்குதலை தற்காலிகமாக இடைநிறுத்தியது. அதேவேளை, ஏற்றுமதி கேள்விகளை கிரமமாக நிறைவேற்றுவதற்காக உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட தெங்கின் வழங்கல் பற்றாக்குறையினைப் பரிசீலனையில் கொண்டு தெங்கு இறக்குமதிகளை தாராளமயப்படுத்துவதற்கு தெங்கு பதனிடுவோர் கோரினர். இதன்படி, தெங்கு உள்ளீடுகளின் இறக்குமதிகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விதந்துரைப்புக்களுக்குட்பட்டு கைத்தொழில்களுக்குத் தேவையான தெங்கு உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்கு கொள்கைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு தேங்காய் எண்ணெய் உற்பத்திகளுக்கான தேங்காயின் கேள்வியைக் குறைக்கும் நோக்குடன் தாவர எண்ணெய் உற்பத்திகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையை அரசாங்கம் திருத்தியமைத்தது.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின்படி 12 முக்கிய பயிர் வகைகளை உள்ளடக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 131,189 மெ.தொன்களுக்கு 5.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** கறுவா, மிளகு, கராம்பு மற்றும் சாதிக்காய் போன்ற சில பயிர்களின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை கொண்டிருந்த வேளையில் ஏலக்காய், கோப்பி, கொக்கோ, பாக்கு, வெற்றிலை, இஞ்சி, மஞ்சள், சிற்றநெல்லா போன்ற பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. குறைவடைந்த உற்பத்திக்கு சிறு ஏற்றுமதிப் பயிர்கள் வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட வரட்சி வானிலை மற்றும் வழமைக்கு மாறான மழைவீழ்ச்சி மாதிரிகள் போன்ற பல்வேறு காரணிகள் காரணமாக விளங்கி உற்பத்திச் செலவினை அதிகரித்ததுடன் ஏற்றுமதிச் சந்தைகளில் விலைகளைத் தளம்பலுறவும் செய்தன. பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு குறிப்பாக, கறுவா, மிளகு மற்றும் சிற்றநெல்லா போன்றவற்றின் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு 2017இல் அதிகரித்தது. அதேவேளை, சிறிய ஏற்றுமதிப் பயிர்களுடன் தொடர்பான ஏற்றுமதிகளின் அளவு 2016இனை விட 57,703 மெ.தொன்களுக்கு 2017இல் 31.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 2017இன் ஏற்றுமதிகளில் வெற்றிலை, 2016 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2017இல் சிறிய ஏற்றுமதிப் பயிர்களின் இறக்குமதி அளவும் 2016 உடன் ஒப்பிடுகையில் 16.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு மிளகு, கொக்கோ, மஞ்சள் மற்றும் இஞ்சி என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். தற்போதுள்ள வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் தரம் குறைந்த இறக்குமதிகள்

மற்றைய நாடுகளுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்ற கரிசனைகளைத் தொடர்ந்து இலங்கைக்கான மிளகு இறக்குமதி அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டது.

### ஏனைய களப் பயிர்கள்

**2017இன் காலப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள், ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியைப் பாதித்தன.** இதன்படி, இவ்வாண்டுப்பகுதியில் ஏனைய களப் பயிர்களின் மொத்த வெளியீடு 509,076 மெ.தொன்களாக விளங்கியது. இது 2016 உடன் ஒப்பிடுகையில் 20.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாகக் காணப்பட்ட வேளையில் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு 24.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இறுங்கு, தினை மற்றும் சோயா அவரை தவிர்ந்த ஏனைய களப் பயிர்களின் முக்கிய வகைகள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. கடந்த ஐந்து ஆண்டு காலமாக உறுதியாக அதிகரித்த உருளைக்கிழங்கு உற்பத்தி பயிரிடப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தமையின் காரணமாக 23.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததாக அறிவிக்கப்பட்டது. அதேவேளை, சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயத்தின் உற்பத்தி முறையே 9.3 சதவீதத்தினாலும் 17.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் இறக்குமதிகள் 2.3 சதவீதத்தினாலும் 7.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன. பச்சை மிளகாயின் உற்பத்தி கூட இவ்வாண்டுப்பகுதியில் 51,827 மெ.தொன்களுக்கு 23.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, குறைந்த சந்தை நிரல்பல் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் பச்சை மிளகாயின் சராசரி சில்லறை விலை குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்தது. ஏனைய களப் பயிர்களின் பயிர்ச்செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பு வீழ்ச்சியடைந்த போதும் சோயா அவரை போன்ற குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களின் பயிர்ச்செய்கை நிலப்பரப்பு அதிகரித்து உற்பத்தியில் 80.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. மோசமான வானிலை நிலைமைகளின் தாக்கமானது சிறந்த நீர் முகாமைத்துவம், மேம்படுத்தப்பட்ட விதைத் தரம் மற்றும் ஏனைய களப் பயிர்களின் நிரம்பல் மற்றும் கேள்விகளுக்கிடையிலான சிறந்த இணைப்பினை உறுதிப்படுத்துகின்ற வினைத்திறன்மிக்க சந்தைகள் என்பனவற்றினூடாக இத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டியது.

### காய்கறிகள்

**மோசமான வானிலை நிலைமைகளுக்கிடையிலும் 2016இல் மேம்பட்ட காய்கறி உற்பத்திகள் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வெளியீட்டில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.** 2017இல் காய்கறி உற்பத்திகள் 1.5 மில்லியன் மெ.தொன்களுக்கு 9.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தாழ்நில மற்றும் உயர் நில காய்கறிகள் இரண்டினதும் உற்பத்தி ஆண்டு முழுவதும் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இரண்டு பருவக் காற்றுக்களும் ஆரம்பமாவதற்கு தாமதித்தமையினால் பெரும்போக மற்றும் சிறுபோக பயிர்ச்செய்கைகள் ஆரம்பிக்கப்படுவது, குறிப்பாக, மலைநாட்டுப் பகுதிகளில் தாமதமடைந்தது. இதன் விளைவாக, பயிர்ச்செய்யப்பட்ட காய்கறிகளின் நிலப்பரப்பு இவ்வாண்டுப்பகுதியில் 6.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது, 2016/17 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 7.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை 2017 சிறுபோக காலத்தில் பயிர்ச்செய்யப்பட்ட நிரலப்பரப்பு 5.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் இணைந்த விளைவாகும். காய்கறிகளின் குறைந்த உற்பத்திக்குப் பதிலிறுத்துகின்ற விதத்தில் ஆண்டின் முதலரைப்பகுதியில் விலைகள் உயர்வாக காணப்பட்டதுடன் அதன் பின்னர் 2017 சிறுபோகத்தில் அறுவடை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் விலைகள் வீழ்ச்சியடைந்தன. எனினும், காய்கறிகளுக்கான அருந்தல் காலம் ஆரம்பமாகியதுடன் ஆண்டின் நான்காம் காலாண்டுப்பகுதியில் விலைகள் மீண்டும் உயர்வடைந்தன. எனினும், யாழ்ப்பாணத்தின் காய்கறி உற்பத்தி சந்தையின் விலை அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஓரளவிற்கு உதவின. மறுபுறத்தில் கையாளலின் போது அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களின் உயர்ந்த சதவீதம் விலை அதிகரிப்புக்களுக்குப் பங்களித்ததுடன் மோசமான வானிலை நிலைமைகளின் பின்னணியில் விலை அழுத்தங்களைத் தணிக்கும் நோக்குடன் அவற்றைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். இதன்படி, வேளாண்மைத் துறை, நன்கு முகாமைப்படுத்தப்பட்ட வேளாண்மை ஏற்பாட்டு வலையமைப்பிலிருந்து குறிப்பாக அதிகளவிற்கு பழுதடையக்கூடிய பயிர்கள் தொடர்பில் நன்கு முகாமைப்படுத்தப்பட்ட வேளாண்மை ஏற்பாட்டு வலையமைப்பிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை, ரூ.4.3 மில்லியன் பெறுமதி கொண்ட 21,696.6 மெ.தொன் காய்கறிகள் இவ்வாண்டுப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்டன. சிறந்த தொழில்நுட்பத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கும் வர்த்தக வேளாண்மை நடவடிக்கைகளை நோக்கிய நகர்வு ஏற்றுமதி வருவாய்களுக்கும் அதேபோன்று இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் உதவும்.

### பழவர்க்கங்கள்

**முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட உற்பத்தி வீழ்ச்சியிலிருந்து மீட்சியடைந்து 2017இல் பழவர்க்கங்களின் உற்பத்தி அதிகரித்தது.** 2017இல் ஒட்டுமொத்த பழவர்க்கங்களின் உற்பத்தி 1,569,858 மெ.தொன்களுக்கு 9.5 சதவீதத்தினால் அதிகரித்தது. வாழைப்பழம், மாம்பழம், பப்பாப்பழம், தற்பூசணி,

அன்னாசிப்பழம் மற்றும் கொய்யா என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில் தோடம்பழம், எலுமிச்சைப்பழம், பசன்பழம் மற்றும் யானைக் கொய்யா என்பனவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டிலிருந்தும் வீழ்ச்சியடைந்தது. அதிகரித்த உற்பத்திகளுக்கிடையிலும் பழவர்க்கங்களின் விலைகள் உயர்வாகக் காணப்பட்டமைக்கு குறிப்பாக, சுற்றுலாத் துறையிலிருந்து ஏற்பட்ட உயர்ந்த கேள்வியே காரணமாகும். 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.12.9 பில்லியன் பெறுமதி கொண்ட 76,139.3 மெ.தொன் பழவர்க்கங்கள் இறக்குமதி செய்யப்பட்ட வேளையில் ரூ.6.3 பில்லியன் பெறுமதி கொண்ட 31,320 மெ.தொன் பழவர்க்கங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பெரும் வகையிலான பழவர்க்கங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்ற போதிலும் கூட ஏற்றுமதி சார்ந்த வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கை வாழைப்பழம், அன்னாசிப்பழம் போன்ற ஒரு சில பயிர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை நன்கமைக்கப்பட்ட முறையில் ஊடு பயிர்ச்செய்கைகளாக பயிரிடப்பட்டு வருகின்றன. இலங்கையின் ஏற்றுமதிகளில் கணிசமானளவு பழவர்க்கங்கள் காணப்பட்ட போதும் இத்துறையினை இழைய ரீதியில் உருவாக்கப்பட்ட மரங்களைப் பயன்படுத்தி சூழல் கட்டுப்பாடுகளில் அமைந்த முதலீடுகள் போன்ற வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கையூடாக மேலும் அபிவிருத்தி செய்யமுடியும். இது வெளியீட்டினையும் அதேபோன்று உற்பத்தியின் தரங்களையும் அதிகரிக்கும்.

### சீனி

**சீனி உற்பத்தியாகும் பிரதேசங்களில் காணப்பட்ட வரட்சி நிலைமைகளின் விளைவாக 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் சீனி வீழ்ச்சியடைந்ததன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு மாற்றமடைந்தது.** உயர் விளைச்சலைத் தரும் கரும்பு வகைகளை பயிர்செய்கின்ற வேளையில் பொருத்தமான நீர்ப்பாசன முறைகளை பெறக்கூடியதன்மை, களப் பேணல் மற்றும் வெளிப்பயிர்ச்செய்கையாளர்களின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை விரிவுபடுத்தல் என்பன 2015 மற்றும் 2016இல் சீனி உற்பத்தி அதிகரிப்பதற்குப் பங்களித்தன. 2017இல் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகள், வளர்ச்சியை அதிகரிக்கின்ற கொள்கைகளின் தாக்கத்தைக் குறைத்துவிடுகிறது. மோசமான வானிலை நிலைமைகள், பயிரின் வளர்ச்சியைப் பாதித்து கரும்பில் சீனியின் உள்ளடக்கத்தினைக் குறைத்துவிடுகின்ற ஈரலிப்பு அழுத்தத்தின் கடுமைத்தன்மையினை அதிகரிக்கிறது. இதன் மூலம் சீனி பெறும் வீதம் (பிழியப்பட்ட கரும்பின் அளவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சீனியின் சதவீதம்) குறைவடைகின்றது[2]. வரண்ட காலத்தினைத் தொடர்ந்து ஏற்படுகின்ற பாரிய மழைவீழ்ச்சி சீனி பெறும் வீதத்தினைக் குறைத்துவிடுகின்றது. அதேவேளை, வெள்ளை இலை மற்றும் புல்லுருவி நோய்கள் மற்றும் கரும்பு இலைத் துளைப்பான் நோய் என்பனவற்றின் பரவல் மற்றும் இரண்டு தசாப்தகாலங்களுக்கும் கூடுதலான பழமை வாய்ந்த சிக்கனமற்ற பொறிகள் மற்றும் பொறித் தொகுதிகள் என்பன வரட்சியின் தாக்கத்தினை அதிகரித்தன. பெல்வத்தை, செவனகல மற்றும் கல்லோயா (ஹிங்குரான) தொழிற்சாலைகளின் மொத்தச் சீனி உற்பத்தி 2016இன் 61,265 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் 55,552 மெ.தொன்களுக்கு 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2017இல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பிழியப்பட்ட கரும்பில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் சீனிபெறும் வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் இணைந்த விளைவாகும். அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பும் அறுவடை செய்யப்பட்ட கரும்பும் வீழ்ச்சியடைந்தமையானது அனைத்து மூன்று தொழிற்சாலைகளிலும் பிழியப்பட்ட கரும்பின் தொகை 2017இல் 747,662 மெ.தொன்களுக்கு 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. அனைத்து மூன்று தொழிற்சாலைகளினதும் மொத்தச் சீனி பெறல் வீதம் 2016இன் 7.7 சதவீதத்திலிருந்து 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிப்பயிர்ச்செய்கையாளர்களினால் நிரம்பல் செய்யப்பட்ட கரும்பின் அளவு 2017இல் 2.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, பெல்வத்தை, செவனகல மற்றும் கல்லோயா தொழிற்சாலைகள் 2017இன் மொத்தச் சீனி உற்பத்தியில் 49.8 சதவீதத்திற்கும் 27.4 சதவீதத்திற்கும் 22.9 சதவீதத்திற்கும் வகைகூறின. எனினும், 2016இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2017இன் முதலரைப்பகுதியில் குறைந்தளவு செயலாற்றத்தினைப் பதிவுசெய்த கல்லோயா தொழிற்சாலை மீள உத்வேகமடைந்து பின்னரைப்பகுதியில் கணிசமானளவிற்கு பாரிய உற்பத்தியைப் பதிவுசெய்தமையின் மூலம் 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் 29.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, பெல்வத்தை மற்றும் செவனகல தொழிற்சாலைகள் 2016 உடன் ஒப்பிடுகையில் முறையே 19.1 சதவீதம் மற்றும் 11.8 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சி வீதங்களை பதிவுசெய்தன. 2017இல் சீனி உற்பத்தி நாட்டின் மொத்த சீனிக்கான கேள்வியில் ஏறத்தாழ 10 சதவீதத்தைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்தது. 2017இல் சீனி இறக்குமதி 2016இன் 651,181 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 498,952 மெ.தொன்களுக்குக் குறைவடைந்தது. தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வீட்டலகுகள் வருமானம் மற்றும் செலவின அளவீட்டின்படி, வீட்டலகுகளின் சீனி நுகர்வு வீழ்ச்சிப் போக்கொன்றினை எடுத்துக்காட்டி, உள்நாட்டு சீனி நுகர்வில் சாத்தியமான மிதமான போக்கொன்றை எடுத்துக்காட்டின. அதேவேளை, 2017இற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தினூடாக நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்குள் வெளியீட்டினை மேம்படுத்தும் நோக்குடன் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் வெளிப்பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்கும் அழைப்பு விடுத்ததன் மூலமும் சீனி உற்பத்தி அதிகரிப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமையொன்றினை வழங்கியது.

2 $\text{சீனி மீட்பு வீதம்} = \frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{பிழியப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

2

2

### மீன்பிடி

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் மீன் உற்பத்தி 2016இல் பதிவுசெய்யப்பட்ட மட்டத்துடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது.** 2017இல் மொத்த மீன் உற்பத்தி 531,310 மெ.தொன்களுக்கு 0.1 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது. 2017இல் மொத்த மீன் உற்பத்தியில் 84.6 சதவீதத்திற்கு வகைகூறிய கடல் மீன் உற்பத்தி 449,440 மெ.தொன்களுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் நன்னீர் மீன் உற்பத்தி 81,870 மெ.தொன்களுக்கு 10.7 சதவீதத்தினால் அதிகரித்தது. கடல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கரையோர மீன் உற்பத்தி 259,720 மெ.தொன்களுக்கு 5.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை காரணமாக இருந்த வேளையில் எஞ்சிய கடல் மீன் உற்பத்தியை உள்ளடக்கிய ஆழ்கடல் மீன் உற்பத்தி 189,720 மெ.தொன்களுக்கு 3.8 சதவீதத்தினால் அதிகரித்தது. நன்னீர் மீன் உற்பத்தி அதிகரித்தமைக்கு உள்நாட்டு மீன்பிடி 17.3 சதவீதத்தினால் 68,510 மெ.தொன்களுக்கு அதிகரித்தமையே முக்கிய காரணமாக விளங்கிய வேளையில் நன்னீர் மீன் உற்பத்தியின் எஞ்சியபகுதிக்கு வகைகூறும் உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் கூனி இறால் மற்றும் இறால் உற்பத்திகள் முறையே 8,740 மெ.தொன்களுக்கும் 4,620 மெ.தொன்களுக்கும் 7.9 சதவீதத்தினாலும் 23.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. கொள்கை ஆதரவுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் ஏற்றுமதிகள் மீதான தடைகள் அகற்றப்பட்டமை என்பன மீன் உற்பத்தியை வலுப்படுத்துவதற்கு உதவிய வேளையில் 2017 மே மற்றும் நவெம்பர் மாத காலப்பகுதியில் மேற்கு மற்றும் தெற்குக் கரையோரங்களைப் பாதித்த மோசமான வானிலை நிலைமைகள், ஆழ்கடலில் காணப்பட்ட நீண்ட வரட்சி வானிலை மற்றும் மீன்பிடித்தலுக்குப் பின்னர் ஏற்பட்ட கணிசமான இழப்புக்கள் என்பன கடல் மீன்பிடியின் மீது மோசமான தாக்கமொன்றினைக் கொண்டிருந்தன. தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் பிடிக்கப்பட்ட மீனில் 40 இலிருந்து 60 சதவீதம் வரையிலான தொகை நுகர்விற்கோ அல்லது கருவாட்டிற்காகப் பயன்படுத்துவதற்கோ பொருத்தமில்லாமல் இருப்பதனால் அழிக்கப்பட்டு விடுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதேவேளை, உள்நாட்டின் நீர்நிலைகளை வரட்சியாக்கிவிடும் வரட்சி, கூனி இறால் மற்றும் இறால் இடையே பரவி வரும் "வெள்ளைப் புள்ளி நோய்" என்பன 2017இல் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பாதித்திருக்கின்றன. அதேவேளை, 2016இல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் ஏற்றுமதிகளின் மீதான தடைகள் அகற்றப்பட்டமையினைத் தொடர்ந்து 2016 உடன் ஒப்பிடுகையில் மீன் ஏற்றுமதிகள் அளவு நியதிகளில் 41.8 சதவீதத்தினாலும் ரூபா நியதிகளில் 48.5 சதவீதத்தினாலும் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீனின் ஏற்றுதிகள் 2017இன் மொத்த மீன் ஏற்றுமதியில் 23.1 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2016இனை விட 125 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, இலங்கைக்கான மீன் இறக்குமதிகள் அளவு நியதிகளில் 8.4 சதவீதத்தினாலும் ரூபா நியதிகளில் 3.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 2.6
மீன் உற்பத்தி

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2016 | 2017 (அ) | மாற்றம் (%) 2015/16 | மாற்றம் (%) 2016/17 (அ) |
|---|---|---|---|---|
| கடல் | 457 | 449 | 0.9 | -1.7 |
| கரையோரம் மற்றும் களப்பு | 274 | 260 | 1.9 | -5.3 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 183 | 190 | -0.6 | 3.8 |
| நன்னீர் மீன்பிடி | 74 | 82 | 9.9 | 10.7 |
| பிடிப்பு | 58 | 69 | 2.4 | 17.3 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 9 | 9 | 201.3 | -7.9 |
| இறால் வளர்ப்பு பண்ணை | 6 | 5 | -15.0 | -23.4 |
| மொத்தம் | 531 | 531 | 2.1 | 0.1 |

(அ) தற்காலிகமானது

மூலம்: கடற்றொழில் மற்றும் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

### விலங்கு வளர்ப்பு

**மொத்தத் தேசிய பால் உற்பத்தி 2016 உடன் ஒப்பிடுகையில் 2017இல் 396.2 மில்லியன் லீற்றர்களுக்கு 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உயர் விளைச்சல்களை வழங்கும் பசுக்கள் மற்றும் வேளாண்மையாளர்களின் பாலிற்கான உத்தரவாத விலையினை அதிகரித்தமை போன்ற கொள்கை நடவடிக்கைகள் காரணமாக அமைந்தது.** இது 2017இல் பால் பண்ணைத் துறையில் தனியார் துறை முதலீடுகள் உயர்வடைந்தமையைக் காட்டின. மொத்தப் பால் உற்பத்தியில் 82.7 சதவீதத்திற்கு வகைகூறும் பசுப்பால் உற்பத்தி 327.6 மில்லியன் லீற்றர்களுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் எஞ்சியபகுதிக்கு வகைகூறும் எருமைப் பால் உற்பத்தி 68.6 மில்லியன் லீற்றர்களுக்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் பால் உற்பத்தி 2016இன் 17.9 மில்லியன் லீற்றர்களிலிருந்து 2017இல் 15.0 மில்லியன் லீற்றர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் 2017ஆம் ஆண்டுப்பகுதியில்

அட்டவணை 2.7
கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்

| துணைத்துறை | 2016 (அ) | 2017 (ஆ) | மாற்றம் (%) 2015/16 (அ) | மாற்றம் (%) 2016/17 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.2 | 1.3 | -14.1 | 6.0 |
| கறவைப் பசுக்கள் | 0.9 | 1.0 | -13.1 | 5.9 |
| எருமைகள் | 0.3 | 0.3 | -17.4 | 6.3 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 384.0 | 396.2 | 2.6 | 3.2 |
| பசும்பால் | 317.9 | 327.6 | 4.1 | 3.1 |
| எருமைப்பால் | 66.1 | 68.6 | -4.2 | 3.7 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்)(இ) | 36.9 | 42.6 | 10.1 | 15.4 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால்(ரூ./லீற்றர்) | 64.03 | 66.34 | 8.7 | 3.6 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 2,059.7 | 2,072.9 | 8.5 | 0.6 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 182.7 | 196.6 | 5.7 | 7.6 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.
(இ) தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை. மற்றும் மில்கோ பிறைவேட் லிமிடட் என்பவற்றின் உற்பத்திகள் மாத்திரம் உள்ளடக்கப்படுகின்றது

மூலங்கள்: கிராமிய பொருளாதார விவகாரஅமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை
மில்கோ பிறைவேட் லிமிடெட்

உள்நாட்டு பால் உற்பத்தி நாட்டின் பால் நுகர்வில் 40 சதவீதத்தை பூர்த்தி செய்யப் போதுமானதாகவிருந்த வேளையில் மிகுதி, இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மூலம் பூர்த்தி செய்யப்பட்டதாக மதிப்பிடுகிறது. எனினும், 2016இல் உள்நாட்டுப் பால் நுகர்வில் 42 சதவீதம் உள்நாட்டு மூலங்களிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டமையானது உணவுப் பாதுகாப்பினை அதிகரிக்கும் அரசாங்கத்தின் குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கான தேவையை எடுத்துக்காட்டுகிறது. அதேவேளை, பால்மா இறக்குமதி 2017இல் 93,127 மெ.தொன்களுக்கு 0.9 சதவீதத்தினால் குறைவடைந்தன. ஒரு லீற்றர் பாலிற்கான சராசரி உற்பத்திச் செலவு ரூ.34.69 ஆக இருந்த வேளையில் சராசரி பண்ணை விலை 2017இல் ரூ.66.34 ஆக விளங்கியது. தெங்குப் புண்ணாக்கு மற்றும் தவிடு என்பனவற்றின் உயர்ந்த விலை காரணமாக திட தீனிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 2017இல் உற்பத்திச் செலவினை அதிகரித்தன. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான தொழில்முயற்சியாண்மையாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட கன்னிப் பசுக்களையும் புதிய தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி பாரியளவில் பண்ணை தொழில்முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொண்டிருப்பதனை அவதானித்திருக்கிறது.

**2017இல் முட்டை உற்பத்தியும் பெரும்பாலான வகை இறைச்சிகளும் கணிசமானளவில் அதிகரித்திருக்கின்றன.** முட்டை உற்பத்தி 2017இல் 2,072.9 மில்லியனுக்கு 0.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இது ஐந்து ஆண்டுகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த மட்ட உற்பத்தியாகும். முட்டையிடும் பேரன்ஸ் கோழிகளின் அதிகரித்த இறக்குமதி இவ்வாண்டில் உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு உதவியாக அமைந்தன. எனினும், விலங்கு வளர்ப்பு மற்றும் சுகாதாரத் திணைக்களம் வழங்கப்படுகின்ற பொறிமுறை உற்பத்தியில் ஏற்படும் பாரிய அதிகரிப்புக்களை ஈடுசெய்யும் விதத்தில் போதுமானளவிற்கு ஒழுங்குமுறைப்படுத்தப்படவில்லை என்பதனையும் இது 2017இன் பிற்பகுதியில் விநியோக வழிப்படுத்தல்களிலும் விலைகளிலும் உறுதியற்றதன்மை ஒன்றிற்கு வழிவகுத்திருக்கின்றது என்பதனையும் அவதானித்திருக்கிறது. பெரிய முட்டையொன்றின் உற்பத்திச் செலவு 2016இன் முட்டையொன்றிற்கான ரூ.12.40 இலிருந்து முட்டையொன்றிற்கு ரூ.12.81 இற்கு அதிகரித்திருக்கிறது. 2017இல் முட்டையொன்றின் சராசரி விலை 2016இன் ரூ.16.10 உடன் ஒப்பிடுகையில் ரூ.14.08 ஆகக் காணப்பட்டமைக்கு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 2017இல் கோழி இறைச்சி 196.6 மெ.தொன்களுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்தது. புரொயிலர் தாய் கோழியின் இறக்குமதி 2016இன் 333,424 இலிருந்து 2017இல் 382,421 இற்கு அதிகரித்தவிடத்து உள்நாட்டு புரொயிலர் தாய் கோழியின் உற்பத்தி 2016இன் 1.3 மில்லியனிலிருந்து 2017இல் 1.1 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. புரொயிலர் கோழி இறைச்சியின் மீது விடுவிக்கப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.420.00 உச்ச விலை 2017 மாச்சு 14ஆம் நாளிலிருந்த நடைமுறைக்குவரும் விதத்தில் நீக்கப்பட்டது. பன்றி மற்றும் ஆட்டிறைச்சி உற்பத்திகளும் கூட முறையே 8.4 சதவீதத்தினாலும் 1.4 சதவீதத்தினாலும் 7,890 மெ.தொன்களுக்கும் 1,420 மெ.தொன்களுக்கும் அதிகரித்தன. அதேவேளை, மாட்டிறைச்சி உற்பத்தி 2017இல் 30,130 மெ.தொன்களுக்கு 4.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான உதவியும்

**பாதுகாப்பான உணவு மற்றும் நீடித்தநிலையான வேளாண்மை என்பனவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் பூஜ்ய பட்டினி தொடர்பான ஐக்கிய நாடுகளின் நீடித்துநிலைத்திருக்கும் இலக்கினை இலக்காகக் கொண்டு அரசாங்கம் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** இப்பரந்த கொள்கைக் கட்டமைப்பின் பின்னணியில் அரசாங்கத்தின் வேளாண்மைக் கொள்கை இதன் முக்கிய குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் குறிப்பிட்ட கொள்கைகளினூடாக இத்துறையினை ஊக்குவித்த வேளையில் தனியார் துறையின் பாரிய வகிபாகத்தினையும் அனுமதித்தது. மேலும், அரசாங்கம் கொள்கைகளை மீளவடிவமைப்பித்தல் பொறிகள் மற்றும் வளமாக்கிகள் மீது வரிச் சலுகைகளை வழங்குதல், குளங்களைப் புனரமைத்தல், புதிய தொழில்நுட்பங்களை வழங்குதல் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் வேளாண்மையில் பெருமளவில் இளைஞர்கள் பங்கேற்பதனை ஊக்குவிக்கும் விதத்தில் பயிற்சியளித்தல் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. ஏற்றுமதி வருவாய்களையும் மீன்வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புத் துறைகளில் கூடியளவு தொழில் வாய்ப்புக்களுக்கான உள்ளார்ந்த வளங்களை அதிகரிப்பதனையும் நோக்கமாகக் கொண்டு இவ்விரு துறைகளையும் அபிவிருத்தி செய்வதன் மீது கூடியளவு வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2017இல் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்த போதும் கூட குறைந்த நெல் உற்பத்தியின் காரணமாக அரசாங்கத்தினால் செலுத்தப்படும் விலைகளிலும் பார்க்க சந்தை விலைகள் உயர்வாக இருந்தமையின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் நெற் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் இருப்புக்களைக் கொள்வனவு செய்யமுடியாமல் போயிற்று. நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் காலநிலையை எதிர்த்துநிற்கக்கூடிய அரிசி வகைகளை உருவாக்கியிருப்பதுடன் களமட்டத்தில் எதிர்த்துநிற்கக்கூடிய பலத்தின் மட்டத்தினை மதிப்பீடு செய்திருக்கிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏற்பட்ட சேதங்களின் காரணமாக வெள்ளத்திற்கு தாக்குப்பிடிக்ககூடிய வகைகளை மதிப்பீடு செய்கின்ற வேலைகள் நிறைவடையாத போதும் கூட வரட்சியை

அட்டவணை 2.8
முக்கிய உணவுப் பண்டங்கள் தொடர்பான உணவு ஐந்தொகை அட்டவணை

| விடயம் | அலகு | 2010 | | | 2016 | | | 2017 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (ஆ) | மெ.தொ'000 | 3,011 | 126 | 152 | 3,094 | 30 | 147 | 1,523 | 748 | 106 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 244 | 51 | 14 | 196 | 191 | 18 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1,051 | 51 | - | 948 | 46 | - | 1,250 | 58 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 65 | 216 | 13 | 54 | 232 | 13 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 62 | 651 | 34 | 56 | 498 | 26 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 96 | 148 | 12 | 73 | 151 | 10 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 531 | 39 | 27 | 531 | 28 | 26 |
| பசும்பால் | மில். லீற்றர் | 192 | - | 9 | 318 | - | 15 | 328 | - | 15 |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 49 | 3 | 2 | 13 | 10 | 1 |

அ) தற்காலிகமானது
ஆ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.7 மெற்றிக்தொன் அரிசி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்



எதிர்த்துநிற்கக்கூடிய அரிசி வகையான பீஜி 251 வெற்றிகரமான மதிப்பீட்டின் பின்னர் வெளியிடப்பட்டது. அதேவேளை, நீலம் - பச்சை பொருளாதாரத்தினை ஊக்குவிக்கும் நோக்குடன் அரசாங்கம் தேசிய வரவு செலவுத்திட்டம் - 2018இல் பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கியது. இவை வேளாண்மை நடைமுறைகளில் முன்னேற்றம் கண்ட தொழில்நுட்பங்களை இயலுமைப்படுத்துகின்ற பசுமை இல்ல தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வரிச் சலுகைகள் மழைநீரைச் சேமித்து வைப்பதற்கான முறையியல் ரீதியில் அமைந்த சிறிய மற்றும் நடுத்தர குளங்களில் வண்டல்களை தூர் எடுத்தல், புதிய வானிலையை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மையாளர்களுக்கான காப்புறுதி பாதுகாப்பு மற்றும் மீன்பிடித் துறைக்கான செலவினைப் பகிர்ந்து கொள்ளும் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பெறுமதியைக் கூட்டுவதற்கும் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அதிகரிப்புக்களை மேம்படுத்துவதற்கும் கறுவா மற்றும் மிளகு தொழில் துறையினை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**2017இல் இலங்கையில் தேயிலைக் கைத்தொழில் அதன் 150ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடியிருக்கிறது.** இலங்கைத் தேயிலைச் சபை இம்மைல்கல்லினைக் கொண்டாடும் விதத்தில் தொடர்பான நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வினை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்ற வேளையில் இத்தொழில் துறையினை ஊக்குவிப்பதற்கு ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. இலங்கை தேயிலைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வர்த்தக நாமங்களை மேம்படுத்துவது சிலோன் தேயிலையின் சிங்க வர்த்தக அடையாளத்தினைப் பாதுகாத்தல், புவியியல்சார் குறியீடுகளின் கீழ் இலங்கைத் தேயிலையைப் பதிவுசெய்தல் மற்றும் உலகளாவிய ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் என்பன மீது கவனத்தைச் செலுத்தியதுடன் இவை 150ஆவது ஆண்டு கொண்டாட்டங்களுடன் பெருமளவிற்கு இணைந்து செல்பவனாகவும் காணப்பட்டன. வர்த்தப் பொருட்காட்சிப் பங்கேற்பிற்கான உதவுதொகைத் திட்டத்தின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் தொழிற்படுத்தப்படும் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சிகளில் பங்கேற்பதற்கு தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு நிதியியல் உதவிகளை தொடர்ந்தும் வழங்கியது. அதேவேளை, இலங்கைத் தேயிலைச் சபை சராசரி மிகச் சிறந்த தேயிலை தரத்தினை 33.0 சதவீதத்திலிருந்து 60.0 சதவீதத்திற்கு தரம் உயர்த்தும் நோக்குடன் பெஸ்ட் லீவ் 60 நிகழ்ச்சித்திட்டத்தினை பேணுவது தொடர்பில் அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இலங்கைத் தேயிலைச் சபை தேயிலை மீளப்பயிரிடும் உதவுதொகைத் திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் 177.6 எக்டேயர்களுக்காக ரூ.32.5 மில்லியனை வழங்கியதுடன் தேயிலை தொழிற்சாலையை நவீனமயப்படுத்தல் திட்டத்திற்காக 60 தேயிலை தொழிற்சாலைகளுக்காக ரூ.33.2 மில்லியன் கொண்ட உதவுதொகைகளை வழங்கியது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் தீங்கு பகுப்பாய்வு மற்றும் இன்றியமையா கட்டுப்பாட்டுப் புள்ளி சான்றுபடுத்தலை 71 தொழிற்சாலைகள் பெற்றுக்கொண்டன. இது, உற்பத்திச் செயன்முறையின் போது முடிவடைந்த உற்பத்திகளின் பாதுகாப்பற்ற தன்மைக்கு காரணமாக இருக்கக்கூடிய உயிரினவியல், இரசாயன பௌதீக மற்றும் பௌதீக தீங்குகளிலிருந்தும் உணவுகளைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கான முறையியல் சார்ந்த நோய்த்தடுப்பு முறையொன்றாகும். ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டமொன்றில் இவ்விடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான வழிமுறைகளையும் வடிவமைக்கிறது. தேயிலை ஆராய்ச்சி நிறுவகமானது தேயிலை ஆராய்ச்சி நிறுவக உபாயத் திட்டமிடல் 2013 - 2017 இன்படி தேயிலைக் கைத்தொழிலுக்குத் தேவையான விடயங்களை வலியுறுத்தும் விதத்தில் பயிர் முன்னேற்றம் மற்றும் முகாமைத்துவம், நில உற்பத்தியாக்க முன்னேற்றம், வானிலை மாற்றங்களைப் பின்பற்றல், கள நடைமுறைகளை

பொறிமுறைமையப்படுத்தல் மற்றும் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரங்களை மேம்படுமத்தல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டது. புதிய தேயிலை பயிர்ச்செய்கையாளர்கள் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் 5000 தொடரின் கீழ் உற்பத்தியாக்கத்தினையும் தரத்தினையும் மேம்படுத்துவதற்காக தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் 5001, 5002, 5003 மற்றும் 5004 என்பன வெளியிடப்பட்டன. இவை மலைநாட்டு தேயிலை வளர் பிரதேசங்களுக்கு மிகப் பொருத்தமானவையாகும். வேறுபட்ட தேயிலை வளரும் பிரதேசங்களுக்காக வரட்சி மற்றும் இலை கருகல் மற்றும் வாடல் நோய்களை எதிர்த்துநிற்கக்கூடிய பொருத்தமான இணைந்த தனிச் சிறப்பு வாய்ந்த தேயிலையை அபிவிருத்தி செய்வதற்காக தேயிலைச் செடிகளை ஒட்டுகின்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டதுடன் சில கூட்டு நடவடிக்கைகள் சாதகமான பெறுபேறுகளையும் எடுத்துக்காட்டின. மண்ணின் ஈரலிப்புத் தன்மையினைப் பாதுகாப்பதற்காகவும் புதிய நிலங்களை சுத்திகரிக்கையில் ஊதா கதிர் சிகிச்சையளிக்கப்பட்ட செயற்கை முறை மண்போர்வைப் பொருட்களின் மதிப்பீடுதலும் களைக் கொல்லிக் கட்டுப்பாடுகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. சேதன முறையில் பயிர்செய்யப்பட்ட பரிசோதனையின் கீழுள்ள நிலத்துண்டுகள், பயிர், மண் மற்றும் பூச்சிக்கொல்லி நிகழ்வுகள் என்பனவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டன. சிறு உடமைகளில் எந்திர ரீதியான அறுவடை எந்திரங்களையும் கருவிகளையும் பிரபல்யப்படுத்துவதற்காக தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட செயற்றிட்டமொன்று 2017இலும் தொடர்ந்தது. தேயிலை சிறுஉடமையாளர் சபை, தேயிலை மீளப்பயிரிடல், புதிதாகப் பயிரிடல் மற்றும் பயிர் புனரமைப்பு உதவுதொகைத் திட்டங்களைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்திய வேளையில் தேயிலை சிறுஉடமையாளர்களுக்கு காப்புறுதித் திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தியது. இவ்வாண்டுப்பகுதியில் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிலும் சிறுஉடமைகளிலும் ரூ.454.7 மில்லியன் செலவில் 748 எக்டேயர்கள் மீளப்பயிரிடப்பட்ட வேளையில் ரூ.60.2 மில்லியன் செலவில் 202 எக்டேயர்கள் புதிதாகப் பயிரிடப்பட்டன. சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புனரமைப்புச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவரான தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை மீளப்பயிரிடும் வீதத்தினை மேம்படுத்துவதற்காக மீளப்பயிரிடல் உதவுதொகையாக எக்டேயரொன்றிற்கு ரூ.150,000 கொண்ட முற்கொடுப்பனவு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட சேதத்திற்காக தேயிலை சிறுஉடமையாளர்களுக்கு 2017 மேயில் ரூ.313 மில்லியன் கொண்ட தொகை நிதியியல் நிவாரணமாக வழங்கப்பட்டது.

**வருடாந்த இறப்பர் உற்பத்தியை தற்போதைய மட்டமான 83,100 மெ.தொன்களிலிருந்த 2030 அளவில் 200,000 மெ.தொன்களுக்கு அதிகரிப்பதற்கான உபாய நடவடிக்கைளுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களமும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகமும் அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்தன.** மேற்குறிப்பிட்ட இலக்குகளை எய்துவதற்கான ஆண்டு நடவடிக்கைத் திட்டம் - 2017 உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தல் மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்கு இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்குதல் என்பனவற்றை முக்கிய உபாயங்களாக உள்ளடக்கியிருக்கிறது. அதேவேளை, நடவடிக்கைகளை இணைத்தல் மற்றும் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் என்பன சிறுஉடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர், புனரமைப்புச் செயற்றிட்டத்தின் ஊடாக அம்பாறை மாவட்டத்தில் இறப்பர் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இறப்பர் கைத்தொழிலுக்கான முதன்மைத் திட்டம் 2017 மேயில் மேற்கொள்ளப்பட்டதுடன் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்புடன் இறப்பர் அபிவிருத்திச் செயலகமொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உற்பத்திதிறனை மேம்படுத்துவதன் கீழ் இறப்பர் பயிர்செய்கையின் கீழான நிலப்பரப்பினை விரிவாக்கும் நோக்குடன் 787.1 எக்டேயர் இறப்பர் சிறுஉடமையாளர் துறையில் மீளப்பயிரிடப்பட்டதுடன் 59.5 எக்டேயர்கள் கூட்டுறவுத் துறையில் மீளப்பயிரிடப்பட்ட வேளையில் 208.8 எக்டேயர்கள் பாரம்பரியமாக இறப்பர் வளரும் பிரதேசங்களில் புதிதாகப் பயிரிடப்பட்டதுடன் 464.4 எக்டேயர்கள் பாரம்பரியமற்ற இறப்பர் வளரும் பிரதேசங்களில் புதிதாகப் பயிரிடப்பட்டன. இறப்பர் துறையின் விரிவாக்கப் பணிகள் ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. இது இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினை மீளமைக்கும் செயன்முறையினை விரைவுபடுத்தியதுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்திற்கும் இடையில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உயர்தர உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல், உற்பத்திச் செலவின் அதிகரிப்பினைக் குறைப்பதற்காக குறைந்த செறிவினைக் கொண்ட அறுவடைகள் மற்றும் இறப்பர் நிலங்களில் உயர் விளைச்சலுடன் கூடிய பதியங்களின் மூலம் மீள்நடுகைகளை ஊக்குவித்தல் போன்ற முறையியல்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மூல இறப்பர் உற்பத்திகளின் பெறுமதிகூட்டல்களை மேம்படுத்துவதற்கும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினால் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கிறேப் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுப் பொருட்கள், நீர்த்தாங்கிகளின் உள்ளகப் பொருத்துக்களுக்காக லேட்டெக்ஸ்ஸினை அடிப்படையாகக் கொண்ட கலவைகளை அபிவிருத்தி செய்தல், லேட்டெக்ஸ்சினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்காக வல்கனைசிங்கின் முறைமைகளை அபிவிருத்தி செய்தல், களைக் கட்டுப்பாடுகளுக்காக சேதன மற்றும் அசேதன நிழல் பொருட்களைப் பரீட்சித்தல் என்பனவற்றிற்குப் புறம்பாக அவற்றின் கிரமமான ஆராய்ச்சி

2

நடைமுறைகளையும் மேற்கொண்டு வருகின்றன. இறப்பர் உற்பத்தித் துறை தேவையானளவிற்கு வேளாண் முகாமைத்துவ நடைமுறைகளை போதுமானளவிற்குப் பின்பற்றாமையின் காரணமாக தோன்றுகின்ற குறைந்த உற்பத்தி மட்டங்களின் விளைவாக ஏற்படும் குறைந்த போட்டித்தன்மைகளிலிருந்து இறப்பர் உற்பத்தித் துறை பாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, சிறுஉடமையாளர்கள் துறையில் கொத்தணி அணுகுமுறையுடன் கூடிய தொழில்சார் நிபுணத்துவ பெருந்தோட்ட முகாமைத்துவ முறைமை சிறுஉடமைகளின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான பொருத்தமான வேளாண் முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு நன்மை பயப்பதாக இருக்கும். மேலும், பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்காக உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்பு முறைமைகளை அறிமுகப்படுத்துவது உற்பத்தியாக்கத்தை அதிகரிக்கும் விதத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களின் மனோபாவத்தைத் தூண்டுவதற்கு அவசியமாகும்.

**தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்கு பயிர்ச்செய்கை சபை என்பன 2017இல் தெங்குத் துறையில் அவற்றின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன.** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு வெலிகம தென்னோலை வாடல் நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து அவ்வாறு பாதிக்கப்படாத பிரதேசங்களுக்கு அப்பால் நோய் பரவுவதை தடுக்கும் விதத்தில் தொடர்ந்தும் தாங்கிருப்பு வலையமொன்றினைப் பேணியது. இத்திட்டத்தின் கீழ் 4,081 நோய்வாய்ப்பட்ட மரங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 3,033 நோய்வாய்ப்பட்ட மரங்கள் அகற்றப்பட்டன. அதேவேளை, 20,000 எக்டேயர்கள் வரையில் இலங்கை எண்ணெய்த் தாவரப் பயிர்ச்செய்கையினை விரிவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானமொன்றிற்கிணங்க தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் மேற்பார்வையின் கீழ் 2017ஆம் ஆண்டில் ஐந்து பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்காக 259,900 எண்ணெய்த் தாவர விதைகளை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், எண்ணெய்த் தாவரப் பயிர்ச்செய்கையின் சூழல் தாக்கம் தொடர்பில் விஞ்ஞான ரீதியான ஆய்வொன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாண்டுப்பகுதியில் தெங்கு பயிர்ச்செய்கைச் சபை உற்பத்தி இயலாற்றலை அதிகரிப்பதற்காக காசு அடிப்படையில் விதை தேங்காய்களை விநியோகிக்கும் அளவினை அதிகரிப்பதற்கு கொள்கைத் தீர்மானமொன்றினை மேற்கொண்டது. மேலும், குறுங்கால தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மண் பாதுகாப்பிற்கான உதவுதொகைத் திட்டம், சேதன வளமாக்கி மற்றும் தொலைமைற் பிரயோக ஊக்குவிப்பு மற்றும் சுட்டு நீர்ப்பாசன முறைமைகள் என்பனவற்றிற்காக உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வளமாக்கி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெங்கு பயிர்ச்செய்கைச் சபை 170,855 நன்மைபெறுநர்களை உள்ளடக்கி ரூ.480 பில்லியன் கொண்ட காசு உதவுதொகைகளை பகிர்ந்தளித்தது. எனினும், உற்பத்தித்திறன் மிக்க தெங்கு நிலங்கள் அண்மைய காலங்களில் துண்டாடப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது தெங்கு உற்பத்தியின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும். அதேவேளை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெங்கு, இறப்பர் மற்றும் தேயிலை கைத்தொழில்களிலுள்ள உலகளாவிய பங்காளர்கள் வலையமைப்பு மற்றும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல், கைத்தொழில் தொழிற்பாடுகளின் பல்வேறு அம்சங்கள் தொடர்பிலான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் வர்த்தகப்பொருட்காட்சி 2017இனை ஒழுங்கு செய்தது.

**2017இல் அரசாங்கம் சீனி உற்பத்திக்காக சிறந்த முறையில் அமைக்கப்பட்ட உபாயங்களுடன் அதன் உதவிகை அதிகரித்துக் கொண்டது.** 2017ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு நாளொன்றிற்கு குறைந்தபட்சம் 2,000 மெ.தொன் கரும்பினைப் பிழியும் பொறி இயலாற்றலுடன் மொனராகலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள சீனித் தொழிற்சாலைகளில் முதலீடு செய்வதற்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தது. அரசாங்கம் வெளிப்பயிர்ச்செய்கையாளர் முறைமையின் கீழ் கரும்பினைப் பயிர்செய்வதற்கு அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் நிலத்தினை வழங்கும். அதேவேளை, முதலீட்டுச் சபை கந்தளாய் சீனித் தொழிற்சாலையினை அரச தனியார் பங்குடமை அடிப்படையில் மீளநிறுவுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கையொன்றினை செய்திருக்கிறது. விலைத் தளம்பல்கள், வானிலை நிலைமைகள், நோய் மற்றும் யானைகளின் தாக்கங்கள் என்பனவற்றின் மூலம் ஏற்படும் மோசமான தாக்கங்களிலிருந்து கரும்பு செய்கையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு சீனி சமநிலைப்படுத்தும் நிதியமொன்றினை உருவாக்குவதற்காக அரசாங்கமும் சீனி இறக்குமதிக்காக 2 சதவீத செஸ் தீர்வையொன்றினையும் எதனோல் இறக்குமதிக்காக 5 சதவீத செஸ் தீர்வையொன்றினையும் விதித்திருக்கிறது. உள்நாட்டு, கரும்புப் பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிற்சாலை விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் மெ.தொன் கரும்பிற்கு ரூ.5,000 குறைந்தபட்ச விலையினை 2017 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அதிகாரவரம்பின் கீழ்வரும் கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் அரசாங்கத்தின் புதிய சீனித் துறை கொள்கையைப் பிரதிபலிக்கும் விதத்தில் 1981ஆம் ஆண்டின் 75ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவகச் சட்டத்தினைத் திருத்துவதற்குத் தேவையான செயன்முறைகளை தொடங்கியிருக்கிறது. அதேவேளை, கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் கருப்பட்டி உற்பத்திக்காக ஐந்து கரும்பு வகைகளையும் சீனி

உற்பத்திக்காக மேலும் ஐந்து வகைகளையும் வெற்றிகரமாக அடையாளம் கண்டிருக்கிறது. இவை வர்த்தக உற்பத்திக்காக 2017இல் வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும், கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் வேளாண்மையாளர்களுக்கு கரும்பு விதைகளை வழங்குவதற்காக அடிப்படை விதைகளை உற்பத்தி செய்திருப்பதுடன் நாற்றுமேடைகளையும் பேணி வருகிறது. பூச்சிக் கொல்லிகளின் தாக்கத்திற்கெதிராக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் பாகிஸ்தானிலுள்ள பூச்சிகளை அடையாளம் காணும் பணிகளின் உதவியுடன் இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் பூச்சிகொல்லி மற்றம் நோய் அளவீடுகளை நடாத்தியதுடன் இதற்கு முன்னர் அறிவிக்கப்படாத இரண்டு இலை துளைப்பான் நோய்களை அடையாளம் கண்டிருக்கிறது. 2017ஆம் ஆண்டுமுழுவதும் கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் மூலிகை தொடர்பான நடவடிக்கைகள், பொருத்தமான மண் நிலைமைகள், விதைகள் வேறுபட்ட புவியியல் பிரதேசங்களுக்கான செலவு மற்றும் வருமான மதிப்பீடுகள் என்பனவற்றை மேற்கொண்டது. கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் சீனி பெறும் வீதத்தினை அதிகரிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கள செய்முறை விளக்கங்கள், சரியான வளமாக்கி பிரயோகம் என்பன தொடர்பில் வேளாண்மையாளர்களுக்கு அறிவூட்டியது. இவ்வாண்டுப்பகுதியில் கல்லோய பெருந்தோட்ட லிமிடெட் எதனோல் வடிசாலையைக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டத்தினை நிறைவுசெய்தது. கரும்புப் பயிர்ச்செய்கைக்காக நீர்ப்பாசன வசதிகளை வழங்குவது சீனி பெறும் வீதத்தினையும் ஒட்டுமொத்த உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மோசமான வானிலை நிலைமைகளின் தாக்கத்தினைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதற்கும் நீர்ப்பாசன வசதிகளை வழங்குவது மிகச் சிறந்ததொரு முறையாக இருக்கும். பெல்வத்தை பிளாண்டேஷன் "கல்அமுன" கால்வாய்ச் செயற்றிட்டத்தைக் கட்டும் வேலை தொடங்கியிருக்கிறது. மேலும், குறைந்தபட்சம் நான்கு அமைச்சுக்கள் வேறுபட்ட தொழிற்சாலைகளையும் சீனி தொடர்பான ஆராய்ச்சிகளையும் மேற்பார்வையிட்டு வருவதனால் உள்நாட்டுச் சீனி தொழிற்துறையினை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் பாராட்டத்தக்கத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு தெளிவான திரட்டப்பட்ட உபாய நெறிப்படுத்தல்களுடன் கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியைப் பேணுவது அவசியமானதாகவிருக்கும்.

**வேளாண்மைத் துறைக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வேளாண்மைத் திணைக்களம் பல நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.** வேளாண்மைத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக வேளாண்மைத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. பன்னாட்டு வேளாண்மை தொடர்பான குறுகிய செயற்றிட்டங்களின் கீழ் ராஜாங்கனையில் அரிசி பதனிடல் நிலையமொன்று நிறுவப்பட்டதுடன் அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெரிய வெங்காய விதை தயாரிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மைத் திணைக்களம் காலநிலையினை எதிர்த்துநிற்கக்கூடிய வேளாண்மையுடன் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் ஏனைய களப்பயிர்களின் புதிய வகைகளையும் வீட்டுத்தோட்டப் பயிர்களையும் இவ்வாண்டுப்பகுதியில் வெளியிட்டது. பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்ட ஒப்பந்தத்தின் கீழ் வேளாண்மைத் திணைக்களம் 3,340.9 மெ.தொன் சான்றுபடுத்தப்பட்ட நெல் விதைகளையும் 789.9 மெ.தொன் பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றுபடுத்தப்பட்ட ஏனைய களப் பயிர் விதைகளையும் 3.9 மெ.தொன் நியம காய்கறி விதைகளையும் கொள்வனவு செய்தது. வேளாண்மையாளர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேளையில் "ஹெல போஜுன்" விற்பனை நிலையங்கள் தொடர்பில் 30 பெண்கள் அமைப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. சிறந்த வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்புத் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் 146 பண்ணைகள் உறுதிப்பட்டிருப்பதுடன் சிறந்த வேளாண்மை நடைமுறைகளை செயன்முறைப்படுத்துகின்ற 22 பண்ணைகள் நிறுவப்பட்டிருக்கின்ற வேளையில் ஆர்வலர்களுக்கு சிறந்த தகவல்கள் கிடைப்பதனை வசதிப்படுத்துவதற்காக வர்த்தகப் பண்ணை தொடர்பில் தரவுத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. நெல் ஏனைய களப்பயிர்கள் மற்றும் சிறு உடமையாளர்கள் தேயிலை, தெங்கு, மற்றும் இறப்பர் என்பன உள்ளிட்ட பயிர்களுக்கு இவ்வாண்டுக்காலத்தில் வளமாக்கிக் காசு கொடைத்திட்டம் தொடர்ந்தும் வழங்கப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தின் கீழான அரசாங்கத்தின் செலவினம் ஏறத்தாழ ரூ.30.4 பில்லியனாகக் காணப்பட்டது. எனினும், 2017/18 பெரும்போகத்தில் வளமாக்கிப் பற்றாக்குறை காணப்பட்டமையானது நாட்டில் வேளாண்மையாளர்களுக்கு வளமாக்கியை வழங்குவதற்கு இன்னும் வினைத்திறன்மிக்க பொறிமுறையொன்று அவசியமென்பதனை எடுத்துக்காட்டியது. சேதன வேளாண்மையினை ஊக்குவிக்கும் நோக்குடன் வேளாண்மை அமைச்சு சேதன வளமாக்கி உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ந்ததுடன் வேளாண்மைத் திணைக்களம் வளமாக்கி விதந்துரைப்புக்களை மீளமதிப்பிடுவதற்காக மாவட்ட மட்டங்களில் 20 மண் பரிசோதனை ஆய்வுகூடங்களை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. அதேவேளை, சேதன வளமாக்கியின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக மாகன்துறையில் உன்னதத்திற்கான நிலையத்தில் சேதன வேளாண்மை பற்றிய கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது.

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் நாட்டின் நீர்ப்பாசன உட்கட்டமைப்பினை மேம்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் பல வழிமுறைகளை மேற்கொண்டது.** மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மொறகஹந்த - களுகங்கை செயற்றிட்டத்தின் கீழ் மொறகஹந்த நீர்த்தேக்கத்தின் கட்டுமான வேலைகள் ஏற்கனவே

நிறைவுசெய்யப்பட்டதுடன் களுகங்கை நீர்த்தேக்க கட்டுமானம் இடம்பெற்றுவருகின்றது. இது 2018இன் நடுப்பகுதியளவில் நிறைவுசெய்யப்படும். இதன்படி, மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள வரண்ட வலய பிரதேசங்களுக்கு வேளாண்மை மற்றும் குடிநீர் நோக்கங்களுக்காக இனிவரும் ஆண்டுகளில் நீரை மாற்றல் செய்வதற்கான மேல் எலஹெர கால்வாய் நிருமாணிக்கப்படும். இதன்படி, வடமாகாணத்திலுள்ள மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை மேலும் உயர்த்துவது தொடர்பில் இச்செயற்றிட்டம் உதவுமென்பதுடன் வரட்சியினாலும் போதுமான பாதுகாப்பான நீர் இல்லாமையினாலும் பாதிக்கப்படும் பாரிய குடித்தொகையினருக்கு குடிநீரை இது வழங்கும். அதேவேளை, வரவு செலவுத்திட்டம் - 2018 சொட்டு நீர்ப்பாசனம், மழைநீர் சேமிப்பு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பன உள்ளிட்ட கிராமிய நீர்ப்பாசன அபிவிருத்தியின் கீழான நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் உதவுவதற்காக ரூ.2.0 பில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிந்தது. நீர்ப்பாசனத் திணைக்களம், அப்பிரதேசங்களில் நீர்ப்பாய்ச்சப்பட்ட நீர்மூலவளங்களின் கிடைப்பனவினை மேம்படுத்துவதற்காக பொலனநறுவை மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்றிட்டத்தினையும் மொனராகலை மாவட்டத்திலுள்ள விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்றிட்டத்தினையும் ஆரம்பித்துள்ளது.

2

**அரசாங்கம் கொள்கை வழிமுறைகளினூடாக பண்ணைக் கைத்தொழிலுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்ததுடன் விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஆதரவுப் பணிகளையும் வழங்கி வருகிறது.** அரசாங்கம் பண்ணை வேளாண்மையாளர்களுக்கு செலுத்திய உத்தரவாத விலையினை 2017 யூனிலிருந்து 1 லீற்றர் பாலுக்கு ரூ.70.0 இற்கு அதிகரித்தது. இவ்வழிமுறையானது பண்ணை வேளாண்மையாளர்களுக்கு வரவேற்கத்தக்க ஊக்குவிப்பொன்றாக அமைந்ததுடன் இத்துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்தது. அரசாங்கம் உயர் விளைச்சலைத்தரும் கால்நடைகளை இவ்வாண்டுப்பகுதியில் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதேவேளை, தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி சபை, தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் குறைந்த பயன்பாட்டிலுள்ள காணிகளைப் பயன்படுத்தி அரச தனியார் பங்குடமையினூடாக பண்ணை அபிவிருத்தி வலயங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை இறுதிப்படுத்தியிருக்கிறது. கோழிப்பண்ணைத் தொழில் துறைக்கு உதவும் பொருட்டு அரசாங்கம் 2017இல் இலங்கைக்கு சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தது. விலங்குவளர்ப்பு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், அரசாங்கத்தின் விலங்கு வளர்ப்புத் துறை முதன்மைத் திட்டத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறது. புதிய கால்நடை அலுவலகமொன்று கேகாலை மாவட்டத்தில் நிறுவப்பட்ட வேளையில் மேலும் ஏழு கால்நடை பணி அலுவலகங்கள் நாடு முழுவதும் தற்பொழுது நிறுவப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியை உத்வேகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற விலங்கு வளர்ப்பு (பண்ணை) இனப்பெருக்கச் செயற்றிட்டத்தின் மூலமாக செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையங்கள், இயற்கை இனப்பெருக்கத்திற்காக எருதுக்கன்றுகளின் இனப்பெருக்க ஆற்றலைப் பரீட்சித்தல் மற்றும் கிருமி நீக்க அபிவிருத்திகள் என்பனவற்றினைப் பலப்படுத்துவதன் மூலமாக மேற்கொள்ளப்படும். கன்னிப் பசுக்கன்றுகளின் வளர்ப்புச் செயற்றிட்டதினூடாக செயற்கை முறையில் பிறந்த பசுக்கன்றுகளுக்கு உணவூட்டி அவற்றை வளர்ப்பதற்கு வேளாண்மையாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. விலங்கு உற்பத்தி, சுகாதாரத் திணைக்களமும் விலங்குகளுக்கு நோய்த்தடுப்பு மருந்து வழங்கல், பண்ணைகளில் நிலவும் மாட்டுவாய் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. உயர்ந்த பறவைக்காய்ச்சல் நோய்க்கு உட்பட்ட விலங்குகளை தனியாக்கி அவற்றைக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மீன்பிடி மற்றும் நீரியல் மூலவள அமைச்சு, உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி நோக்கங்களுக்காக மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் மீன்பிடி சமூகத்தினருக்கு நலன்புரிகளை வழங்கியதுடன் பன்னாட்டு ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச்செல்வதனையும் உறுதிப்படுத்தியது.** ஏற்றுமதிச் சந்தைகளை நீண்ட காலத்திற்குப் பெற்றுக்கொள்வதும் அவற்றை பாதுகாப்பான முறையில் அணுகுவதும் தீங்கற்ற மீன்பிடி நடைமுறைகளை பின்பற்றுவதிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கும். ஆகவே, மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு நீண்ட கால ஆற்றல்வாய்ந்த மீன்பிடி தொழில் துறையை உறுதிப்படுத்துவதற்கும் பாதுகாப்பினை நடைமுறைக்கிடுவதற்கும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. மீன்பிடி மற்றும் நீரியல் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிக்கும் முறையினை (மீன்களைக் கவர்வதற்காக நீரின் கீழ் வலுவான வெளிச்சத்தினைப் பயன்டுத்தல்) 2017 திசெம்பரில் தடைசெய்ததுடன் டைனமிக் வெடிகளை வெடிக்கச் செய்து மீன்களை பிடிக்கும் முறையினைத் தடைசெய்வதற்காக ஆண்டு முழுவதும் இலங்கைக் கடற்படையின் மூலம் திடீர் பரிசோதனைகளையும் நடாத்தியது. மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு அளவுக்கதிகமான மீன்பிடிகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மீன்பிடி விபரங்களைப் பதிவுசெய்தல், மீன்பிடி நடவடிக்கைகளைக் கண்காணிப்பினை இயலச்செய்தல் என்பனவற்றிற்காக பல நாள் மீன்பிடிக் கலம்களுக்கு 2,328 இ-பதிவுக் குறிப்புக்களை விநியோகிப்பதற்காக ரூ.78 மில்லியனைச் செலவிட்டது. மீன்பிடி

மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு, பன்னாட்டுச் சட்டங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் டொல்பின் மீன்பிடி வலைக்குள் அகப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சிறப்புக் கருவிகளுடன் கூடிய மீன்பிடி உபகரணங்களை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறது. அதேவேளை, அலங்கார மீன் இனப்பெருக்க மையத்தினைப் புத்தளத்தில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் இவ்வாண்டுப்பகுதியில் நிறைவடைந்தன. இது, ஏற்றுமதி நோக்கங்களுக்காக அத்தகைய மீன்களை இனப்பெருக்கம் செய்வதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. சட்டத்திற்கு மாறான விதத்தில் இலங்கை நீரில் மீன்பிடிக்கும் வெளிநாட்டு படகுகளின் மீதான தண்டப் பணத்தினை அதிகரிக்கும் விதத்தில் 1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க மீன்பிடிகள் (வெளிநாட்டு மீன்பிடி படகுகள் தொடர்பான ஒழுங்குவிதிகள்) சட்டத்தினைத் திருத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திருத்தங்கள் இயற்றப்படும் பொழுது சட்டத்திற்கு மாறான விதத்தில் இலங்கைக் கடலுக்குள் நுழையும் வெளிநாட்டு மீனவர்கள் கட்டுப்படுத்தப்படுவர். மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு 68 ஒப்புதலளிக்கப்பட்ட வசதிகளும் 8 அங்கீகரிக்கப்பட்ட பரீட்சிப்பு ஆய்வுகூடங்களும் ஏற்றுமதி நோக்கங்களுக்காக மீன்பிடி பதனிடலில் பொருத்தமான நியமங்களின் கீழ் தொழிற்பட்டு வருகின்றன என்பதனை உறுதிப்படுத்துகிறது. மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு ஆதரவளிப்பதற்காகவும் மீன்பிடி சமூகத்தினரின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறது. மீன்பிடித் துறைமுகங்களின் கட்டுமானம், துறைமுகங்களின் தரமுயர்த்தல் நங்கூரம் பாய்ச்சும் இடங்களின் கட்டுமான என்பன 2017இல் முன்னேற்றம் கண்டன. மீன்பிடியின் பின்னரான இழப்புக்களைக் குறைப்பதற்காக மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு மீனவர்களுக்காக பயிற்சியையும் விழிப்புணர்வினைக் கட்டியெழுப்பும் பிரச்சாரங்களையும் மேற்கொண்டதுடன் உதவுதொகைத் திட்டத்தின் கீழ் எந்திரவியல் நிருமாணங்களுடன் கூடிய சிறந்த குளிரூட்டப்பட்ட களஞ்சியப்படுத்தல் வசதிகளுடன் கூடிய 100 பல நாள் மீன்பிடிக் கலம்களை தரமுயர்த்திய வேளையில் மீன்பிடிக் கிராமங்களின் தரையிறங்கும் இடங்களை மேம்படுத்தியதுடன் கட்டணமற்ற களஞ்சியப்படுத்தல் வசதிகளையும் வழங்கியது. மீனவ சமூகத்தினரின் நலன்புரிகளை உயர்த்தும் பொருட்டும் மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் விதத்திலும் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. இது வீடுகளை நிருமாணித்தல் மற்றும் புதுப்பித்தல், கடன்களைப் பகிர்ந்தளித்தல், படகுகளை மற்றும் மீன்பிடிக் கருவிகளை வழங்கல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. வட மாகாணத்தின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீன்பிடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுடன் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, 2016இல் ஆரம்பிக்கப்பட்ட “விவெக் சமக கமக்” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 168 செயற்றிட்டங்களுக்காக மாவட்டச் செயலகங்களுக்கு ரூ.251.8 மில்லியன் விடுவிக்கப்பட்டது.

**தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை இலங்கையரின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மட்டங்களுக்கு உதவியளிப்பதற்காக முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்திய வேளையில் இலங்கையின் நீரியல் வள மூலவளங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்து வருகிறது.** வெள்ளைப்புள்ளி நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் கூனி இறால் மற்றும் இறால் தொழில் துறையினை புனரமைப்பதற்காக 2016இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக தேசிய நீரியல் மூலவள அபிவிருத்தி அதிகாரசபை 2017இல் டச்சுக் கால்வாயை தூர்வாரியமை பயிர்செய்கை கலண்டர் மற்றும் வலயப்படுத்தலை அறிமுகப்படுத்தியமை, கூனி இறால் வளர்ப்பிடங்களை ஒழுங்குபடுத்தியமை, கூனி இறாலின் ஆரம்ப கட்ட நிலையினையும் குஞ்சு பொரித்தல் நிலையினையும் நுணுகி ஆராய்தல் மற்றும் பட்டுலோயாவிலுள்ள கூனி இறால் நோய் அடையாளப்படுத்தல் மற்றும் சுகாதார முகாமைத்துவ ஆய்வுகூடத்தினூடாக வேளாண்மையாளர்களுக்கு பணிகளை வழங்குதல் போன்ற மேலும் வழிமுறைகளை 2017இல் மேற்கொண்டது. அதேவேளை, நன்னீர் இறால் வளங்களை அதிகரிப்பதற்கும் கிராமிய சமூகத்தினரின் உயர்ந்த வருமானத்திற்கு வழிகளை வழங்குவதற்குமாக 2017இல் திருகோணமலையின் கல்லாறு நன்னீர் இறால் இனப்பெருக்க மையம் ஏற்படுத்தப்பட்டது. 2017 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை மன்னாரில் நீரியல் வளக் கைத்தொழில் பூங்காவொன்று தொடர்பில் திட்டமிடல் வேலைகளை மேற்கொண்டதுடன் அம்பாந்தோட்டையிலும் மட்டக்களப்பிலும் நண்டு நகரங்களை உருவாக்கியது. தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபையினால் உடவளவையிலும் மருதவெல்லவிலும் ஏற்படுத்தப்பட்ட இரண்டு நீரியல் வாழ் மூலவள அபிவிருத்தி நிலையங்கள் 2017இல் தொழிற்படத் தொடங்கியதுடன் சுற்றாடலிலுள்ள நீர்த்தேக்கங்களுக்கு மீன் முட்டைகளையும் வழங்கியது. அதேவேளை, இதேபோன்ற இன்னொரு மையம் செவனப்பிட்டியவில் நிருமாணிக்கும் வேலைகள் 2017 இலும் தொடர்ந்தன. உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2016 - 2018இன் கீழ் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை நான்கு திலெப்பியா நீரியல் வாழ் அபிவிருத்தி மையங்களைப் புதுப்பித்தது. லூலா மற்றும் வலாயா போன்ற சுதேச இன வகைகள் பற்றிய புதிய வகைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு உயர்தர இனப்பெருக்கங்களை உற்பத்தி செய்வதற்காகவும் 2017இல் நன்னீர் மீன் மரபு அபிவிருத்தி நிலையமொன்று தம்புல்லவில் நிருமாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், தேசிய

நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை ஏற்கனவேயிருக்கு 650 இற்கு மேற்பட்ட அலங்கார மீன்வளர்ப்புக் குளங்களுக்கு தரம் வாய்ந்த மீன் முட்டைகளையும் தாய்க் குஞ்சுகளையும் வழங்கும் பொருட்டு பொலநறுவையில் அலங்கார மீன்வளர்ப்பு பண்ணைகளை நிறுவுகின்ற வேலைகளைத் தொடங்கியது. அதேவேளை, மட்டக்களப்பில் பல்லின கடல் மீன்வளர்ப்புத் தொழிற்பாடுகள் ஆரம்பமாகின. இலங்கை தற்பொழுது ருனா மீன்பிடிக்கு அவசியமான அனைத்து மீன் உணவு வகைகளையும் இறக்குமதி செய்து வருவதனால் 2017இல் புத்தளத்தில் பால் மீன் வளர்ப்பு இனங்களை அடையாளம் காண்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அது டுனா மீன்பிடிக்குத் தேவையான மீன் உணவுகளை உற்பத்தி செய்வதற்கு உதவும். குறிப்பாக, ஏற்றுமதிச் சந்தைகளுக்கான மீனினை உற்பத்தி செய்வதற்கு உதவுகின்ற விதத்தில் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை அரச தனியார் பங்குடமையின் கீழ் கடலட்டை வளர்ப்பு மற்றும் கடல் இனப்பெருக்கப் பிரிவு என்பனவற்றை நிருமாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் சேற்றில் நண்டுகளை இனப்பெருக்கம் செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டது.

## கைத்தொழில்

**கைத்தொழில் நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2016இன் 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வளர்ச்சி முக்கியமாக தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் தூண்டப்பட்டது. அதேவேளை, கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளின் வளர்ச்சி முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் மெதுவடைநதமையினைக் காட்டியது. ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகள், மின்வலுவுடன் தொடர்பான நடவடிக்கைகள், வடிகால், நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கைகள் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் சாதகமான வளர்ச்சியொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தன.


## சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல நடவடிக்கைகள் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2016இன் 14.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 5.9 சதவீதம் கொண்ட மெதுவான விதத்தில் வளர்ச்சியடைந்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட மிதமான தன்மை இவ்வாண்டுப்பகுதியில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல நடவடிக்கைகளின் வளர்ச்சியை குறிப்பிடத்தக்களவிற்கு மோசமாகப் பாதித்தன. அளவு நியதிகளில் இரத்தினக்கல் ஏற்றுமதிகள் சுருக்கமடைந்த வேளையில் பொசுபேற்று, கிறபைற் என்பனவற்றின் உற்பத்தி 2017இல் சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. இது, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல நடவடிக்கைகளின் வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கமொன்றைக் கொண்டிருந்தது. எனினும், இல்மனைற், ரூரைல் மற்றும் சேர்கோன் என்பனவற்றின் உற்பத்தியில் பதிவுசெய்யப்பட்ட சாதகமான நேர்க்கணிய வளர்ச்சியிலிருந்தான பங்களிப்புடன் இவ்வாண்டுப்பகுதியில் கனிப்பொருள் மணல் உற்பத்தி குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தது. இது கனிப்பொருள் ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களில் பிரதிபலிக்கப்பட்டதுடன் 2016இல் 7.9 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் 18.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

## தயாரிப்பு

**பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2017இல் தயாரிப்பு நடவடிக்கைகள் 2016இன் 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு புடவைகள் தயாரிப்பு, அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகள் 2016இன் வளர்ச்சியான 1.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து முக்கியமாகப் பங்களித்தன. முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம் (GSP+) வசதி மீளக்கிடைத்தமையின் சாதகமான தாக்கம் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகளின் விரிவாக்கத்தினைக் குறிப்பாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் தூண்டின. மேலும், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 0.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2017இல் 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையானது இப்பிரிவின் வளர்ச்சிக்கு உதவியளித்தது. மேலும், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்புக்கள்

வரைபடம் 2.4
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது புலனுணர்வு அளவீட்டு அடிப்படையிலான கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் விதத்திர் இஅமைந்தது ஆகும். இந்த வியாபித்தல் சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியினை கொண்டிருப்பதோடு பொதுவான நடுநிலையான 50 இற்கு மேலான சுட்டெண் பெறுமதியானது ஒரு விரிவாக்கத்தைக் குறிக்கும் வேளையில் 50 இற்கு கிழான சட்டெண் பெறுமதியானது பொருளாதார நடவடிக்கைகளில் சுருக்கத்தினையும் குறிக்கின்றது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

தவிர்ந்த ஏனைய அனைத்துத் தயாரிப்பு வகைகள் மற்றும் தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மர உற்பத்திகள், தக்கைகள் என்பன தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன. அதேவேளை, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100) அதிகரித்ததுடன் தயாரிப்பு நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினை குறித்துக்காட்டுகின்றது. மேலும், இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்படும் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சட்டெண்ணும் இவ்வாண்டுப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டியது.

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் 2.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்[3] 2016இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதத்தினை விட சிறிதளவு குறைவானதாகக் காணப்பட்டது.** அணியும் ஆடைகள், புடவைகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் மின்னியல் சாதனங்கள் போன்ற ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகளின் சாதகமான செயலாற்றத்திற்கு சில நாடுகளில் காணப்பட்ட இயற்கை அனர்த்தங்கள் மற்றும் புவியியல்சார் அரசியல் பதட்டநிலை என்பனவற்றிற்கும் மத்தியிலும் மேம்பட்ட உலகளாவிய கேள்வி, உலகளாவிய பண்ட விலைகளின் படிப்படியான மீட்சி என்பன உதவியாக அமைந்தன. இவ்வாண்டுப்பகுதியில் மோசமான வானிலை நிலைமைகளினால் ஏற்படுத்தப்பட்ட வழங்கல்பக்க தடங்கல்களுக்கு மத்தியிலும் உள்நாட்டுக் கேள்வியைப் பூர்த்தி செய்வதில் கூடியளவு கவனத்தைச் செலுத்திய உணவு, ஏனைய உணவல்லா உலோக கனிப்பொருள் உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பனவும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் வளர்ச்சிக்கு வசதியளித்தன. இருப்பினும் கூட குடிபானங்கள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பெரும்பங்கினைக் கொண்டிருக்கும் உணவு உற்பத்திகளின் தயாரிப்பு 2016இல் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில்**

அட்டவணை 2.9
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)

| பிரிவு | 2016 | 2017 (அ) | மாற்றம் (%) 2015/16 | 2016/17 (அ) |
|---|---|---|---|---|
| 1 உணவு உற்பத்திகள் (35.2%) | 101.7 | 105.0 | 1.7 | 3.3 |
| 2 குடிபானங்கள் (3.8%) | 103.6 | 91.5 | 3.6 | -11.7 |
| 3 புகையிலை உற்பத்திகள் (1.7 %) | 105.1 | 106.3 | 5.1 | 1.2 |
| 4 புடவை (3.3%) | 104.0 | 106.4 | 4.0 | 2.3 |
| 5 அணியும் ஆடைகள (19.8%) | 105.7 | 110.7 | 5.7 | 4.7 |
| 6 தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.3%) | 106.0 | 111.9 | 6.0 | 5.6 |
| 7 தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்கள் தயாரித்தல், வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு (0.2%) | 99.1 | 93.7 | -0.9 | -5.5 |
| 8 தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (1.7%) | 111.0 | 108.4 | 11.0 | -2.3 |
| 9 அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (1.4%) | 103.6 | 106.9 | 3.6 | 3.2 |
| 10 சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (7.4%) | 99.1 | 94.3 | -0.9 | -4.8 |
| 11 இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள(4.1%) | 104.2 | 96.6 | 4.2 | -7.2 |
| 12 மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள (0.1%) | 109.1 | 111.1 | 9.1 | 1.8 |
| 13 இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (5.7%) | 103.7 | 108.0 | 3.7 | 4.2 |
| 14 ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.8%) | 104.7 | 111.5 | 4.7 | 6.5 |
| 15 அடிப்படை உலோகங்கள் (2.4%) | 108.1 | 120.8 | 8.1 | 11.7 |
| 16 பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (1.3%) | 99.3 | 115.8 | -0.7 | 16.7 |
| 17 இலத்திரனியல் சாதனங்கள் (2.0%) | 98.2 | 99.9 | -1.8 | 1.7 |
| 18 பொறி மற்றும் இயந்திரங்களின் உற்பத்தி (0.7%) | 106.7 | 112.4 | 6.7 | 5.4 |
| 19 தளபாட உற்பத்தி (0.8%) | 108.8 | 105.2 | 8.8 | -3.3 |
| 20 ஏனைய உற்பத்திகள் (0.3%) | 102.0 | 98.4 | 2.0 | -3.4 |
| **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | 103.3 | 105.8 | 3.3 | 2.5 |

(அ) திருத்தப்பட்டது


மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குறிப்பு : கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் ஆனது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2015 இனை அடியாண்டாகவும் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தலின் மீள்திருத்தம் 4இன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு தொகுக்கப்படுகின்றது.

**2017 காலப்பகுதியில் 3.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.** கோதுமை மா, விசுக்கோத்து, ஐஸ்கிறீம் மற்றும் பால்மா என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு அதிகரித்த நுகர்வோர் கேள்வி தூண்டுதலாக அமைந்து இச்செயலாற்றத்திற்கான முக்கிய காரணியாக விளங்கியது. அதிகரித்த பால்மா உற்பத்திக்கு இத்தொழில் துறையிலுள்ள முக்கிய உற்பத்தியாளரின் இயலளவு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 2016இல் 3.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த குடிபானத் தயாரிப்பு 2017இல் 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு சாராய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக இருந்தது. இனிப்பூட்டப்பட்ட குடிபானங்கள் மற்றும் குடிவகை மீது 2018 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட கலால் தீர்வை குடிபானத்தின் உற்பத்தியில் மேலும் பாதிப்பினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் பொருளாதாரத்தில் மிக முக்கியமானதொரு துறையாக விளங்கும் உணவு பதனிடல் மற்றும் குடிபானக்

3 தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் நாட்டின் தயாரிப்புத் துறையின் வெளியீட்டினை அளவிடுகின்றது. இது 2015ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் - தொடர்பு 4 இனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதன்படி, 2017 இலிருந்து தனியார் துறையின் பகுப்பாய்வு இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிற்குப் பதிலாக கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

வரைபடம் 2.5
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி



கைத்தொழில் அதன் நேரடி மற்றும் மறைமுக இணைப்புக்கள், தொழில் உருவாக்கம் அதேபோன்று நாட்டின் நலத் துறையினை மேம்படுத்தல் என்பனவற்றின் காரணமாக வேளாண்மைத் துறையின் எழுச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக இருந்து வருகிறது. உணவு மற்றும் குடிபானங்கள் துறை குறைந்த சீனி, கொழுப்பு மற்றும் உப்பு மற்றும் கூடியளவிற்கு இயற்கை சுவையூட்டிகள் மற்றும் சேதன உணவுகள் என்பனவற்றுடன் கூடிய ஆரோக்கியமான உணவு உற்பத்திகளுக்கு உலகளாவிய ரீதியிலும் உள்ளூர் ரீதியாகவும் அதிகரித்த முன்னுரிமைகளுடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வாய்ப்புக்களை வழங்குகிறது. இலங்கை அநேக பாரம்பரிய மற்றும் மூலிகை உணவு/ குடிபான வகைகளையும் வேளாண்மை பயிர்ச்செய்கை நடைமுறைகளையும் கொண்டிருப்பதுடன் இவை வளர்ந்துவரும் இச்சந்தைக்கு பொருட்களை வழங்கக்கூடியனவாகவும் இருக்கின்றன. எனவே, உள்ளூர் தயாரிப்பாளர்கள் இந்நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அதேவேளையில் இத்தொழில் துறையில் தோற்றம்பெற்றுவரும் மற்றும் பரிணாமம் அடைந்துவரும் வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு உணவு பதனிடல் மற்றும் குடிபானக் கைத்தொழிலிலுள்ள உலகளாவிய தர நியமங்களுடன் இணங்கிக் கொள்ளுதலும் வேண்டும்.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் அடிப்படையில் அணியும் ஆடையின் தயாரிப்பு முன்னைய ஆண்டின் 5.7 சதவீத வளர்ச்சிக்கெதிராக 2017இல் 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** 2017 மேயில் ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முறைமை (GSP+) வசதி மீளக் கிடைக்கப்பெற்றமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அதேபோன்று ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் ஏனைய பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான அதிகரித்த ஏற்றுமதிகள் இவ்வளர்ச்சிக்கு வசதியளித்தன. மறுபுறத்தில் புடவைகளின் உற்பத்தி 2017இல் 2.3 சதவீதமான வளர்ச்சியைப் பிரதிபலித்து 2016இல் அறிவிக்கப்பட்ட 4.0 சதவீத வளர்ச்சியினைவிடக் குறைவானதாக விளங்கியது. இவ்வளர்ச்சிக்கு குறிப்பாக, 2017ஆம் ஆண்டில் பின்னரைப்பகுதியில் இறுதியாக்கப்பட்ட துணிகள் மற்றும் அச்சிடப்பட்ட துணிகளின் அதிகரித்த உற்பத்தி முக்கிய தூண்டுதலாக அமைந்தது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா, கென்யா, துருக்கி மற்றும் வியட்நாம் என்பனவற்றிலிருந்து உள்ளூர் புடவைகளுக்கு ஏற்பட்ட ஆரோக்கியமான கேள்வி இவ்விரிவாக்கத்திற்கு உதவியது. ஆடை மற்றும் புடவைத் தயாரிப்பு விரைவான நகர்வுகளைக் கொண்ட இயக்கவாற்றல்மிக்கதொரு கைத்தொழிலாகக் காணப்படுகிறது. இக்கைத்தொழிலுக்கு வெற்றியை அளித்த பல்வேறு வகையான காரணிகளுடன் விலைப்போட்டியை எதிர்கொள்வதற்கான உற்பத்தித்திறன் அதிகரிப்பு விரைவாக மாற்றமடையும் வாடிக்கையாளர் முன்னுரிமைகளுக்கு விரைவாக பதிலிறுத்துவதற்காக சந்தை விவேகங்கள், உற்பத்தி மற்றும் வடிவமைப்பு அபிவிருத்திகள் இத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களித்த தீர்மானமிக்க சில காரணிகளாகும். விரைவுத்தன்மை மற்றும் நெகிழ்ச்சித்தன்மை ஆகிய நியதிகளில் இணையத்தள விற்பனைத் தளங்கள் மற்றும் விரைவான மோஸ்தருக்கான கேள்வி என்பன தொடர்பில் அதிகரித்துவரும் பிரபல்யத்தன்மை என்பன முழு வழங்கல் சங்கிலிக்கும் சவால்மிக்கனவாகவும் இருக்கின்றன. அதேநேரம் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளை சூழல் சிநேகபூர்வ தன்மையுடையதாக்குவதற்கு உற்பத்தி விநியோகத்திற்கு மூலங்களிலிருந்து நீடித்துநிலைத்திருக்கக்கூடிய தயாரிப்பு வழங்கல் சங்கிலிகளில் முன்னுரிமையைப் பெற்றுவருகின்றன. எனினும், தொழிலாளர்களின் அருந்தல் தன்மைக்கு மத்தியில் அதிகரிக்கின்ற தொழிலாளர் செலவுகள் உள்ளூர் கைத்தொழில்களுக்கு சவால்மிக்கதொன்றாக மாறிவருகின்றது. எனவே, தொழில்நுட்பம், தன்னியக்கப்படுத்தல் மற்றும் றோபோக்களில் முதலீடுகளை மேற்கொள்வது உலகளாவிய சந்தையில் தொடர்ந்தும் போட்டித்தன்மையுடைதாக இருப்பதற்கு கைத்தொழில்களுக்கு உதவும்.


**ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளின் உற்பத்தி முன்னைய ஆண்டின் 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 6.5 சதவீத குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தது.** ஆண்டின் முதலரைப்பகுதியில் சிமெந்து, கூரை ஓடுகள், சுவர் ஓடுகள், தரை ஓடுகள் போன்ற கட்டுமான மூலப்பொருட்களின் அதிகரித்த உற்பத்திகள் அண்மையக் காலத்தில் கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் தூண்டப்பட்டு இச்சாதகமான செயலாற்றத்திற்கு பங்களித்தன. அதேநேரம், இவ்வாண்டுப்பகுதியில் கண்ணாடிக் குவளைகள் மற்றும் கண்ணாடிப்பொருட்களுக்கு உள்நாட்டிலும் அதேபோன்று இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்தான ஏற்றுமதிக் கேள்வியும் உயர்வாகக் காணப்பட்டன. எனினும், 2017இன் இறுதிக் காலாண்டில் சிமெந்து, கூரை ஓடுகள், சுவர் ஓடுகள் மற்றும் தரை ஓடுகளின் குறைந்த உற்பத்தி 2017இன் பின்னரைப்பகுதியில் ஏனைய உலோகமல்லா கனிப்பொருட்களின் தயாரிப்பில்

எதிர்மறையான வளர்ச்சிக்கு வழிவகுத்தது. உலோகம் மற்றும் பிளாத்திக்பொருட்களுக்குப் பதிலாக கண்ணாடி மற்றும் மட்பாண்டப்பொருட்களுக்கான கேள்வி திரும்பியிருப்பது செலவுச்சிக்கனம் வாய்ந்த உயர்தர கண்ணாடி மற்றும் மட்பாண்டங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கு அதிகரித்த கேள்வியை உருவாக்கும். உயர்ந்த தர கண்ணாடி மற்றும் மட்பாண்ட உற்பத்தி செய்யும் நாடு என்ற ரீதியில் இலங்கை உலகளாவிய சந்தையில் மேலும் விரிவாக்கிக் கொள்வதற்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கிறது. எனினும், இலங்கையின் போட்டித்தன்மை உயர்ந்த வலுச் செலவினால் சவாலுக்குட்படுத்தப்படுவதுடன் இதன் காரணமாக பன்னாட்டுச் சந்தையில் போட்டித்தன்மையுடையதாக இருப்பதற்கு வலுச் சிக்கனமானதும் சூழல் சிநேகபூர்வ தொழில்நுட்பங்களைக் கொண்டதுமான முறைமைகளைப் பின்பற்றுவது அவசியமானதாகும். அதேநேரம் தொழில் துறையானது நுகர்வோர் சார்ந்த தனித்துவமான உற்பத்திகளையும் வடிவமைப்புக்களையும் கொண்ட பெறுமதிமிக்க சிறிய சந்தைகளின் மீது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு 2016இன் 0.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அநேக தொழிற்பாட்டுத் தலைகளினால் தடங்கலுற்று தூய்மி தற்காலிகமாக மூடப்படுவதற்கு வழிவகுத்தது. எனினும், புதுப்பிக்கப்பட்டமையின் காரணமாக மேம்பட்ட சுத்திகரிப்பு வினைத்திறன் 2017இன் இறுதிக்காலாண்டில் உயர்ந்த வெளியீட்டினைத் தோற்றுவித்தது.

**இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு 2016இன் 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலும் பார்க்க 2017இல் 4.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** இறப்பர் டயர்களின் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினை

வரைபடம் 2.6
முக்கிய பிரிவுகளின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இக்காலப்பகுதியில் காட்டியமைக்கு ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரேசில் மற்றும் ஐரோப்பிய சந்தைகளுக்கான மேம்பட்ட ஏற்றுமதியும் அதேபோன்று உள்ளூர் சந்தைகளுக்கான கேள்வியும் பெருமளவிற்கு உதவியாக அமைந்தன. மேலும், 2017ஆம் ஆண்டுப்பகுதியில் இறப்பர் கையுறைகளுக்கான உற்பத்தியில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு ஐக்கிய அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் கனடாவிலிருந்தான உயர்ந்த ஏற்றுமதிக் கேள்விகளே முக்கிய காரணமாக அமைந்தன. உலகளாவிய சந்தையில் உயர்ந்த தரம் மற்றும் நம்பகத்தன்மை வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களையும் நாட்டின் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குவதற்கு உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருப்பதும் இலங்கையில் இறப்பர் உற்பத்திகள் தனிப்பெரும் புகழை ஈட்டியிருக்கின்றன. தற்பொழுது இத்துறையானது தொழிலாளர்களின் உயர்ந்த செலவு, தேர்ச்சிபெற்ற தொழிலாளர் பற்றாக்குறையாக இருப்பது, குறைந்த உற்பத்தித்திறன் போன்ற பல சவால்களை எதிர்நோக்குகிறது. இதனால் நீடித்தநிலையான விதத்தில் உலகளாவிய சந்தையில் போட்டித்தன்மையை ஈட்டிக் கொள்வதற்கும் உயர் பெறுமதிச் சங்கிலிகளைக் கொண்ட உற்பத்திகளை நோக்கி முன்னேறுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது அவசியமாக இருக்கின்ற அதேவேளையில் உலகளாவிய நியமங்களுக்கு இணங்கியொழுகுவது அவசியமானதாகும். இவ்விலக்கினை அடைவதற்கு புதிய தொழில்நுட்பங்கள் மீது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள் மீது குறிப்பிடத்தக்க முதலீடுகளை மேற்கொள்வது இன்றியமையாததாக இருக்கின்ற அதேவேளையில் இலங்கை இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கு உலகளாவிய வர்த்தக நாமங்களை கட்டியெழுப்பும் நோக்குடன் உற்பத்தித்திறனையும் பெறுமதிகூட்டலையும் மேம்படுத்துதல் வேண்டும்.

**2016இன் 4.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இரசாயன உற்பத்தி மற்றும் இரசாயன உற்பத்திப்பொருட்கள் 7.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** இதற்கு வளமாக்கிக்கான குறைந்த கேள்வியும் இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக குறைவடைந்த வேளாண்மை நடவடிக்கைகளும் வளமாக்கி பதனிடலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன. அதேநேரம், தீந்தைகளின் தயாரிப்பும் கூட பெருமளவிற்கு வீழ்ச்சியைப் பதிவுசெய்து இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பின் வளர்ச்சியை தளர்வுறச் செய்தன. எனவே, தீந்தைகளுக்கான உள்நாட்டுக் கேள்வி இறக்குமதிகளினூடாகப் பெருமளவிற்கு பூர்த்தி செய்யப்பட்டது.

**அடிப்படை உலோகத் தயாரிப்புக்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 8.1 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டியது.** ஈயத்தின் அதிகரித்த உற்பத்தி அலுமினியம் நீங்கலான உற்பத்திகள், அலுமினியச் சட்டங்கள் மற்றும்

2

உருக்குச் சட்டங்கள் இவ்வதிகரித்த வெளியீட்டினை மேலும் தூண்டின. மேலும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 2016ஆம் ஆண்டின் 0.7 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் உயர்ந்த வெளியீட்டினைக் காட்டின.

**மின்னியல் உபகரணங்களின் உற்பத்தி 2016இன் பலயீனமான செயலாற்றத்திலிருந்து மீட்சியடைந்து முன்னைய ஆண்டின் 1.8 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சிக்கெதிராக 1.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மின்னியல் பலகைத் தட்டுக்கள், மின்மாற்றிகள் மற்றும் மின்மாற்றிகளுடன் தொடர்பான கூறுகள் என்பனவற்றன் உற்பத்தியில் அதிகரிப்பொன்று இக்காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டது.** இவ்வாண்டுப்பகுதியில் இந்தியா, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றிற்கான பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் இதற்கு வசதியளித்தன. எனினும், 2017இன் இறுதிக்காலாண்டில் குறைவடைந்த வளர்ச்சிக்கு கம்பிச் சுருள் கருவிகள், மின்மாற்றிகள் மற்றும் பார கம்பி வடம்கள், தயாரிப்பில் காணப்பட்ட வீழ்ச்சி பெருமளவிற்குக் காரணமாயிற்று.

2

**2016இன் 5.1 சதவீதம் கொண்ட மெதுவான உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு 1.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** ஆண்டின் முதலரைப்பகுதியில் சிகரெட் உற்பத்திகள் குறிப்பிடத்தக்களவு பின்னடைவினைக் கொண்டிருந்தன. இதற்கு 2016 இலிருந்து உயர்ந்த வரிகளின் காரணமாக சிகரெட் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக நுகர்வோர் கேள்வி குறைவடைந்தமை காரணமாக இருக்கக்கூடும் எனினும், புகையிலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் 2017இன் பின்னரைப்பகுதியில் பெருமளவு ஏற்றுமதிச் சந்தைகளுக்கான புகையிலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் அதிகரித்த உற்பத்தியானது புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பில் வளர்ச்சியை ஏற்படுத்தின.

### கைத்தொழில் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**அரசாங்கம் தயாரிப்புக் கைத்தொழில் துறைக்கு ஆதரவளிப்பதற்காக, பௌதீக மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, நிதியிடல் மூலங்கள், சந்தையினை அணுகுதல் மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பனவற்றை அபிவிருத்தி செய்யும் இலக்குடன் பன்முக முயற்சிகளை நடைமுறைப்படுத்தியது.** வரவு செலவுத்திட்டம் - 2017, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் போட்டித்தன்மைகளைக் கட்டியெழுப்புதல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவளித்தல் என்பனவற்றிற்கான வழிமுறைகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், வரவு செலவுத்திட்டம் - 2018, தொனிப்பொருட்களில் ஒன்றான “தொழில்முயற்சி இலங்கை” இனைத் தெரிவுசெய்தமையின் மூலம் தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு முன்னுரிமையளித்திருக்கின்றது. முக்கியமான விடயம் யாதெனில், தொழில்முயற்சியாண்மையும் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதும் ஆரம்பப் பாடசாலை மட்டங்களிலிருந்து ஆரம்பமாக வேண்டும் என்பதனையும் மிகச் சமத்துவமான புத்தாக்கங்களை ஊக்குவிப்பதனையும் உயர்தர தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய உற்பத்தித்திறன் மிக்க பிரசைகளையும் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதலளிக்கும் விடயங்களையும் நோக்கி இலங்கையின் கல்விக் கொள்கையினை இயக்குவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளையும் அறிவித்திருப்பதாகும். பல்வேறுபட்ட அமைச்சுக்களும் நிறுவனங்களும் அவற்றின் அதிகாரவரம்பிற்குள், 2017 வரவு செலவுத்திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட பெரும்பாலான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கடுமையாக முயற்சித்த வேளையில் கைத்தொழில் துறையின் நீண்ட கால ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய முன்மொழிவுகள் சிலவற்றை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. இது அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்ட முக்கியமான கொள்கை நடவடிக்கைகளை தொழிற்படுத்துவது தொடர்பில் வலுவான ஆளுகைக்கும் பொறுப்புக்கூறும் தன்மைக்குமான தேவையினை வெளிப்படையாகக் காட்டுகிறது.

**கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அதன் அதிகாரவரம்பிற்குள் வரும் நிறுவனங்களுடன் சேர்ந்து கைத்தொழில்களுக்கும் தயாரிக்கப்பட்ட ஏற்றுமதிகளுக்கு ஊக்கமளிக்கும் விதத்திலும் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** தயாரிப்பு இயலாற்றலை மேம்படுத்தும் நோக்கடன் கூடிய முன்னெடுப்புக்கள் ராய்கமவிலுள்ள 200 ஏக்கர் தொழில்நுட்ப சிறப்பு வலையத்தின் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதனை இது நுகர்வோருக்கும் தொழில்நுட்ப உற்பத்திகளுக்கும் சமர்ப்பிக்கப்படும். அமைச்சு, போரினால் பாதிக்கப்பட்ட கிராமியப் பகுதிகளில் தனியார் துறை முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக வெலிஓயா, மட்டக்களப்பு மற்றும் முசலி ஆகிய இடங்களில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது. அதேவேளை, வர்த்தகக் கைத்தொழில் அமைச்சின் கீழ், கைத்தொழில் அபிவிருத்திச் சபை தற்பொழுதுள்ள 29 கைத்தொழில் பேட்டைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளைத் தரமுயர்த்துவதற்கு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. பொருத்தமான ஒழுங்குவிதிகளுடன் இலங்கையிலுள்ள பாரிய தயாரிப்புக் கைத்தொழிலாக விளங்கும் உணவு மற்றும் குடிபானக் கைத்தொழிலுக்கு ஆதரவு வழங்க வேண்டியதன் முக்கியத்துவம் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் கைத்தொழில் வர்த்தக அமைச்சு அங்கீகாரம் பெற்ற உணவு ஆய்வுகூடங்களைப் பூரணப்படுத்தியதுடன் சிறந்த தயாரிப்பு

நடைமுறைகள் சான்றுபடுத்தலைப் பெற்றுக்கொள்வதற்காக உணவுத் துறையிலுள்ள சிறிய கைத்தொழில்களுக்கு உதவியளித்தது. வரவு செலவுத்திட்டம் - 2017, கைத்தொழில் அபிவிருத்தி சபையூடாக, உட்கட்டமைப்புக்களை வழங்குவதன் மூலம் புடவைகள் மற்றும் கைத்தறி கைத்தொழிலை மீளவலுப்படுத்துவதற்காக ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு செய்தது. “சிறிய தொழிற்சாலைகளினூடாக பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்” செயற்றிட்டத்தின் கீழ் 2017இல் குறிப்பிட்ட மாவட்டங்களில் நிறுவப்பட்ட 150 சிறிய ஆடைத் தொழிற்சாலைகள் நிறைவுசெய்யப்பட்டன. அதேவேளை, இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவகம் வாழைநார் கைத்தொழில் போன்ற புதுமையான உற்பத்திகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டது.

**அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற முதலீட்டுச் சபை, தயாரிப்புக் கைத்தொழில்களுக்கான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளை வசதிப்படுத்துவதில் முக்கியமான வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது.** “ஒரே கூரையின் கீழான முதலீட்டு வசதிப்படுத்தல் செயலணிக் குழு”, தொழிற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட உண்மையான தளங்களினூடாக செயற்றிட்ட ஒப்புதலளிக்கப்பட்ட செயன்முறைகளை விரைவுபடுத்துவதற்காக தொடர்பான இணைப்பு முகவர்களினூடாகத் தேவையான இணைப்புக்களை வழங்கியது. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் முதலீட்டுச் சபை வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கும் பன்னாட்டு அபிவிருத்தி மற்றும் உலக வங்கிக்கான ஹாவார்ட் பல்கலைக்கழக மையத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட ஆய்வொன்றினூடாக ஏற்றுமதி வருவாயினை உருவாக்குவதற்கான இலக்குத் துறைகளை அடையாளம் கண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், உயர்பெறுமதி கூட்டப்பட்ட தன்னியக்கக் கூறுகள், மருத்துவச் சாதனங்கள், மருந்தாக்கற்பொருட்கள், சூரிய வலுத்தட்டுக்கள், உருவமைக்கப்பட்ட உலோகப் பாகங்கள் பெறுமதிகூட்டப்பட்ட கனிப்பொருட்கள், சிமார்ட் புடவைகள், பெறுமதிக்க சிறிய ஆடை சந்தைகள், பதனிடப்பட்ட மீன், கடலுணவு, பழவர்க்கங்கள், காய்கறிகள் மற்றும் பாற்பண்ணை உற்பத்திகளைப் போன்ற தொழில்நுட்பத் தன்மைகள் நிறைந்த பொருட்கள் என்பன தயாரிப்புத் துறையிலுள்ள உள்ளார்ந்த வளம்மிக்க கைத்தொழில்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை, முதலீட்டுச் சபை 2017இல் பின்கிரியா, மாத்தறை மற்றும் மிலேனியா ஆகிய இடங்களிலுள்ள ஏற்றுமதி பதனிடல் வலயங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை வடிவமைத்திருக்கிறது.

**அரசாங்கம் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகளை மேம்படுத்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பனவூடாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் சந்தை விவேகம் மற்றும் உற்பத்தி அபிவிருத்திகளை வழங்குவதற்கும் இலக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது.** வர்த்தகக் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீதான தரவுத்தளத்தினைத் தொகுப்பதற்குத் தொடங்கிய வேளையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் உற்பத்தித்திறன் சந்தையை அணுகுதல் மற்றும் தொழில்நுட்பத் தேர்ச்சி என்பனவற்றை உயர்த்துவதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. மேலும், தேசிய கைப்பணிச் சபை கைப்பணிப்பொருட்களின் தயாரிப்பாளர்களைப் பதிவுசெய்ததுடன் இத்துறையினை உயர்த்துவதற்காக தொழில்நுட்ப அம்சங்கள் அதேபோன்று சந்தையை அணுகுதல் மற்றும் தொழில்முயற்சியாண்மைத் தேர்ச்சி என்பன தொடர்பில் பயிற்சியையும் அபிவிருத்தியையும் வழங்கியது. அதேவேளை, நிதி மற்றும் ஊடக அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சேர்ந்து நிதிகளை பெற்றுக்கொள்ளும் வசதிகளை அதிகரிக்கும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான பங்குரிமை மூலதன நிதியிடல் மேம்படுத்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட கடன்களாகவும் துணிகர தொழில்முயற்சி மூலதன நிதியத்திற்கு உத்தரவாதங்களை வழங்குவதற்காக “தேசிய கொடுகடன் உத்தரவாதத் திட்டம்” ஒன்றினை நடைமுறைப்படுத்துவதனை நோக்கி முயற்சிகளை மேற்கொண்டது. மேலும், சுற்றாடல் சிநேகபூர்வ உற்பத்திகள் மற்றும் வலுப் பாதுகாப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக மீள்நிதியிடல் கடன் திட்டத்தினூடாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதற்காக சுற்றாடல் இசைவுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்குக் குறைந்த செலவிலான நிதிகள் கிடைப்பதனை அதிகரிப்பதற்காக 2017 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட 12 ஏனைய கடன் திட்டங்கள் இணைக்கப்பட்டன. அதேவேளை, தேசிய உற்பத்தியாக்கச் செயலகம் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் வியாபாரச் செயன்முறைகளில் வினைத்திறனை அதிகரிப்பதற்கான முறைமைகளின் மீது விழிப்புணர்வைக் கட்டியெழுப்புகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

**தயாரிப்புத் துறையில் பணியாற்றும் தொழிற்படையினருக்குத் தேவையான அறிவினையும் தேர்ச்சியையும் வழங்குவதனூடாக அவர்களுக்கு வலுவூட்டுவதற்கு அரசாங்கம் வழிமுறைகளை மேற்கொண்டது.** தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கக் கைத்தொழில்களில் காணப்படும் தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு, தனியார் துறை தயாரிப்பு நிறுவனங்களிலுள்ள பயிற்சி மாணவர்களுக்கு மூன்று

2

மாதங்களுக்கு ரூ.10,000 மாதாந்தச் சம்பளமாக வழங்குவதற்காக 2017 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தனியார் துறையினருடன் இணைக்கப்பட்ட தொழில்நிலை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வேளையில் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு ஏனைய புலமைப்பரிசில்களையும் வழங்குகிறது.

**தயாரிப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக தனியார் துறையின் பங்கேற்புடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது.** விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான இணைப்புச் செயலகத்துடன் இணைந்து 2016இல் "புத்தாக்க இலங்கை" நிகழ்ச்சியினை மேற்கொண்டது. மேலும், விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, திட்டமிடல் செயன்முறையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான இணைப்புச் செயலகம் 2017 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்த "உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்க பூங்கா" இனை நிறுவுவதற்கான திட்டமிடல் செயன்முறைகளில் ஈடுபட்டிருந்தன. இலங்கையின் உயிரியல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி நிறுவகம், மருத்துவத் துறை, வேளாண்மைத் துறை, தயாரிப்புத் துறை மற்றும் உயிரின வலு உருவாக்கம் என்பனவற்றிலுள்ள கம்பனிகளுக்கு ஒரே கூரையின் கீழ் அதிநவீனத்துவம் வாய்ந்ததொரு நிறுவனமாக விளங்கும். விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான இணைப்புச் செயலகமும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் தொழிற்படுத்தப்படவிருக்கும் றோபோ பயன்பாட்டிற்கான உன்னத நிலையமொன்றினை நிறுவுவதற்கான திட்டங்களை மேற்கொண்டன. எந்திர இலத்திரனியலினை இயலுமைப்படுத்தும் பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்களின் கீழ் அரசாங்கம் 2017இல் உற்பத்தி வடிவமைப்பு பொறியியற்படுத்தல் மற்றும் தயாரிப்புப் பூங்காவொன்றினை நிறுவுவதற்கு அரசாங்கம் ஒப்புதலளித்தது. இது, தனியார் துறையினால் பயன்படுத்தப்படும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் முகாமைப்படுத்தப்படவிருக்கும் நியம பிரதியெடுத்தல் மற்றும் பரீட்சிப்பு வசதியை உள்ளடக்கியிருக்கும். இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம், 2017இல் கண்டுபிடிக்கப்பட்ட சில ஆராய்ச்சிகளை வர்த்தகமயப்படுத்துவதற்காக தொழில்நுட்பவியல் மாற்றல் பிரிவினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பனவற்றிற்கிடையில் கையொப்பமான புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பணிமனையில் ஏற்றுமதியாளர்களுக்காக விஞ்ஞான சிகிச்சை நிலையமொன்று மேற்கொள்ளப்பட்டது. பட்டப்பிற்படிப்பு ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியினூடாக ஆராய்ச்சி வெளியீடுகளை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் தனியார் இலாபமீட்டாத பட்டப்பிற்படிப்பு நிறுவகமொன்றாக இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் கல்விக் கல்லூரி ஒன்றினை 2017இல் நிறுவிய வேளையில் இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகத்திலுள்ள அதிநவீனத்துவம் மிக்க ஆய்வுகூடச் சாதனங்களை பெருமளவிற்குப் பயன்படுத்திக் கொண்டது. 2017இற்கான இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களில் சில உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வளமாக்கியாகப் பயன்படுத்தப்படும் கலப்பு வளமாக்கி, தேனினைப் பயன்படுத்தப்படும் காயங்களுக்கு மருந்துகட்டும் பொருட்கள், குறிப்பிட்ட மண் வகைகளுடன் கூடிய நெல் வயல்களுக்கான நனோ வளமாக்கிகள் மற்றும் இல்மனைட்டிலிருந்து ரைரீனியத்திலிருந்து பிரித்தெடுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு 2017 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட புத்தாக்க விரைவுபடுத்தல் நிதியத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தொழிற்பாட்டுக் கட்டமைப்பினை இறுதிப்படுத்தியிருக்கிறது.

**தேசிய விஞ்ஞான நிலையம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவகம் என்பன புதிய உற்பத்தி அபிவிருத்தி மற்றும் செயன்முறை புத்தாக்கம் என்பனவற்றில் ஈடுபட்டிருந்ததுடன் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களைப் பெறவும் உதவியது.** தேசிய விஞ்ஞான நிலையம் திண்மத் தொழில்நுட்ப முகாமைத்துவம் மற்றும் சுதேச விஞ்ஞான அறிவு என்பனவற்றின் மீது தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்ததுடன் சிறிய மற்றும் நடுத்தரளவு படகு கட்டுதல் இலங்கை கறுவா, உணவு பாதுகாப்பு, இயற்கை அனர்த்தங்கள் போன்ற துறையில் பணியாற்றுகின்ற ஆராய்ச்சியாளர்களுக்காக நிதியியல் உதவிகளையும் வழங்கியது. தேசிய விஞ்ஞான நிலையம் நிதியிடப்பட்ட ஆராய்ச்சிக்காக 2017இல் இரண்டு உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதேவேளை, பாகிஸ்தான், சீனா மற்றும் யப்பான் என்பனவற்றுடனான ஒத்துழைப்பு, ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2017இல் முன்னெடுப்பட்டதுடன் இலங்கையின் இன்றியமையாத ஆராய்ச்சிப் பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்ச்சிக்கான முன்மொழிவுகளுக்கான கூட்டு அழைப்புக்கள் விடுக்கப்பட்டன. தகவல் தொழில்நுட்ப நிறுவகம் வாசனைத்திரவியங்கள் தொடர்பில் இந்திய இலங்கை கூட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கியதுடன் சீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்துடன் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பில் கூட்டு ஆய்வுகூடமொன்றினை நிறுவுவதற்கு உடன்படிக்கையொன்று கையெழுத்தானது. தகவல் தொழில்நுட்ப நிறுவகம் டிஜிட்டல் ஈரப்பதன் மற்றும் வெப்பங்களைக் கண்காணித்தல், இலங்கைச் செடிகள், டெங்கு வைரஸ், அசுத்தமாக்கப்பட்ட கழிவுநீர்,

தேயிலை, இறப்பர், காரீயம், கடதாசி, பூச்சிக்கொல்லிகள், உடனடி உணவு தயாரிப்புக்கள், விலங்குகளுக்கான விசர்கடி தடுப்பு மருந்துகள், தானியங்களின் ஈரப்பதனை நீக்குவதற்கான சாதனம், சிவப்பு மண்ணினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் போன்ற பல்வேறு துறைகளில் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் 2017இல் புதிய உற்பத்தி அபிவிருத்திகளை மேற்கொண்டது. இத்துறைகளிலுள்ள தனியார் துறை தொழில்முயற்சிகளுடன் கூட்டு ஆராய்ச்சிகளையும் இது மேற்கொண்டது.

**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையானது இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் துறையின் தர நியமங்களை மேம்படுத்துவதற்குக் கடுமையாக முயற்சித்து வருகின்றது.** தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையானது ஆபரணத்தின் மீது தரநிர்ண அடையாளத்தினைக் குறிப்பிடுவதனைக் கட்டாயமாக்குவதனை அறிமுகப்படுத்தியதுடன் பட்டை தீட்டலில் பயிற்சி வழங்கும் பொழுது கணனியின் உதவியுடனான வடிவமைப்பு மற்றும் கணனியின் உதவியுடனான தயாரிப்பு என்பன மீது கைத்தொழில் தொழிற்பாட்டாளர்களிடையே விழிப்புணர்வுகளையும் கட்டியெழுப்பியது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை இரத்தினக்கல் பரிசோதனைகளை மேம்படுத்தியதுடன் உண்மையான இரத்தினக்கற்களை வாடிக்கையாளர்கள் இனங்காண்பதற்கு உதவுவதற்காகவும் இரத்தினக்கல் சான்றிதழ்களை வழங்குவதற்காகவும் ஆய்வுகூடங்களை சான்றுபடுத்தியதுடன் இரத்தினக்கல் கொடுக்கல்வாங்கல்கள் பொதுவாக இடம்பெறும் பல்வேறு புவியியல் பிரதேசங்களுக்கு நடமாடும் ஆய்வுகூடங்களையும் அறிமுகப்படுத்தியது. பெறுமதிகூட்டல்களுக்காகவும் ஏற்றுமதி செய்வதற்காகவும் அரசாங்கம் இலங்கைக்குள் இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதித்திருப்பதனால் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையானது தேவையான இராஜதந்திர உபாயங்களை விருத்தி செய்வதில் பங்கேற்றுக் கொண்டது.

**வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனம் மற்றும் சங்கங்கள் என்பன அரசாங்கத்துடன் தொடர்ச்சியான கூட்டு பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் மூலமும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன் மூலமும் புதிய அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மீதும் விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புதல், வர்த்தகப் பொருட்காட்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் வர்த்தகத் தூதுக்குழுக்களுக்கு வசதியளித்தல் என்பன மூலம் கைத்தொழில் துறைக்குத் தொடர்ச்சியாக ஆதரவளித்தது.** இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் தேசிய வர்த்தகச் சம்மேளனம் என்பன "தூதுவரைச் சந்தியுங்கள்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தினை வெளிநாடுகளில் வர்த்தக வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக கைத்தொழில் அதிபர்களுக்கு நடத்தப்பட்டன. இச்சம்மேளனங்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டதுடன் பொருட்காட்சிகளை ஒழுங்குசெய்து அரசாங்கத்திற்கு கொள்கை ஆலோசனைகளை வழங்கியதுடன் பாரிய கம்பனிகள் உள்ளீடுகளை வழங்குகின்ற சிறிய கம்பனிகளுடன் இணைக்கப்படுவதற்கான வசதிகளையும் வழங்கியது. இலங்கை உணவு பதனிடுவோர் சங்கம் "முன்கூட்டிய உணவு முன்கூட்டிய பொதியிடல்" என அழைக்கப்டும் வருடாந்த பன்னாட்டு உணவு குடிபானம் மற்றும் வேளாண்மைப் பொதியிடல் நிகழ்ச்சித்திட்டங்களை 2017இல் இலங்கையில் நடத்தியதுடன் ஏற்றுமதி உணவு வர்த்தகம் தொடர்பில் உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்துடன் ஆய்வரங்கொன்றினை ஒழுங்குசெய்தது. பன்னாட்டு தர நிறுவனத்தின் சான்றுபடுத்தலுடனான இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக உணவு பரிசோதனைக்கான இலங்கை தர நிர்ணய நிறுவகத்தின் பரிசோதனை மற்றும் ஆய்வுகூட அலுவலர்களுக்கு அமைப்பானது பயிற்சி ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் இலங்கை சம்மேளனம் கொத்தணி அபிவிருத்தி மற்றும் கொத்தணி நிதியிடலூடாக ஏற்றுமதி பெறுமதிச்சங்கிலியினை வலுப்படுத்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் இயலாற்றலினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செயற்றிட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் இலங்கை சம்மேளனம் வெளிநாட்டு காலணித் தயாரிப்பாளர்கள், ஒட்டுப்பசைத் தயாரிப்பாளர்கள், நீர்புகாத மூலப்பொருட்கள் மற்றும் புடவைகத் தயாரிப்பாளர்கள ஆகியோரினால் எதிர்நோக்கப்பட்ட வெளிநாட்டுப் போட்டி காரணமாக எதிர்நோக்கப்பட்ட கரிசனைகள் தொடர்பான அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. மேலும், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களின் இலங்கை சம்மேளனம் தெரிவுசெய்யப்பட்ட 600 நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்குப் பரந்தளவு தேசிய மற்றும் உலகளாவிய சந்தைப்படுத்தல்களுக்காகவும் பரந்தளவு தேசிய மற்றும் உலகளாவிய சந்தைகளை அணுகுவதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் அவர்களுக்கு வலிமை அளிக்கும் விதத்தில் "வழிகாட்டல் செயற்றிட்டம் தொடர்பான நம்பகமான ஆலோசகர்" இனை ஆரம்பித்தது.

## மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல்

**மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல் நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல்கள் 2016இன் 10.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் மெதுவடைந்த வீதத்திலே 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இவ்வகையின் வளர்ச்சிக்கு உதவிய முக்கிய பங்களிப்பாளராக மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் நடவடிக்கைகள் 2016இன் 8.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 2.7 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தன. இம்மிதமானதன்மை 2016இன் 8.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் மொத்த மின்வலு உருவாக்கத்தில் காணப்பட்ட 3.7 சதவீதம்


கொண்ட மெதுவான வளர்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், நீர்மின்வலு உருவாக்கம் 2016இன் 29.0 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 12.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு குறிப்பாக ஆண்டின் முதலரைப்பகுதியில் நீரேந்துப் பிரதேசங்களில் நிலவிய நீண்ட வரட்சியே காரணமாகும். ஆகவே, மின்வலுவின் கேள்வியை ஈடுசெய்வதற்காக இவ்வாண்டுப்பகுதியில் எரிபொருள் எண்ணெய் மற்றும் நிலக்கரியினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் விரிவடைந்தது. இதன்படி, எரிபொருளினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் 2016இன் 96.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 13.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் நிலக்கரியினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் 2016இல் அவதானிக்கப்பட்ட 13.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 1.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2016இன் 7.9 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.6 சதவீதத்தினால் விரிவடைந்தது. இதுவும், 2016இன் 12.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட நீரின் அலகுகளில் ஏற்பட்ட 3.0 சதவீத அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நுகர்வோர் கணக்குகளின் எண்ணிக்கை 2016இன் 7.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, வடிகால், கழிவு சுத்திகரிப்பு மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கைகள் 2016இன் 17.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.9 சதவீதம் கொண்ட மெதுவான வீதத்தில் வளர்ச்சியடைந்தன.

2

### கட்டடவாக்கம்

**கட்டடவாக்க நடவடிக்கைளின் பெறுமதிகூட்டல் 2016இன் 8.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் மெதுவான வேகத்தில் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** கட்டடவாக்க நடவடிக்கைகளில் காணப்பட்ட இம்மெதுவான போக்கு சிமெந்து உற்பத்தியிலும் அதன் இறக்குமதியிலும் பிரதிபலிக்கப்பட்டது. இது, 2016இன் 17.8 சதவீதம் கொண்ட மற்றும் 29.5 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 4.6 சதவீதமாகவும் 7.1 சதவீதமாகவும் மெதுவான வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இது ஒன்றுசேர்ந்து 2016இன் 25.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 6.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், கட்டடப்பொருட்கள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2016இல் 22.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் 2017இல் 6.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் பதிவுசெய்து கட்டடவாக்க நடவடிக்கைகளில் மிதமான செயலாற்றமொன்றினை எடுத்துக்காட்டியது. அதேநேரம்,

வரைபடம் 2.7
சீமெந்து கிடைப்பனவு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

கட்டடவாக்க நடவடிக்கைகளில் உணரப்பட்ட வளர்ச்சிக்கு உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் பாரியளவு வதிவிட மற்றும் கலப்பான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் உதவியாக அமைந்தன. அதேவேளை, கட்டுமான நடவடிக்கைகளுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சி 2016 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 26.9 சதவீத வளர்ச்சியிலிருந்து 2017 திசெம்பர் இறுதியில் 22.5 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனிப்பட்ட வீடமைப்பு கட்டுமான நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட கொடுகடன் 2017 திசெம்பர் இறுதியில் 22.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து கட்டடவாக்க நடவடிக்கைகளில் தனியார் துறையின் ஈடுபாட்டினைப் பிரதிபலித்தது.

### பணிகள்

**பணிகளுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2016இன் 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.2 சதவீதத்தினால் விரிவடைந்தன.** இவ்வாண்டுப்பகுதியில் பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் அபிவிருத்திகளுடன் நிதியியல் பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் பெருமளவிற்கு தூண்டுதலாக அமைந்தது. மேலும், ஏனைய தனியாள் பணிகள், உண்மைச் சொத்து நடவடிக்கைகள், மனித நல நடவடிக்கைகள், போக்குவரத்து, தங்குமிட வசதிப் பணிகள், தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், காப்புறுதி, தொலைத்தொடர்பூட்டல், கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகளின் வளர்ச்சிகள் பணி நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு சாதகமாகப் பங்களித்தன. எனினும், இவ்வாண்டுப்பகுதியில் பொது நிருவாகப் பணிகள் சுருக்கமடைந்தன. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்ட பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணும் ஆண்டு முழுவதும் பணிகள் நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றினைக் காட்டின.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் தொடர்ந்தும் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைக் காட்டி 2016ஆம் ஆண்டின் 2.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகளினால் உள்நாட்டு வேளாண்மை தொடர்பான வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் வெளிநாட்டு வர்த்தகத்தில் பெருமளவு விரிவாக்கமொன்றினைப் பிரதிபலித்தது.** இவ்வாண்டுப்பகுதியில் இவ்விரிவாக்கம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தக அளவுச் சுட்டெண்களில் போக்கில் பிரதிபலிக்கப்பட்டது. இதன்படி, இறக்குமதி அளவுச் சுட்டெண் 2016இன் 7.0 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டுப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி அதிகரித்த வேளையில் முதலீட்டுப்பொருட்கள் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. இதன்படி, நுகர்வுப்பொருள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2016இன் 12.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கெதிராக 2017இல் 6.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இது, முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய கடுமையான வறட்சி நிலைமைகளின் காரணமாக உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட உணவு மற்றும் குடிபானங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் பெருமளவிற்குத் தூண்டப்பட்டது. அதேவேளை, இடைநிலைப்பொருட்கள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2016இன் 10.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 10.7 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2017இல் 0.1 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட சுருக்கமே முக்கிய காரணமாகும். அதேவேளை, ஏற்றுமதி அளவுச்சுட்டெண் 2016இன் 0.7 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சிக்கெதிராக 2017இல் 7.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2016ஆம் ஆண்டின் 0.4 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.9 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்த கைத்தொழில் ஏற்றுமதிகளே முக்கிய தூண்டுதலாக அமைந்தன. மேலும், 2016இல் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் வாசனைத்திரவியங்கள் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் காரணமாக வேளாண்மை உற்பத்திகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மீட்சியும் இவ்வளர்ச்சிக்கு ஆதரவாக அமைந்தது.

## போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

**களஞ்சிப்படுத்தல் நடவடிக்கைகள் உட்பட பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்தின் பெறுமதிகூட்டல் 2016இன் 5.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதத்தில் 2017இல் 0.9 சதவீதத்தினால் அதிகரித்தது.** போக்குவரத்துப் பணிகளினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமொன்றினைக் காட்டி போக்குவரத்துப் பணிகளில் மெதுவான தன்மையொன்றினைப் பிரதிபலித்தது. இதன்படி, இலங்கைப் போக்குவரத்துச் சபையிலும் தனியார் துறை பேருந்து தொழிற்பாட்டாளர்களினாலும் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2016இன் 6.1 சதவீதம் மற்றும் 2.0 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 1.8 சதவீதத்தினாலும் 2.4 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. எனினும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2016இன் 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 1.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், சிறிலங்கன் எயார்லையின்ஸ்சினால் பறக்கப்பட்ட மொத்தப் பயணிகள் கிலோமீற்றர்கள் 2016இன் 0.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 8.8 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் அதிகரித்தது. அதேவேளை, கொள்கலன் போக்குவரத்து (20 அடிக்குச் சமனான அலகுகள்) மற்றும் இலங்கையின் துறைமுகங்களினால் கையாளப்பட்ட சரக்கு என்பன 2016இன் 10.6 சதவீதம் மற்றும் 11.5 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 8.3 சதவீதத்தினாலும் 8.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. மேலும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் கொண்டு செல்லப்பட்ட சரக்கு தொன் கிலோமீற்றர்கள் 2016இன் 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேநேரம், சிறிலங்கன் எயார்லையின்ஸ்சினால் பறக்கப்பட்ட சரக்குத் தொன் கிலோமீற்றர்கள் 2016இன் 9.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் அதே அளவிலான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகளின் வளர்ச்சி மிதமடைந்து 2016இன் 5.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது.

## தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

**தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில், 2016இன் 4.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 5.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வாண்டின் இவ்விரிவாக்கத்திற்கு சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகள் உதவியாக அமைந்து, ஆண்டின் முதல் காலாண்டுப்பகுதியில் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையம் பகுதியளவில் மூடப்பட்டிருந்தமைக்கிடையிலும் 2017இல் சுற்றுலா வருகைகள் 3.2 சதவீதத்தினால் அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த செலவிடல் சக்தியைக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் காணப்படும் மேற்கு ஐரோப்பா, இவ்வாண்டுப்பகுதியில்

உயர்ந்த எண்ணிக்கையான சுற்றுலாப்பயணிகளின் வருகைகளைப் பதிவுசெய்தது. அதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட சுற்றுலாவிடுதிகளின் அறைகளில் தங்கியிருக்கும் வீதம் 2016இன் 74.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 73.3 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் சுற்றுலா நடவடிக்கைகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 3.6 பில்லியனுக்கு அதிகரித்தது. தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதி வசதிகளுக்கான வளர்ச்சியடைந்துவரும் கேள்வியும் தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணிகளின் வளர்ச்சிக்குப் பங்களித்தன.

2

### தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2016இன் 8.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இவ்வாண்டுப்பகுதியின் வளர்ச்சிக்கு 2016இன் 8.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 12.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமே பெருமளவிற்குத் தூண்டதலாக அமைந்தது. மொத்த தொலைபேசி இணைப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சியைப் பரிசீலனையில் கொள்கையில் செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்கள் மற்றும் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பி இணைப்புக்கள் தொடர்ச்சியாக அதிகரித்த வேளையில் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பியல்லா இணைப்புக்கள் மீட்சியடைந்து இவ்வாண்டுப்பகுதியில் சாதகமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளன. மேலும், நிலையாகப் பொருத்தப்பட்ட மற்றும் செல்லிட அகன்றபட்டை வகைகள் இரண்டினதும் மின்னஞ்சல் மற்றும் இணையத்தளப் பணிகள் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தின் இணையத்தளப் பணிகளுக்கான அதிகரித்துவரும் கேள்வியைப் பிரதிபலிக்கிறது. அதேவேளை, தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட ஆலோசனைகளும் தொடர்பான நடவடிக்கைகளும் 2016இன் 7.1 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.2 சதவீதத்தினால் விரிவடைந்தன. மேலும், நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் ஒலிபரப்புதல் மற்றும் கட்புல, செவிப்புல தயாரிப்பு நடவடிக்கைகள் 2016இன் 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 13.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

**நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் பெறுமதிகூட்டல் நியதிகளில், 2016இன் 9.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.0 சதவீதத்தினால் விரிவடைந்தன.** 2016இல் 12.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 9.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் இவ்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. இது தொடர்பில் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிலுள்ள மொத்தக் கடன்களும் முற்பணங்களும் 2016இன் 17.5 சதவீதம் மற்றும் 20.1 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 16.1 சதவீதத்தினாலும் 10.2 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. மேலும், வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புத் தளம் 2016இன் 16.5 சதவீதம் மற்றும் 10.4 சதவீதம் கொண்ட தொடர்பான அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 17.5 சதவீதத்தினாலும் 29.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. இதற்கிணங்க, வங்கித்தொழில் துறை மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மொத்தக் கடன்கள் மற்றும் வைப்புக்களின் தளம் 2016இன் 17.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 16.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2016இன் 6.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.7 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேநேரம், காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகள் 2016இன் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 5.7 சதவீதத்தினால் விரிவடைந்தன. 2017இல் காப்புறுதித் தொழில் துறையினால் ஈட்டப்பட்ட கட்டணங்கள் 12.2 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட வேளையில் செலுத்தப்பட்ட கோரல்கள் 1.7 சதவீதத்தினால் சிறிதளவில் சுருக்கமடைந்தன. ஒப்பிடுகையில் 2016இல் உழைக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் செலுத்தப்பட்ட கோரல்கள் முறையே 18.2 சதவீதத்தினாலும் 19.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

### தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள்

**தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள் 2016இன் 0.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 3.3 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இத்துறைக்கான முக்கிய பங்களிப்பாளராக இருந்து வருகின்ற ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள் 2016இன் 1.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 3.2 சதவீதத்தினால் தொடர்ந்தும் விரிவடைந்தன. அதேவேளை, தொழில்சார் நிபுணத்துவத்தைத் தேவைப்படுத்துகின்ற பணிகளை உள்ளடக்கும் தொழில்சார் நிபுணத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், நிருவாகம் மற்றும் ஆதரவுப் பணி நடவடிக்கைகள் 2016இன் 1.3 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2017இல் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் இத்துறையின் விரிவாக்கத்திற்கும் உதவியாக அமைந்தது.


### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள்

**பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகளின் வளர்ச்சி 2016இன் 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 2017இல் 1.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** இப்பின்னடைவிற்கு இத்துறையில் பெரும் பங்கிற்கு வகைகூறும் பொது நிருவாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளில் 2016இன் 5.2 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.8 சதவீதம் கொண்ட சுருக்கம் பெருமளவிற்கக் காரணமாக அமைந்தது. எனினும், மனித நல நடவடிக்கைகள், வதிவிடக் கவனிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 2016இன் 1.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.2 சதவீதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தமையின் மூலம் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, கல்விப் பணிகளின் வளர்ச்சி 2016இன் 7.5 சதவீதத்திலிருந்து 2017இல் 0.5 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.

### வியாபாரத் தோற்றப்பாடு அளவீட்டின் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

**வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பாரியளவு வியாபாரத் தொழில்முயற்சிகளை இலக்காக் கொண்டு காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட முன்னோக்கிய தோற்றப்பாட்டு அளவீடான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடும் இவ்வாண்டுப்பகுதியில் குறைவடைந்த வியாபார நிலைமைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.** உண்மையில் இவ்வளவீட்டினூடாகத் தொகுக்கப்பட்ட வியாபார நிலைமைச் சுட்டெண் ஆண்டு முழுவதும் சமநிலை மட்டமான 100 இற்குக் கீழேயே தொடர்ந்தும் காணப்பட்டமையானது வியாபார நிலைமைகள் மோசமடைந்தமையினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 2.8
வியாபார நிலைமைச் சுட்டெண் (அ)




(அ) இந்தச் சுட்டெண்ணானது 0-200 இற்கு இடையிலானதும், நடுநிலை மட்டமான 100 இற்கு மேலான சுட்டெண் பெறுமதி வியாபார மனோபாவத்தின் விருத்தியினையும் நடுநிலை மட்டமான 100 இற்கு கீழான சுட்டெண் பெறுமதி சரிவினையும் குறித்து காட்டுகின்றது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மேலும், நிலையற்ற கொள்கைகள், தொழிற்சந்தைத் தளம்பல்கள், உயர்ந்த வட்டி வீதங்கள் என்பன விரைந்த வியாபார நடவடிக்கைகளுக்கு முக்கிய தடையாக இருக்கும் விடயங்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. எனினும், 2018இன் முதற்காலண்டிற்கான தோற்றப்பாடு வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சியின் உதவியுடன் முன்னேற்றமொன்றினை எடுத்துக்காட்டுகின்றது.

## 2.5 செலவினம்

**செலவினப் பக்கத்தில் பொருளாதாரத்தின் மொத்த நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தினை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவினம் 2016இன் 8.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.5 சதவீதத்தினால் விரிவடைந்து இவ்வாண்டுப்பகுதியில் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.14,247.7 பில்லியனில் மதிப்பிடப்பட்டது.** நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவில் ஏற்பட்ட வளர்ச்சி மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்குப் பங்களித்தது. 2016இல் 3.1 சதவீதத்தில் வளர்ச்சியடைந்த நுகர்வுச் செலவினம் 2017இல் 9.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுச் செலவினம் 2016இன் 22.0 சதவீதத்திலிருந்து 2017இல் 16.6 சதவீதத்திற்கு குறைவடைந்த தன்மையொன்றினை எடுத்துக்காட்டியது. நிலையான விலைகளில், மொத்த உள்நாட்டுச் செலவினம் 2016இன் 6.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிடன் ஒப்பிடுகையில் 2017இல் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நிலையான விலைகளில் நுகர்வுச் செலவினம் 2017இன் நடைமுறைச் சந்தை விலைகளில் காணப்பட்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு வீதத்தில் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தில் அதிகரித்த விலை மட்டங்களைப் பிரதிபலித்தது. அதேவேளை, முதலீட்டுச் செலவினம் 2016இன் 27.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நிலையான விலைகளில் 2017இல் 17.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, தேறிய வெளிநாட்டுக் கேள்வி மேலும் மோசமடைந்து 2016இன் 6.0 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் நடைமுறைச் சந்தை விலைகளில் 9.6 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றினைப் பதிவுசெய்து ரூபா நியதிகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையல் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மேலும், நிலையான விலைகளில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளின் ரூபாய் பெறுமதி 2017இல் முறையே 7.5 சதவீதத்தினாலும் 19.3 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்து தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் மேலும் சுருக்கமொன்றினைத் தோற்றுவித்தது. வர்த்தகச் சுட்டெண்களின் நோக்கில் இதே போன்ற அதிகரித்துச் செல்லும் போக்கொன்றினை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அளவு மற்றும் பெறுமதிச் சுட்டெண்கள் இரண்டிலும் அவதானிக்க முடிந்தது. இறக்குமதி அளவு மற்றும்

பெறுமதிச் சுட்டெண்கள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நாட்டில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகளின் காரணமாக நுகர்வு மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய தூண்டுதலாக அமைந்த வேளையில் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள் ஓரளவு மெதுவடைதலைக் காட்டின. ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில் கைத்தொழில், வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் உள்ளிட்ட அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளினதும் அளவு மற்றும் பெறுமதிச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுச் செலவினம் மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பனவற்றை உள்ளடக்கிய பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப்பொருட்களுக்கான மொத்தக் கேள்வியாக விளங்கும் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ.உ.உற்பத்தி நடைமுறைச் சந்தை விலைகளில் 11.6 சதவீதத்தினால் விரிவடைந்து 2017இல் ரூ.13,289.5 பில்லியனாக விளங்கியவிடத்து நிலையான சந்தை விலைகளில் இது 3.1 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியாகக் காணப்பட்டது.

2

## நுகர்வு

**2017இல் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 3.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தினால் விரைவடைந்து பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் 70.7 சதவீதப் பங்கிற்கு வகைகூறியது.** முன்னைய ஆண்டின் மொத்த நுகர்வுச் செலவினத்தில் காணப்பட்ட மெதுவான போக்குடன் ஒப்பிடுகையில் 2017இல் இது உத்வேகமடைந்து தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிலும் அதிகரித்த நுகர்விற்குப் பங்களித்தது. மொத்த நுகர்வுச் செலவினத்தில் 88 சதவீதத்திற்கு வகைகூறும் தனியார் நுகர்வுச் செலவினம் 2016இன் 3.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 8.7 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. 2016இன் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் இவ்விரிவாக்கமானது இவ்வாண்டுப்பகுதியில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி அளவு மற்றும் பெறுமதிச் சுட்டெண்களில் காணப்பட்ட மீட்சியினால் பிரதிபலிக்கப்பட்டது. அதேநேரம், அரச நுகர்வுச் செலவினம் 2016இன் 3.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையல் 2017இல் 11.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது அரச தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் மற்றும் கூட்டு நுகர்வுச் செலவினம் ஆகிய இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. இது, 2016இன் முறையே 2.7 சதவீதம் மற்றும் 3.2 சதவீதம் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 8.4 சதவீதத்தினாலும் 12.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. அரச நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பன மீதான அரச மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டதுடன் இது 2016இன் முறையே 19.9 சதவீதம் மற்றும் 2.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 20.4 சதவீதத்தினாலும் 2.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது.

**தனியார் நுகர்வுச் செலவினத்தின் மிகப்பெரும் செலவின வகையான உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகளின் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இல் அவதானிக்கப்பட்ட 2.5 சதவீத சுருக்கத்திற்கு மாறாக 2017இல் 5.4 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** இவ்விரிவாக்கமானது ரூபா நியதிகளில் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிப் பெறுமதிச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டதுடன் 2016இன் 7.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் 18.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணின் மீளெழுச்சியினால் பிரதிபலிக்கப்பட்டதுடன் இது 2016இன் 3.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கெதிராக 2017இல் 18.2 சதவீதத்தினால் அதிகரித்தது. நடைமுறைச் சந்தை விலைகளில் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிபானங்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் வளர்ச்சிக்கு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (தே.நு.வி.சு, 2013=100) அடிப்படையாகக் கொண்ட அதிகரித்த உணவு பணவீக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2016இன் 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.3 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் விலைமட்டங்கள் உயர்வடைந்தமையே ஓரளவிற்குத் தூண்டுதலாக அமைந்தது. அதேவேளை, தனியார் நுகர்வுச் செலவினத்தில் உணவு மற்றும் வெறியமல்லாக் குடிபானங்களின் பங்கு 2016இன் 30.0 சதவீதத்திலிருந்து 2017இல் 29.1 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**வெறியக்குடி வகைகள், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில், 2016இன் 9.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 9.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு வெறியக்குடி வகை மற்றும் புகையிலையின் பணவீக்கம் 2016இன் 22.1 சதவீதத்திலிருந்து 2017இல் 10.8 சதவீதத்திற்கு மெதுவடைந்தமையும் இவ்வகையின் நுகர்வு அதிகரிப்பதற்குப் பங்களித்திருக்க முடியும். தனியார் நுகர்வுச் செலவினத்தில் வெறியக்குடி வகைகள், புகையிலை மற்றும் போதைப்பொருட்களின் பங்கு 2017இல் 2.0 சதவீதத்திலேயே காணப்பட்டது.

**ஆடைகள் மற்றும் காலணிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 2.4 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 2017இல் 20.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** இவ்வீழ்ச்சியானது ஆடை மற்றும் அதன் துணைப்பொருள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2016இல் அவதானிக்கப்பட்ட 13.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆடை மற்றும் காலணியின் பணவீக்கம் 2016இன் 3.7 சதவீதத்திலிருந்து

அட்டவணை 2.10
மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 (ஆ) | 2016 (ஆ)(இ) | 2017 (இ) | 2015 (ஆ) | 2016 (ஆ)(இ) | 2017 (இ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 8,360,930 | 8,616,150 | 9,393,491 | 6,584,691 | 6,369,395 | 6,405,552 |
| (% மாற்றம்) | 6.5 | 3.1 | 9.0 | 7.8 | -3.3 | 0.6 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 3,414,556 | 4,164,890 | 4,854,187 | 3,006,450 | 3,821,310 | 4,478,393 |
| (% மாற்றம்) | 2.0 | 22.0 | 16.6 | 3.8 | 27.1 | 17.2 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | 11,775,486 | 12,781,040 | 14,247,678 | 9,591,141 | 10,190,705 | 10,883,945 |
| **(% மாற்றம்)** | 5.2 | 8.5 | 11.5 | 6.5 | 6.3 | 6.8 |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 2,301,065 | 2,540,049 | 2,914,309 | 1,605,147 | 1,593,234 | 1,712,567 |
| (% மாற்றம்) | 5.3 | 10.4 | 14.7 | 4.7 | -0.7 | 7.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 3,125,931 | 3,414,338 | 3,872,521 | 2,548,455 | 2,749,649 | 3,281,024 |
| (% மாற்றம்) | 3.5 | 9.2 | 13.4 | 10.6 | 7.9 | 19.3 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | -824,865 | -874,289 | -958,212 | -943,307 | -1,156,414 | -1,568,457 |
| **(% மாற்றம்)** | 1.4 | -6.0 | -9.6 | -22.4 | -22.6 | -35.6 |
| **இ. மொத்த கேள்வி** | 10,950,621 | 11,906,752 | 13,289,466 | 8,647,833 | 9,034,290 | 9,315,488 |
| **(% மாற்றம்)** | 5.7 | 8.7 | 11.6 | 5.0 | 4.5 | 3.1 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2

2017இல் 3.2 சதவீதத்திற்கு மெதுவடைந்ததுடன் இவ்வகையின் விலை அழுத்தங்கள் குறைவடைந்தமையைப் பிரதிபலித்தது. அதேவேளை, தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஆடை மற்றும் காலணியின் பங்கு 2016இன் 5.4 சதவீதத்திலிருந்து 2017இல் 4.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016ஆம் ஆண்டின் 13.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் மெதுவடைந்து 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** வீட்டுத் துறைக்கான மின்வலு விற்பனைகள் 2016இன் 8.3 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.4 சதவீதத்தினால் விரிவடைந்தது. மேலும், வீட்டுத் துறையினருக்கு விநியோகிக்கப்பட்ட நீரின் அலகுகள் 2016இன் 12.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் மெதுவான வீதத்தில் 3.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை மின்வலு மற்றும் நீர் மீதான தீர்வைகள், டீசல் மற்றும் பெற்றோலின் விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் மாற்றமின்றியிருந்த வேளையில் உள்நாட்டுத் திரவப் பெற்றோலிய வாயு உருளைகளின் விலை 2017 செத்தெம்பரில் மேல் நோக்கித் திருத்தப்பட்டமை இவ்வகையில் வீட்டலகுகளின் செலவினத்தின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்களின் பணவீக்கம் 2016இன் 0.1 சதவீதத்திலிருந்து 2017இல் 0.9 சதவீதத்திற்கு மெதுவாக அதிகரித்து இவ்வகையில் சிறிதளவு விலை அழுத்தம் தொடர்ந்தும் காணப்பட்டமையினைப் பிரதிபலிக்கின்றது.

**போக்குவரத்து நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 25.6 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** பேருந்துப் பணிகள் மீதான பயணிகள் போக்குவரத்துக் கட்டணம் 2017 யூலையிலிருந்து அதிகரித்து போக்குவரத்து மீதான வீட்டலகுகளின் செலவினத்தினை அதிகரித்தது. எனினும், புகைவண்டி மீதான பயணிகள் போக்குவரத்துக் கட்டணம் இவ்வாண்டுப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்து நடவடிக்கைகளின் பணவீக்கம் 2016இன் 5.1 சதவீதத்திலிருந்து 2017இல் 5.9 சதவீதத்திற்கு அதிகரித்து நடைமுறைச் சந்தை விலைகளில் போக்குவரத்து நடவடிக்கைகளின் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் வளர்ச்சி விலை மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பகுதியளவில் தூண்டப்பட்டமையை எடுத்துக்காட்டியது. தனியார் நுகர்வுச் செலவினத்தில் போக்குவரத்து நடவடிக்கைகளின் பங்கு 2016இன் 18.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 21.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

**நலத் துறை நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 11.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 8.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் கல்வி நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2016இல் பதிவுசெய்யப்பட்ட சுருக்கத்தினைப் போன்று 2017இல் 1.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** அதேவேளை, இந்நடவடிக்கைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 2017இல் முறையே 3.0 சதவீதம் மற்றும் 1.2 சதவீதங்களில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டங்களில் காணப்பட்டது. இவ்வகையின் மீதான வீட்டலகுகளின் நுகர்வுச் செலவினம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கு கல்வி மற்றும் நலத் துறைப் பணிகள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்பட்டமையின் மூலம் கிடைத்த உயர்ந்த பங்களிப்பே

அட்டவணை 2.11
நடைமுறைச்சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு(%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2015 (ஆ) | 2016 (ஆ)(இ) | 2017 (இ) | 16/15 (ஆ)(இ) | 17/16 (இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 31.7 | 30.0 | 29.1 | -2.5 | 5.4 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள்,புகையிலை மற்றும் போதைப்பொருள் | 1.9 | 2.0 | 2.0 | 9.3 | 9.2 |
| 3. புடவையும் காலணியும் | 5.4 | 5.4 | 4.0 | 2.4 | -20.6 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.4 | 11.5 | 11.2 | 13.7 | 5.7 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.3 | 1.5 | 1.4 | 19.7 | 1.4 |
| 6. நலம் | 2.8 | 3.1 | 3.0 | 11.5 | 8.2 |
| 7. போக்குவரத்து | 18.5 | 18.7 | 21.6 | 4.4 | 25.6 |
| 8. தொடர்பூட்டல் | 1.0 | 1.1 | 1.1 | 9.8 | 4.4 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 2.3 | 1.9 | 1.8 | -14.8 | 5.6 |
| 10. கல்வி | 1.4 | 1.3 | 1.2 | -1.8 | -1.8 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 4.2 | 4.4 | 4.6 | 7.9 | 11.8 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 21.8 | 22.8 | 23.2 | 7.7 | 11.1 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.8 | 3.1 | 3.1 | 15.0 | 8.5 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 5.6 | 6.8 | 7.3 | 26.3 | 16.6 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 3.1 | 8.7 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

2

பகுதியளவில் காரணமாக அமைந்தது. இது, பொருளாதாரத்தின் நிறுவன ரீதியான பகுப்பாய்வின் கீழ் பெறுமதிகூட்டப்பட்ட கல்வி மற்றும் மானிட நலத் துறை நடவடிக்கைகளுக்கான அரச துறையின் உயர்ந்தளவு பங்களிப்பினைப் பிரதிபலித்தது.

**தொடர்பூட்டல் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2016இன் 9.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது.** தொலைத்தொடர்பூட்டல் கருவிகளின் இறக்குமதி பெறுமதி மற்றும் அளவுச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் அதிகரித்து தொலைத்தொடர்பூட்டல் கைத்தொழிலில் ஏற்பட்ட விரிவாக்கத்தைப் பிரதிபலித்தது. இது நாட்டின் தொலைபேசி மற்றும் இணையத்தள இணைப்புக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கத்தினால் மேலும் எடுத்துக்காட்டப்பட்டது. இது 2016இன் 6.6 சதவீதம் மற்றும் 20.3 சதவீதம் கொண்ட தொடர்பான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 7.0 சதவீதத்தினாலும் 20.0 சதவீதத்தினாலும் அதிகரித்தது. அதேநேரம், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் தொடர்பூட்டல் பணிகளின் பணவீக்கம் 2016இன் 6.8 சதவீதத்திலிருந்து 2017இல் 9.3 சதவீதத்திற்கு அதிகரித்து இப்பணிகளின் விலை மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

**உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதிகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 7.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சியானது இப்பணிகளுக்கான அதிகரித்த கேள்வி மற்றும் நாட்டில் நிறுவப்பட்டுவரும் சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்களின் அதிகரிக்கின்ற எண்ணிக்கை என்பனவற்றின் காரணமாக இத்துறையில் ஏற்பட்ட விரைவான அபிவிருத்தியை எடுத்துக்காட்டுகிறது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதிகள் தொடர்பான பணவீக்கம் 2016இன் 1.9 சதவீதத்திலிருந்து 2017இல் 3.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.


**அரச நுகர்வுச் செலவினமானது இணைந்த இறுதி நுகர்வுச் செலவினத்தையும் அரசாங்கத்தின் தனிப்பட்டவர் இறுதி நுகர்வுச் செலவினத்தையும் உள்ளடக்கியிருந்ததுடன் அரசாங்கத்தின் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கிடையிலும் முன்னைய ஆண்டின் மெதுவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் இது உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தது.** பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, பொதுமக்கள் பணிகள், பொருளாதார அலுவல்கள் மற்றும் பொதுமக்கள் ஒழுங்குகள் மற்றும் பாதுகாப்பு போன்ற பணிகள் மீதான அரசாங்கத்தின் செலவினத்தினை உள்ளடக்கிய இணைந்த இறுதி நுகர்வுச் செலவினம் 2017இல் அரசிற்கான நுகர்வுச் செலவினத்தில் 68.6 சதவீதத்திற்கு வகைகூறியது. இதன்படி, இணைந்த இறுதி நுகர்வுச் செலவினம் 2016இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 12.9 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தது. வளர்ச்சியில் ஏற்பட்ட இவ்விரைவுத்தன்மைக்கு 2016இன் 6.1 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கெதிராக 2017இல் 43.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்த பொதுமக்கள் பணிகள் மீதான அதிகரித்த அரச செலவினமே முக்கிய காரணமாகும். அதேவேளை, நலம் மற்றும் கல்விப் பணிகள் மீதான அரச செலவினத்தை உள்ளடக்கிய அரசாங்கத்தின் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினம் 2016இன் 2.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 8.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

## முதலீடு

**முதலீட்டுச் செலவினம் 2016இன் 22.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் மெதுவான வேகமொன்றில் 16.6 சதவீதத்தினால் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது.** முதலீட்டுச் செலவினத்தில் மிகப் பெரும் வகையாக விளங்கும் கட்டடவாக்க நடவடிக்கைகள் மீதான முதலீடு நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இல் அவதானிக்கப்பட்ட 18.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மெதுவான வீதமொன்றில் 2017இல் 11.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது கட்டுமான மூலப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வளர்ச்சியிலும் 2017இல் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடனிலும் பிரதிபலிக்கப்பட்டது. இது 2016 உடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகமொன்றில் காணப்பட்டது. அதேவேளை, அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும் பொறுப்பேற்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், பாரியளவு வதிவிடங்கள் மற்றும் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் போன்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், கட்டடவாக்கச் செலவினத்தின் விரிவாக்கத்திற்குப் பங்களித்தன. மேலும், முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் ஆயுத முறைமைகள், போக்குவரத்துக் கருவிகள், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பச் சாதனங்கள் என்பன புலமைச்சொத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் வளர்ச்சியுடன் சேர்ந்து கொண்டமையின் மூலம் முதலீட்டுச் செலவினம் மேலும் அதிகரித்தது. மேலும், பயிரிடப்பட்ட உயிரினவியல் மூலவளங்களைக் கொண்ட பகுதிகளில் செய்யப்பட்ட முதலீடுகளும் முதலீட்டு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களித்தன. மேலும், 2017இல் பெறுமதிகளின் விற்பனைகளைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களிலான மாற்றங்களில் 2016இன் 64.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 36.7 சதவீதம் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டமைக்கு முதலீட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு உதவியாக அமைந்தது.

**முதலீட்டுச் சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் 2016இன் ஐ.அ.டொலர் 801 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 1,710.3 மில்லியனாக[4] விளங்கி 113.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பிரதிபலித்தது.** இக்காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின்

வரைபடம் 2.9
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின்
வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)




*மூலம்:* இலங்கை முதலீட்டுச் சபை

உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக ஐ.அ.டொலர் 1,043.5 மில்லியன் கொண்ட உயர்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் விளங்கியதுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான பெறுகைகளை உள்ளடக்கிய துறைமுக கொள்கலன் மேடைகள், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி என்பனவற்றின் பேரில் ஏற்பட்ட 207.4 சதவீதத்திலான வளர்ச்சியை பதிவுசெய்தது. தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 40.3 சதவீதம் (ஐ.அ.டொலர் 347.6 மில்லியன்) கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டினை விட 50.0 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 317.8 மில்லியன்) அதிகரித்தது. அதேவேளை, வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்கட்டமைப்பு, தயாரிப்பு மற்றும் பணிகளுக்கான உட்பாய்ச்சல் 2017இல் நாட்டிற்கான மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முறையே 61.0 சதவீதத்திற்கும் 20.3 சதவீதத்திற்கும் 18.6 சதவீதத்திற்கும் வகைகூறின.

**முதலீட்டுச் சபையின் பிரிவுகள் 16 மற்றும் 17இன் கீழ் 2017இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடுகள் ரூ.684.3 பில்லியனாக மதிப்பிடப்பட்டது.** உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, புடைவைகள் மற்றும் அணியும் ஆடைகள் மற்றும் தோல் துறைகளில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான மதிப்பிடப்பட்ட முதலீட்டு உட்பாய்ச்சல்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. எனினும், பணிகள் இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு, உருவமைக்கப்பட்ட உலோகங்கள், பொறிகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள், உலோகமல்லா மற்றும் கனிப்பொருள் உற்பத்திகளைக் கொண்ட துறைகளுக்கான ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மூலதனப் பெறுமதி 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. பிரிவு 17இன் கீழ் செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி ரூ.488.8 பில்லியனுக்கு சுருக்கமடைந்ததுடன் இது 2016 உடன் ஒப்பிடுகையில் 35.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றாகவும் காணப்பட்டது. முதலீட்டுச் சபைச்

4 வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் எண்தொகைகள், முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளிட்ட பெறுகைகளை உள்ளடக்கியிருந்ததுடன் வெளிநாட்டு நேர முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் பின்னர் முதலீட்டுச் சபையல்லாக் கம்பனிகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதன் காரணமாக அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடக்கூடும்.

2

### அட்டவணை 2.12
### இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2016 (அ) | | | 2017 (ஆ) | | | | |
| | 2016 (அ) | 2017 (ஆ) | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | 2016 (அ) | 2017 (ஆ) |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 218 | 170 | 1,012,419 | 352,868 | 1,365,287 | 457,147 | 227,132 | 684,278 | 29,678 | 31,658 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 202 | 137 | 1,010,747 | 352,796 | 1,363,543 | 452,989 | 226,386 | 679,375 | 29,250 | 29,632 |
| பிரிவு 16இன் கீழ் | 16 | 33 | 1,672 | 72 | 1,744 | 4,158 | 746 | 4,903 | 428 | 2,026 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 185 | 100 | 528,587 | 229,393 | 757,979 | 307,964 | 180,813 | 488,776 | 27,840 | 23,569 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,929 | 1,908 | 1,345,715 | 834,098 | 2,179,813 | 1,601,805 | 969,609 | 2,571,413 | வி.கி | வி.கி |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,718 | 2,731 | 475,773 | 4,212,961 | 4,688,735 | 492,734 | 4,262,672 | 4,755,406 | 402,709 | 408,536 |
| பிரிவு 17இன் கீழ் (இ) (ஈ) | 1,989 | 2,046 | 440,435 | 4,202,102 | 4,642,537 | 456,773 | 4,252,105 | 4,708,878 | 365,555 | 373,671 |
| பிரிவு 16இன் கீழ் (ஈ) | 729 | 685 | 35,338 | 10,859 | 46,198 | 35,961 | 10,567 | 46,528 | 37,157 | 34,865 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 2,436 | 2,514 | - | - | 204,975 | - | - | 205,231 | 315,681 | 311,001 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் மற்றும் வர்த்தக சபை

குறிப்பு :முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்க மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

சட்டத்தின் 16 மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடுகள் 2017இன் இறுதியில் ரூ.4,755.4 பில்லியனாக அமைந்தன. 2017 இறுதியில் முதலீட்டுச் சபையின் தேறல் செய்யப்பட்ட ஒன்றுசேர்ந்த முதலீடு ரூ.2,571.4 பில்லியனாகக் காணப்பட்டது.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பொருளாதாரத்தின் கிடைக்கத்தக்க மூலவளங்கள் 2016இன் 8.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 12.0 சதவீதத்தினால் தொடர்ந்தும் விரிவடைந்து நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.17,162.0 பில்லியனாக விளங்கியது.** இது தொடர்பில், உள்நாட்டு மூலவளங்களும் வெளிநாட்டு மூலவளங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் நடைமுறைச் சந்தை விலைகளில் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தன. இவ்வாண்டுப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் சுருக்கமடைந்தமையினால் உள்நாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய தூண்டுதலாக விளங்கியது. மேலும், நடைமுறைச் சந்தை விலைகளில் உள்நாட்டு மூலவளங்களின் விரிவாக்கம் இவ்வாண்டுப்பகுதியில் மொ.உ.உற்பத்தி சுருக்கியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு பகுதியளவில் அதிகரித்த விலை மட்டத்திற்கு பங்களிப்புச் செய்தது. வெளிநாட்டு மூலவளங்களின் கீழ் நடைமுறைச் சந்தை விலைகளில் இறக்குமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வீதத்தில் 2017இல் வளர்ச்சியடைந்ததுடன் இதற்கு குறிப்பாக, உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளையும் நீர்மின்வலு உருவாக்கத்தினையும் குறைவடையச் செய்த நாட்டில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகளின் காரணமாக உணவு மற்றும் குடிபானம், எரிபொருள் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே பகுதியளவிற்குக் காரணமாக அமைந்தது. மேலும், உள்நாட்டு நாணயத்தின் மிதமடைந்த தேய்வும் இவ்வாண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் இறக்குமதிகளின் ரூபாய் பெறுமதி அதிகரிப்பதற்குப் பங்களித்தது. மேலும், மூலவளங்களின் கிடைப்பனவு நிலையான விலைகளில் அதிகரித்து 2016இன் 5.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 6.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தமைக்கு நிலையான விலைகளில் உள்நாட்டு மூலவளங்களின் மெதுவான

### அட்டவணை 2.13
### நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(இ)

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 |
| அ. மூலவளங்கள் | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 77.7 | 77.4 | 8.7 | 11.6 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 22.3 | 22.6 | 9.2 | 13.4 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 8.8 | 12.0 |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 56.2 | 54.7 | 3.1 | 9.0 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 20.7 | 20.4 | 12.8 | 10.3 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | 6.5 | 7.9 | 64.8 | 36.7 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 16.6 | 17.0 | 10.4 | 14.7 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 8.8 | 12.0 |


(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

போக்கொன்று காணப்பட்டமைக்கிடையிலும் நிலையான விலைகளில் வெளிநாட்டு மூலவளங்களின் கணிசமான வளர்ச்சியினால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டது.

**பொருளாதாரத்தின் கிடைக்கத்தக்க மூலவளங்கள் இவ்வாண்டுப்பகுதியில் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன.** மொத்த மூலவளங்களில் நுகர்வு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு நடைமுறைச் சந்தை விலைகளில் 2016இன் 56.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 54.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு 2016இன் 27.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 28.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதன்படி, மொத்த மூலவளப் பயன்பாட்டில் பெறுமானங்களின் விற்பனை கழித்த கையேற்புக்கள் மற்றும் பொருட்பட்டியலில் ஏற்பட்ட மாற்றங்களின் பங்கு 2016இன் 6.5 சதவீதத்திலிருந்து 2017இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் மொத்த நிலையான மூலதன உருவாக்கம் 2016இன் 20.7 சதவீதத்திலிருந்து 2017இல் 20.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மூலவளங்களின் மொத்தப் பயன்பாட்டின் சதவீதமாக ஏற்றுமதிகள் 2016இன் 16.6 சதவீதத்திலிருந்து 2017இல் 17.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, நிலையான விலைகளில் மூலவளப் பயன்பாடு அதிகரித்தமைக்கு நிலையான மூலதனவாக்கம் மற்றும் பெறுமானங்களின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் பொருட்பட்டியலில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இவ்வாண்டின் ஏற்றுமதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் முக்கிய உதவியாக அமைந்தன.

வரைபடம் 2.10
2017 இல் பொருளாதாரம்
(நடைமுறை சந்தை விலைகளில்) (அ)




(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## சேமிப்புக்கள்

**2017ஆம் ஆண்டுப்பகுதியில் பொருளாதாரத்தின் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2016இன் 27.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 18.4 சதவீதம் கொண்ட மெதுவான வீதத்தில் ரூ.3,896.0 பில்லியனுக்கு அதிகரித்தது.** இது தொடர்பாக இவ்வாண்டுப்பகுதியில் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வினை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தின் அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் போதுமானதாக இல்லாமையினால் அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்கள் அதிகரித்தன. அதேவேளை, தனியார் துறைச் சேமிப்புக்கள் ஆரோக்கியமான வீதமொன்றில் வளர்ச்சியடைந்து உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கு சாதகமான முறையில் பங்களித்தது. இதன் விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2016இன் 27.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 29.3 சதவீதத்திற்கு அதிகரித்தன.

**2017இல் தேசிய சேமிப்புக்கள் ரூ.4,502.7 பில்லியனுக்கு அதிகரித்து 2016இன் 23.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15.2 சதவீதம் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான வளர்ச்சி வீதமொன்றினைப் பதிவுசெய்தது.** இம்மெதுவான போக்கிற்கு உள்நாட்டுச் சேமிப்புக்களில் அவதானிக்கப்பட்ட மெதுவான வளர்ச்சியும் இவ்வாண்டுப்பகுதியில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட சுருக்கத்துடன் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்களும் சேர்ந்து கொண்டமையினதும் இணைந்த தாக்கமே முக்கிய காரணமாக அமைந்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2016இன் 32.8 சதவீதத்திலிருந்து 2017இல் 33.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்தளவு வளர்ச்சியின் காரணமாக தேசிய சேமிப்பு முதலீட்டு இடைவெளி 2016இன் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2017இல் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

## 2.6 வருமானம்

**தேசிய கணக்குகளின் வருமான அணுகுமுறை, பொருளாதாரத்தில் வருமானத்தை உருவாக்கும் பிரிக்கப்பட்ட கூறுகளை அதாவது ஊழியர்களின் இழப்பீடு, மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்திகள் மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் போன்றவற்றை விளக்குகிறது.** தொழிலாளர் தவிர்ந்த உற்பத்திக்

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ) (இ)

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ.இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 | 2016 (ஆ) | 2017 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 11,906,752 | 13,289,466 | 8.7 | 11.6 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 8,616,150 | 9,393,491 | 3.1 | 9.0 | 72.4 | 70.7 |
| தனியார் | 7,601,405 | 8,262,817 | 3.1 | 8.7 | 63.8 | 62.2 |
| அரசு | 1,014,746 | 1,130,674 | 3.0 | 11.4 | 8.5 | 8.5 |
| 3. முதலீடுகள் | 4,164,890 | 4,854,187 | 22.0 | 16.6 | 35.0 | 36.5 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 3,290,601 | 3,895,975 | 27.1 | 18.4 | 27.6 | 29.3 |
| தனியார் | 3,362,321 | 3,992,138 | 18.5 | 18.7 | 28.2 | 30.0 |
| அரசு | -71,719 | -96,162 | 70.9 | -34.1 | -0.6 | -0.7 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -874,289 | -958,212 | -6.0 | -9.6 | -7.3 | -7.2 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் (ஈ) | -321,260 | -356,282 | -16.9 | -10.9 | -2.7 | -2.7 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 939,782 | 962,957 (ஈ) | 11.6 | 2.5 | 7.9 | 7.2 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 3,909,124 | 4,502,650 | 23.8 | 15.2 | 32.8 | 33.9 |


(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பதில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

காரணிகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானமான மொத்த தொழிற்பாட்டு மிகை 2016இன் 7.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் நடைமுறைச் சந்தை விலைகள் 11.9 சதவீதத்தினால் அதிகரித்து மொத்தப் பெறுமதிகூட்டலில் 69.1 சதவீதத்திற்கு வகைகூறி முக்கிய வருமான மூலமாக இருந்து வருகிறது. இதற்கு 2016இன் 6.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த மொத்த தொழிற்பாட்டு மிகையின் முக்கிய வருமான வகையொன்றான தேறிய தொழிற்பாட்டு மிகையில் ஏற்பட்ட விரிவாக்கமே முக்கிய காரணமாகும். மேலும், மொத்த தொழிற்பாட்டு மிகையில் மற்றைய இரண்டு துணைக் கூறுகளான நிலையான மூலதனத்தின் நுகர்வு மற்றும் கலப்பு வருமானம் என்பன 2016இன் முறையே 10.5 சதவீதம் மற்றும் 6.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் முறையே 16.6 சதவீதத்தினாலும் 9.3 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, உற்பத்திச் செயன்முறைக்கு அவர்களின் தொழிலாளர்களை உள்ளீடு செய்தவற்கான வருமானத்தில் தனிப்பட்டவர்களுக்குக் கிடைக்கின்ற வருமானமாக விளங்கும் ஊழியர் இழப்பீடு பொருளாதாரத்தில் மொத்தப் பெறுமதிகூட்டலில் 30.6 சதவீதத்திற்கு வகைகூறி 2016இன் 7.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், உற்பத்திகளின் மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகள் 2016இன் 10.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 7.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்து பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டல் 0.3 சதவீதத்திற்கு வகைகூறியது.

**நிறுவன ரீதியான துறை வகைப்படுத்தலின்படி வருமானத்திற்கான உயர்ந்த பங்களிப்பு வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் என்பனவற்றினால் உருவாக்கப்பட்டதுடன் மொத்த பெறுமதிகூட்டலில் 50.2 சதவீதத்திற்கு வகைகூறி 2017இல் நடைமுறைச் சந்தை விலைகளில் 9.5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** மேலும், மொத்த பெறுமதிகூட்டலில் 34.9 சதவீதத்திற்கு வகைகூறும் இரண்டாவது பெரும் பங்களிப்பாளரான நிதியியல்லா கூட்டுத்தாபனத் துறை 2017இல் 10.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மொத்தத் தொழிற்பாட்டு மிகையைப் பொறுத்த வரையில் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை மொத்தத் தொழிற்பாட்டு மிகையில் 57.8 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2017இல் நடைமுறைச் சந்தை விலைகளில் 10.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதனைத் தொடர்ந்து 35.3 சதவீதத்திற்கு வகைகூறிய நிதியல்லாக் கூட்டுத்தாபனத் துறை 2017இல் நடைமுறைச் சந்தை விலைகளில் 12.7 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. அதேவேளை, ஊழியர் இழப்பீட்டின் 33.5 சதவீதத்திற்கு வகைகூறிய வீட்டலகுகள்

வரைபடம் 2.11
2017 இல் நடைமுறை சந்தை விலைகளில் நிறுவன துறைகளின் படி வருமான கூறுகளின் பங்குச் சதவீதம் (அ)




(அ) மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 2.15
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ) (இ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | | | | | 2017 | | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் |
| **ஊழியர்களின் நட்டஈடு** | **33.5** | **4.8** | **27.8** | **33.8** | **100.0** | **33.4** | **6.3** | **26.9** | **33.5** | **100.0** |
| **மொத்த தொழிற்பாட்டு மிகை** | **35.1** | **4.6** | **1.6** | **58.7** | **100.0** | **35.3** | **4.7** | **2.1** | **57.8** | **100.0** |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 38.2 | 5.6 | 0.7 | 55.4 | 100.0 | 38.7 | 5.7 | 0.7 | 54.9 | 100.0 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 45.2 | 2.0 | 9.3 | 43.5 | 100.0 | 43.0 | 2.3 | 13.5 | 41.2 | 100.0 |
| **உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்** | **91.0** | **8.7** | **-** | **0.3** | **100.0** | **91.0** | **8.7** | **-** | **0.3** | **100.0** |
| **அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு** | **34.8** | **4.7** | **9.9** | **50.6** | **100.0** | **34.9** | **5.2** | **9.7** | **50.2** | **100.0** |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை நடைமுறைச் சந்தை விலைகளில் 2017இல் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் மத்திய அரச துறைகள் 2017இல் ஊழியர் இழப்பீட்டில் முறையே 33.4 சதவீதத்திற்கும் 26.9 சதவீதத்திற்கும் வகைகூறி இவ்வாண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் முறையே 7.0 சதவீதம் மற்றும் 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த ஏனைய வரிகளுக்கான முக்கிய பங்களிப்பாளராக இருந்து வருகின்ற நிதியியல்லாக் கூட்டுத்தாபனம் 91.0 சதவீதத்திற்கு வகைகூறி 2017இல் 7.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. மேலும், வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த ஏனைய வரிகளில் 0.3 சதவீதத்திற்கும் மாத்திரம் வகைகூறிய போதும் கூட மொத்தப் பெறுமதிகூட்டலில் 50.2 சதவீதத்திற்கு வகைகூறியதை சுட்டிக்காட்டுவது முக்கியமானதாகும்.